
புள்ளமங்கை



பதிப்பாசிரியர்

முனைவர் சீ.வசந்தி, எம். ஏ., எம்.பில்.,பிஎச்.டி.,

ஆணையர் பொறுப்பு

ஆசிரியர்

கோ. சசிகலா

புள்ளமங்கை

பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில் - ஓர் ஆய்வு

புள்ளமங்கை

பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில் - ஓர் ஆய்வு

பதிப்பாசிரியர்

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்டி.,

ஆணையர் பொறுப்பு

ஆசிரியர்

கோ. சசிகலா

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை-600 008

திருவள்ளுவர் ஆண்டு 2043

BIBLIOGRAPHICAL DATA

TITLE	:	**Pullamangai**
Editor	:	**Dr. S. Vasanthi,** M.A., M.Phil., P.hd. Commissioner Incharge
Author	:	**G. Sasikala**
Copy Right	:	Tamilnadu State Dept. of Archaeology
Subject	:	History
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	257
Year	:	2012
No. of Copies	:	500
Type Point	:	11
No. of Pages	:	184
Paper Used	:	80Gsm Maplitho
Printer	:	The Chennai Printers, 6, Pycrofts Road, (Bharathi Salai) Triplicane, Chennai-5.
Publisher	:	State Dept. of Archaeology, Tamil Valarchi Valagam, Halls Road, Egmore, Chennai - 600 008.
Price	:	Rs. 85.00

உள்ளடக்கம்

பதிப்புரை

முன்னுரை i-iv

1. ஊர் வரலாறு 1

2. கோயில் அமைப்பு 10

3. தேவாரப் புள்ளமங்கை 17

4. அரசியல் பின்னணி 24

5. புள்ளமங்கை - ஒரு பிரமதேயம் 49

6. சோழர் கால சமுதாயம் - ஒரு பார்வை 56

7. கட்டடக்கலை 69

8. சிற்பக்கலை 90

9. கல்வெட்டுச் செய்திகள் 139

10. முடிவுரை 157

11. பிற்சேர்க்கை 160

12. துணைநூற்பட்டியல் 164

13. நிழற்படங்கள் 167

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்பில்., பி.எச்டி.
ஆணையர் பொறுப்பு

தொல்லியல் துறை
தமிழ்வளர்ச்சி வளாகம்
ஆல்சு சாலை
சென்னை - 600 008
நாள்: 17-08 -2012

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, தமிழகத்திலுள்ள கல்வெட்டுகள், தொல்லியல், அகழாய்வு, தமிழகக் கோயில்களின் கட்டடம், கலை, சிற்பம், ஓவியம், செப்புத் திருமேனிகள் ஆகியவற்றைப் பற்றி விரிவாக மாணவர்கள் கற்கவேண்டி 1973-74-ஆம் ஆண்டு 'கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம்' ஒன்றினை நிறுவியது. இக்கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஆண்டுதோறும் முதுகலைப் பட்டம் பெற்ற எட்டு மாணவர்களுக்கு 'கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்' என்னும் முதுநிலைப் பட்டயம் ஒன்றினை வழங்குகிறது. இதுவரை இப்பயிற்சி நிறுவனத்தில் 208 மாணவர்கள் பயின்றுள்ளனர்.

இம்மாணவர்களது பயிற்சி காலத்தில் ஒரு குறிப்பிட்ட கோயிலைத் தேர்வு செய்து அவ்வூர் மற்றும் அவ்வூர் கோயில்களைப் பற்றி விரிவாக ஆய்வு செய்து ஆய்வேடு ஒன்றினைச் சமர்ப்பிக்கின்றனர். இவ்வாய்வேடுகளில் இதுவரை 24 ஆய்வேடுகள் நூல் வடிவம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் 2009-2010-ஆம் ஆண்டு பயின்ற செல்வி கோ. சசிகலா அவர்கள் எழுதிய புள்ளமங்கை என்னும் ஆய்வேடு தற்போது 25-வது நூலாக வெளிவருகிறது. இந்நூல் புள்ளமங்கை பிரம்மபுரீசுவரர் கோயில் கட்டட, கலை, சிற்பம் ஆகியவை பற்றியும் அக்கோயில் கல்வெட்டுகள் மூலம் அக்கால அரசியல், சமுதாய பொருளாதாரச் செய்திகளையும் விரிவாக விளக்குகிறது.

புள்ளமங்கை வரலாற்று நூல் பதிப்பிக்கும் பணியினை மேற்கொண்ட இத்துறை உதவி கண்காணிப்பு கல்வெட்டாய்வாளர் திரு. பெ. கௌதமபுத்திரன், கல்வெட்டாய்வாளர் திரு. இரா. சிவானந்தம் ஆகியோருக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள்.

இந்நூலினை நல்ல முறையில் கணினியில் தட்டச்சு செய்து அட்டைப்படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர் திருமதி தே. சத்தியவதி மற்றும் அச்சுப்பிழைத்திருத்துபவர் திருமதி. கோ. கீதா ஆகியோருக்கும் எனது பாராட்டுகள்.

இந்த வரலாற்று நூலினை வெளிக்கொணர 2012-2013-ஆம் ஆண்டு பகுதி திட்டத்தின் கீழ் நிதியுதவி நல்கி சிறப்பிக்கும் தமிழ்நாடு அரசுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வரலாற்று மாணவர்களுக்கும், தொல்லியல் மாணவர்களுக்கும், தொல்லியல் ஆர்வலர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

தே. பசுபதி 17.8.12

முன்னுரை

கோயில் வாழ்வியலின் கருவறை . . .

கோயில்கள் நம் நாட்டில் ஆதிஅந்தமற்ற இறைத் தத்துவம் போல என்று தொடங்கியது என்றறிய அரியனவாக உள. கோயில் அரசனது அரண்மனையைக் குறிப்பதாக தொடக்கத்தில் கருதப்பட்டது. பிற்காலத்தில் தேவ கோட்டங்களைக் குறிப்பதாகவும் வழங்கலாயிற்று. இரண்டும் கலந்த நிலையில் கோயில்கள் வழக்கிலிருந்ததை அதாவது அரசனின் நிர்வாகம், கட்டளை, இறைப்பணிகளை நிறைவேற்றும் பணித்தலமாகவும், இறையுணர்வு மேலோங்கிய நிலையில் கலைக்கும், சமயத்துக்கும் இருப்பிடமாகவும் அவை இருந்ததையும் கல்வெட்டுகள் நமக்குக் காட்டி நிற்கின்றன.

தென்னிந்திய மக்களின் குறிப்பாக தமிழக மக்களின் வாழ்வில் கோயில் இரண்டற கலந்த உணர்வாகும். மனித வாழ்வின் தொடக்கமும், முடிவும், அதன் நிலையும் பல நம்பிக்கைகளையும், சடங்குகளையும் கொண்டுள்ளது. இவையனைத்தும் நிறைவேற்றும் பொதுமைக் களமாக கோயில்கள் பண்டிலிருந்து திகழ்ந்து வருகின்றன.

இறையுணர்வு, சமயநம்பிக்கை, வாழ்வின் தத்துவம் ஆகியனவற்றை தாங்குதளமாகக் கொண்டு விளங்கும் கோயில்கள் அவை மக்களிடையே பெற்றிருந்த முக்கியத் துவம் கருதியே கலை, பண்பாட்டுக் கருவூலங்களாகவும் ஆற்றல் வாய்ந்த பேரரசர்களால் மாற்றப்பட்டன. தம் ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்தி வென்ற நிலத்தில் தம் ஆதிக்கத்தை ஏற்குமாறு அம்மக்களின் மனதை வெல்ல ஒரு கோயிலை கட்டுவது மரபு. அங்ஙனம் கட்டப்பட்ட கோயில்கள் படைப் பாசறையாகவும் திகழ்ந்திருக்கலாம். ஒவ்வொரு கோயிலும் அது திகழும் ஊரின் அரசு அலுவலகமாக விளங்கின. அரசு ஆணை, ஊர் பிரிவு, நாட்டு பிரிவு, நிலவுடைமை, இறையிலி முதலிய செய்திகளை தாங்கி நிற்கும் கல்வெட்டுகள் என்னும் வரலாற்று ஆவணங்கள் மிகுந்துள்ள இடமே கோயிலாகும்.

"ஒரு தலத்திலுள்ள மக்களின் சமய வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்ற உயிர்த்துடிப்புள்ள இடமாகக் கோயில் விளங்கியது மட்டுமன்றி, அது அவ்வூர் மக்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம் ஆகிய துறைகளைச் சேர்ந்த பல்வேறு இயக்கங்களிலும் பங்கு கொண்ட சமூக நிறுவனமாக விளங்கியது. கோயில் தானே நிலப்பிரபு வாகவும், முதலாளியாகவும் (பலருக்கு வேலைவாய்ப்பு கொடுத்ததால்) இருந்தது. கோயிற் பண்டாரம் (களஞ்சியம்) வங்கி போல அமைந்து வைப்புப் பணங்களைப் பெற்றும், கடனுதவி அளித்தும் மக்களுக்கு உதவியது. கிராமக் கைத்தொழில்களின் பெருக்கத்திற்கு உதவியது. அரசாங்கத் திற்குச் செலுத்தப்பட வேண்டிய வரிகள் கோயில்களால் அளவிடப்பட்டன. தனிப்பட்ட வர்கள் தமது நிலங்களுக்குச் செலுத்தவேண்டிய வரிகளும் (மன்னரால்) கோயிலுக்குக் கொடுக்கப்பட்டன. இவற்றைவிடக் கோயில்களும் மக்களிடமிருந்து வழக்கமான கடமைப் பணத்தையும் பெற்றன. ஊரிலேயுள்ள பெரிய நிலவுடைமை நிறுவனம் என்ற முறையில் கோயில், ஊரின் விவசாயத்தில் ஊக்கங் காட்டியது. வயல்களிற் பயிர் செய்விப்பதோடமையாது புதிய நிலங்களையும் உழவுக்குட்படுத்தியது. பாழ்பட்ட நிலங்களுக்குப் புனர்வாழ்வு அளித்தது. கோயிற் பண்டாரமானது வங்கி போலக் கடமையாற்றியபடியால், தனிப்பட்ட நிறுவனங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும், வட்டியுடனும், வட்டியின்றியும் உசிதம்போல உதவியது. விவசாயிகள் தமது தொழிற்றேவைகளுக்காகக் கடன் பெற்றனர். தமது பெண்களுக்குச் சீதனம் கொடுப்பதற்குக் கூடச் சிலர் கோயிலிலிருந்து கடன்பெற்றனர். நாட்டின் பொருளாதார வாழ்வில் கோயில் நடுநாயகமாக வீற்றிருந்தது" என்று வரலாற்றறிஞர் டி.வி. மகாலிங்கம் கோயில்களின் பல்வேறு செயல்களின் பரிமாணங்களைப் பற்றிக் கூறுகிறார். அறிஞர்தம் கூற்றிலிருந்து ஒரு கோயில் ஆய்வு என்பது அந்நிலத்தின் சமயம், பண்பாடு, கலையுணர்வு, அரசியல், சமூகநிலை, பொருளாதாரநிலை ஆகியவற்றையும் இணைத்து ஆயும் ஒரு வரலாற்று நெறியாக விளங்குவதை உணரலாம்.

திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும் திருவெண்ணீறு அணியாத
திருவில் ஊரும்

பருக்கோடிப் பத்திமையாய் பாடா ஊரும் பாங்கினொடு பலதளிகள்
இல்லா ஊரும்

விருப்போரு வெண்சங்கம் ஊதா ஊரும் விதானமும் வெண்கொடியும்
இல்லா ஊரும்

அருப்போடு மலர் பறித்திட்டு உண்ணா ஊரும் அவையெல்லாம் ஊரல்ல
அடவி நாடே.

மேற்கண்ட தேவாரப்பாடல் கோயில்கள் பண்டு பெற்றிருந்த உயர்நிலையை சுட்டுவனவாகும். "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதும் தமிழக மக்களின் வழக்கிலுள்ள மொழியாகும்.

சங்ககாலத்தில் மரத்தாலும், செங்கற்களாலும் கட்டப் பட்ட கோயில்கள் இருந்தனவென்பதை, "இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென மணிப்புறா துறந்த மரஞ்சேர் மாடத்து" என்னும் சங்க இலக்கியப் பாடல்கள் வரிகள் நமக்கு உணர்த்துகின்றன. அவை விரைவில் அழிந்து போனதையும் இதனால் அறியலாம். 'சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம்' என்ற வரியால் கோயில்கள் மண்டளிகளாக இருந்ததுவும் தெளிபு.

கோயில்கள் ஏன்? எனின், அகஞ்சார்ந்த ஆன்ம அறிவை, கலையோடும், உணர்வோடும், சடங்குகள் வழியே வெளிப்படுத்தும் ஊடகமாய் புறஞ்சார்ந்து நிற்கும் காலப்பெட்டகமாம் அவையே நம் மரபின் ஆதாரங்கள்; வரலாற்று ஆவணங்கள்; நம்மை முன்னும் பின்னும் காட்டி நிற்கும் நிலையான நம்பிக்கையின் பருப்பொருட்கள். அறநெறிகளின் ஆணிவேர்கள் இங்கிருந்தே தொடங்குகின்றன. வழிபாடும், சடங்குகளும், நம்பிக்கைகளும் மட்டுமல்லாது புறப்பொருளாய் நின்று மக்கள் வாழ்வின் பயணநிலைப்பாடுகளை தொகுத்து நிற்கும் மெய்ப்பாட்டு தத்துவ உருவே கோயிலாகும்.

இதனை நன்குணர்ந்த நம் பண்டைய அரசர்கள் தங்கள் அரண்மனைகளை விட, உறுதியாகவும், நுணுக்கமுடனும் கோயில்களை அமைத்தனர். வாழ்வியல் நெறிமுறைகளை

உணர்த்தி நிற்கும் கோயில்கள் சமூகத்தின் உயிர்நாடியாய் அன்று விளங்கிய காரணத்தால் அரசர்கள் மிகுசிரத்தை யுடனும், கலையார்வத்துடனும். இறையுணர்வுடனும் கோயில் களை அமைத்தனர். அதனால் தான் பல அரண்மனைகள் சுவடழிந்த நிலையில், ஆனால் கோயில்கள் இன்றும் நம் வரலாற்றை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. பண்டு அரண்மனைகளை வடிவமைத்த சிற்ப சாத்திரம் நன்கறிந்த நூலறிவாளர்களே கோயில்களில் சிற்பங்களையும், கலைவடிவங்களையும் அமைத்தனர்.

தென்னிந்தியாவில் பல்லவ, பாண்டிய மற்றும் சோழப் பேரரசுகள் கி.பி.6ம் நூற்றாண்டிலிருந்து கோயிற் கலைப் பணிகளைத் தொடங்கின என்று கூறலாம். வல்லமை மிகுந்த பேரரசுகள் அதிக பொருட்செல்வத்தினால் ஈடுபாட்டோடு எடுப்பித்த கோயில்கள் இன்றும் அதன் சிற்பக்கலை, கட்டடக் கலை, ஓவியம், கல்வெட்டின் மொழிச் சிறப்பு ஆகியவற்றால் தன்னிகரற்று எழிலோடு விளங்குகின்றன. கோயில்களின் பராமரிப்பு இன்று இன்றியமையாததாக உள்ளது. பராமரிப்புப் பணிகளோடு, அவற்றை ஆவணப்படுத்துவதே கோயில் ஆய்வின் நோக்கமாகும்.

கோயில்கள் ஏன்? கோயில்களில் ஆய்வுகளின் தேவை என்ன? போன்ற கேள்விகளுக்கு விடை பகர்வனவாக மேற்கண்ட சொற்றொடர்கள் அமைந்தன. கோயில்களை நோக்கி நாம் ஆய்விற்காக அடியெடுத்து வைக்கும் வேளையில் அதன் பின்புலமாக முன்பிருந்த அரசியல் பின்னணி, சமூக, பொருளாதார நிலை ஆகியவற்றினையும் ஆயும் அரும்பணியாக அமைகிறது.

இத்தகு நோக்கில் முற்கால சோழர்கலைப்பாணியில் அமைந்த முதலாம் பராந்தகச் சோழன் கட்டிய தஞ்சைக்கு அருகிலுள்ள புள்ளமங்கை ஆலந்துறையார் திருக்கோயில் ஆய்விற்காக எடுக்கப்பட்டுள்ளது. கி.பி. 9-ம் நூற்றாண்டில் விசயாலயச் சோழன் தொடங்கிய சோழப்பேரரசின் உன்னதமான மற்றும் வலிய போராட்டங்கள் நிறைந்த அவன் பேரன் முதலாம் பராந்தகன் காலத்தில் கட்டப்பட்ட இத்திருக்கோயிலின் வரலாறு, கலை, சமூகச் சூழல்களோடு கூடிய கல்வெட்டுகள் விரித்து நோக்க, அதன் பின்வரும் இயல்களின் வழியே ஆராயப் புகுவோம்.

1. ஊர வரலாறு

அமைவிடம்

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம் பசுபதி கோயில் என்ற கிராமத்திற்கு தெற்கில் புள்ளமங்கை அமைந்துள்ளது. தஞ்சையிலிருந்து கும்பகோணம் செல்லும் வழியில் அய்யம்பேட்டைக்கு அருகிலுள்ள இதன் பண்டையப் பெயர் திருவாலந்துறை என்பதாகும். தஞ்சாவூரிலிருந்து 14.5 கி.மீ தொலைவில் பசுபதி கோயில் இரயில் நிலையம் அருகில் இவ்வூர் அமைந்துள்ளது.[1]

இயற்கை எழில் கொஞ்சும் வயல் வெளிகளோடு, அனைத்து சாதியாரும் கலந்துறையும் புள்ளமங்கை ஒரு சிற்றூராக உள்ளது. தஞ்சாவூரிலிருந்து பாபநாசம் செல்லும் நெடுஞ்சாலையில் பசுபதிகோயில் பேருந்து நிறுத்தத்திலிருந்து இடதுபுறம் பிரியும் சாலையின் வழியே வயல்வெளிப் பாதைகளைக் கடந்தால் மக்கள் வாழும் சிறு சிறு குடிசை வீடுகளின் நடுவே இருமுடிச்சோழனின் ஈடு இணையற்ற ஆலந்துறை மகாதேவர் கோயில் காட்சியளிக்கிறது.

இந்தியக் கல்வெட்டுத் துறை 1921-ம் ஆண்டு கல்வெட்டு அறிக்கையில் புள்ளமங்கைக் கல்வெட்டுகளை குறிப்பிடுகிறது. கல்வெட்டு ஆண்டு அறிக்கை எண் 555, 556, 558, 559 முதலாம் பராந்தகன் காலத்தைச் சேர்ந்த 6 கல்வெட்டுகள் தெளிவாகக் கிடைப்பதை உறுதிப்படுத்துகின்றன.[2] தஞ்சை மாவட்டத்தில் உள்ள பராந்தகனின் கோயில்களான புள்ளமங்கை, திருவாவடுதுறை,

திருக்களாவூர், திருச்சென்னம் பூண்டி, திருக்களித்தட்டை ஆகியனவற்றில் புள்ளமங்கை திருக்கோயில் சிறப்பிடத்திற்கு உரியதாகும்.

கல்வெட்டில் தஞ்சாவூர்

தஞ்சையை ஆண்ட முத்தரையர் அரசனான சுவரன்மாறன் எனும் பெரும்பிடுகு முத்தரையன் என்பவன் நியமம் என்ற ஊரில் காளாபிடாரிக்கு எடுப்பித்த கோயில் தூண்களில் உள்ள கல்வெட்டு தஞ்சை முத்தரையர்களின் தலைநகரம் என்பதைக் கூறுவதாக உள்ளது.[3]

முதல் தூணில் கோட்டாற்று இளம்பெருமானார் என்னும் புலவர்,

'நிற்கின்ற தண்பனை தோன்றுந் தஞ்சைத்திறம் பாடி நின்றார்
விற்கின்ற வீரர்கள் ஊர்கின்ற இப்பிணக் குன்றுகள்மேல்
நெற்குன்ற யானை .....'

இப்பாடல் மூலம் யானையின் உயரம் அளவுக்கு நெற்குன்றம் தஞ்சையில் நிறைந்திருந்த செழுமையை உணர முடிகிறது.[4]

பாய்ச்சில் வேள் நம்பன் என்னும் புலவர்,

'குஞ்சிக் கமழ்கண்ணிக் கோமாறன் - தஞ்சைக்கோன்
கோளாளி மொய்ம்பிற் கொடும்பாளூர் காய்ந்தெறிந்தான்'-

என சுவரன்மாறனைக் குறிப்பிடுகிறார்.[5] கொடும்பாளூர் அரசர்க்கு பகைவராக விளங்கிய முத்தரையர்கள் தஞ்சையை ஆண்டவர்களே என்பது பகைவனுக்கு பகைவன் நண்பன் என்பதாக சோழர்கள் முத்தரையர்களை வென்று கொடும்பாளூர் வேளிரோடு நட்புகொண்ட வரலாற்றை இது உறுதிப்படுத்துகிறது.

நான்காவது தூணில் ஆசாரியர் அநிருத்தர் பாடிய பாடல் ஒன்றில்,

'மண்டீது கண்டான்தஞ் சைச்செம் புலநாட்டு வெண்கோடல்
விண்டபோது கொண்டாயர் மலையப் புதுமணல் மீதுசெந்தீத்
தண்டுகண் டாலன்ன கோவங்களுநர்கின்ற தாழ்புறவே'

இப்பாடலின் மூலம் சுவரன்மாறனுடைய தஞ்சைநாடு செம்புலநாடு என்பதையும், அது தாழ்ந்த முல்லை நிலப்பகுதி என்பதையும் அறியமுடிகிறது. காடழித்து நாடாக்கி கோயில் உருவாக்கி நகரம் அமைக்கும் பண்டைய மரபு இங்கு பயின்று வருவது கண்கூடு.

'தஞ்சாபுரீம சௌத சுதாங்கராகாம
ஐக்ராஹ ரந்தும் ரவி வம்ச தீப:
தத: பிரதிஷ்டாப்ய நிசும்ப சூதனீம்
சுராசுரை: அர்ச்சித பாத பங்கஜாம்
சது: சமுத்ராம்பர மேகலாம் புவம்
ரஹாஜ தேவோ தத்பராசந :'

திருவாலாங்காட்டு செப்பேடுகள் காட்டும் மேற்கண்ட பாடல் வரிகளால் சோழர்கள் தஞ்சையை வெற்றி கண்ட பின் நிசும்பசூதனிக்கு கோயில் எடுப்பித்ததைப் பற்றி அறியலாம்.

சங்ககாலத்திலேயே தமிழகத்தில் கூற்றங்கள் எனும் நிலப்பகுப்பு முறை தோன்றியதெனினும், 'தஞ்சாவூர்க் கூற்றம்' எனும் பிரிவு முத்தரையர் காலத்திலோ அல்லது விஜயாலயனது காலத்திலோ தான் ஏற்பட்டிருக்க வேண்டும் எனலாம்.

தஞ்சாவூரின் பழைய பெயர் தஞ்சாக்கூர் என்பதாகும். தஞ்சாவூர் நன்செய் நிறைந்த வளமிக்க பகுதியாகும். நன்செய் என்பதன் மருவலான நஞ்சை என்பதுவும் பின்னாளில் தஞ்சை ஆகியிருக்கலாம். 'தண் செய்' என்பது தஞ்சை என்றும், தண் செய்யூர் என்பது தஞ்சாவூர் என்றும் வழங்கியிருக்கக்கூடும்.[6] குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த ஊர் என்பதே இதன் பொருளாகும். வராக மான்மியம் எனும் புராணம், சமீவனப்பகுதியிலிருந்த தஞ்சாசுரன் என்பவனைத் தஞ்சபுரீஸ்வரர் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஆனந்தவல்லி என்னும் தேவி சம்ஹரித்ததாகவும், அந்த சமீவனமே தஞ்சாசுரன் பெயரால் தஞ்சாபுரியாயிற்று என்று கூறுகின்றன. சோழர் தலைநகரமான இப்பகுதியை மேலத்தஞ்சை என்றும், இந்நாளைய திருவாரூர்

மாவட்டம் நன்னிலம் வட்டத்திலுள்ள தஞ்சாவூர் என்னும் கிராமத்தினை கீழத்தஞ்சை என்றும் கூறுவர்.

இலக்கியத்தில் தஞ்சாவூர்

'தஞ்சைத் தளிக்குளத்தார்' என அப்பர் திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில் குறிப்பிடுகிறார்.[7] கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இப்பாடல் வருவதால் இதற்கு முன்னரே இப்பெயர் வழக்கில் இருந்திருக்க வேண்டும். திருச்சி மேல் குடைவரை செல்லும் வழியில் பாறையின் மீதுள்ள ஒரு கல்வெட்டு 'தஞ்சஹரக' என்று கிரந்த எழுத்தில் உள்ளது. 'தஞ்சையை வென்றவன்' என்ற பொருளில் இது பல்லவமன்னன் முதலாம் மகேந்திரவர்மனைக் குறிக்கிறது. முதல் ஆழ்வார்களில் ஒருவரான பூதத்தாழ்வார் இரண்டாம் திருவந்தாதியில்,

'தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளுந். தண்பொருப்பு வேலை தமருள்ளும்
மாமல்லை கோவல் மதிட்குடந்தையென்பரே
ஏவல்ல எந்தைக்கு இடம்' -பாடல் எண். 70

திருமால்கோயில் கொண்டுள்ள இடங்களை மேற்கண்ட பாடலில் குறிப்பிடும் கி.பி. 8-9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பூதத்தாழ்வார் தஞ்சைக்கு முதலிடம் தருகிறார்.

கி.பி. 8-ஆம் நூற்றாண்டினரான திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழியில் தஞ்சை மதில்கள் சூழ்ந்த தென்றும், மாமணிக்கோயிலை உடைய ஊரென்றும் கீழ்க் காணும் பாடல்களால் வருணிக்கிறார்.

'வம்புலாஞ் சோலை மாமதிள் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி
நம்பிகாள் உய்ய நான்கண்டு கொண்டேன்' -பா.எண்.1.1.6
'தடம்பருகு கருமுகிலைத் தஞ்சைக் கோயில்
தவநெறிக்கோர் பெருநெறியை வையங் காக்கும்
கடும்பரிமேல் கற்கியை நான் கண்டு கொண்டேன்'
-பா.எண்.2.5.3

'தஞ்சை யாளியைப் பொன்பெய ரோன்நெஞ்சம்

அன்றிடந்தவனை .....' *-பா.எண். 7.3.9*

தஞ்சாவூர் சோழர்களின் மூன்றாவது தலைநகரமாகும். உறையூர், பழையாறை இவற்றினையடுத்து கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே விசயாலயச் சோழனின் எழுச்சிக்குப் பின்பே தஞ்சை சோழர்களின் தலைநகரமாயிற்று. 'சோழவளநாடு சோறுடைத்து' என்பர். இங்ஙனம் வளமிக்கப் பகுதியாக சோழ நிலப்பரப்பு விளங்கியமையாலேயே அக்காலத்தில் கலைகள் பலவும் எழுச்சிப் பெற்றன. தஞ்சாவூர், கும்பகோணம் ஆகிய பகுதிகளில் கோயில்கள் அதிக எண்ணிக்கையில் இடம் பெற்றதற்கு அப்பகுதியின் வளமும் ஒரு காரணமெனில் மிகையாகாது. சிற்பக்கலைஞர்களும், கட்டட வல்லுநர்களும் கலைகளில் நாட்டஞ் செலுத்திட, அவர்தம் குடியிருப்புகளும், சூழல்களும் இன்றியமையாதன. இத்தகு இயற்கை வளமிக்க தஞ்சை காவிரியாற்றின் நீர்வளத்தைப் பெறுகின்றது.

கல்வெட்டில் பாபநாசம்

தற்போது தஞ்சாவூர் மாவட்டத்தில் பாபநாசம் வட்டம் அமைந்துள்ளது. பாபநாசம் என்று இன்று அழைக்கப்படும் இப்பகுதியானது சோழர்காலத்தில் பூஞ்சுற்றூர் என்றும், ஊற்றுக்காடான ராஜராஜ சதுர்வேதிமங்கலம் என்றும், வல்லவரைபசியன் நகரம் என்றும் பல பெயர்களால் அழைக்கப்பெற்றுள்ளது.[8] பாபநாசம் என்ற பெயர் கி.பி. 1455-இல் முதல்முறையாகக் குறிக்கப்பெறுகின்றது.[9] அதுவும் இங்குள்ள பெருமாள் பாபநாசப்பெருமாள் என்று வருவதால் இப்பெயர் பாபத்தை நாசம் செய்யும் பெருமாள் என்று பொருள் கொள்ளலாம். அல்லது பாபநாசத்துப் பெருமாள் என்றும் பொருள் கொள்ளலாம். எவ்வாறாயினும் கி.பி. 1455-லிருந்து இவ்வூர் பெயர் வழக்கத்தில் உள்ளது. இவ்வூரில் ஊர்ச்சபை, நகரசபை, சதுர்வேதிமங்கலத்துச் சபை எனப் பல சபைகள் செயல்பட்டுள்ளன.[10] முதலாம் இராசராசனால் ஐப்பசி சதய நாளுக்கு 40 காசுகள் நிவந்தம்

கொடுத்ததாகக் கல்வெட்டு கூறுகின்றது.[11] இராஜராஜனை 'பெரியதேவர்' என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றது. அவரே சதயவிழாவினைக் கண்டுகளித்தார் என்றும் கூறுவதால் இக்கல்வெட்டு இராஜராஜன் காலத்தைச் சேர்ந்ததாகவே இருக்கவேண்டும். மேலும் பரிவட்டம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்துள்ளார்கள். இவ்வாறு பல அரிய செய்திகளை பாபநாசம் சீனிவாசப் பெருமாள் கோயில் கல்வெட்டுகளில் காணமுடியும்.

புள்ளமங்கை - ஊரும் பேரும்

முதலாம் பராந்தகச் சோழனால் கட்டப்பட்ட பிரம்மபுரீஸ்வர் திருக்கோயில் அமைந்துள்ள ஊரின் பெயர் புள்ளமங்கை என்பதாகும். தேவாரத்தில் புள்ளமங்கை 'திருப்புளமங்கை' என்று இடைக்குறையாக வருகிறது.[12] புள்ளமங்கலம் என்ற பெயரே கல்வெட்டில் இடம்பெறுகிறது. மங்கலம் என்பதே மங்கை என மருவியிருக்கலாம். புள் என்பது பறவையைக் குறிக்கும். காவிரி ஆற்றின் ஆலந்துறை என்பதால் அடர்ந்த சோலைகளும், மரங்களும் நிறைந்த பகுதியாக புள்ளமங்கையைப் பாடுகிறார் சம்பந்தர். 'பொத்தின்னிடை ஆந்தைபல பாடும்புள மங்கை' -[13] செழுமையான மலர்க்கொத்தினோடு சந்தனத்தையும் கொணரும் காவிரியின் கரைமேல் மரப்பொந்துகளில் வாழும் ஆந்தைகள் பாடும் திருப்புள்ளமங்கையில் வீற்றிருக்கும் அத்தன் திருக்கோயில் ஆலந்துறை ஆகும்.

திருப்புள்ளமங்கை ஊரிலுள்ள பிரம்மபுரீஸ்வரர் கோயில் விமானத்தில் கழுகு சிற்பங்கள் உள்ளன.[14] வடநாட்டுப் புராணங்களில் பிரமன் கழுகு வடிவம் தாங்கி சிவபெருமானின் முடியைக் காணச்சென்றதாகக் கூறப்பட்டுள்ளது. சில தென்னிந்திய புராணங்களும் இதைக் கூறுகின்றன.[15] தேவாரத்தில் பிரம்மன் கழுகு உருவம் கொண்டதை, ஏனங்கழுகானவர் (திருமறைக்காடு), ஓவாது கழுகுமாய் (திருமுதுகுன்றம்), பருந்துருவாகி விண்ணடைந்தவன் (திருவையாறு), வென்றிப் பறவையாய் (நள்ளாறு-ஆலவாய்) என்று பலவிடங்களில் திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். திருக்கழுக்குன்றத்தில் பிரம்மன் கழுகு வடிவத்துடன்

பூசித்தான் என்று தலபுராணம் கூறுகிறது. கருடவடிவத்துடன் பிரமன் பூசித்த ஆலயமான கருடப்பிரமர் கோயில் ஆந்திரமாநிலம் அலம்பூரில் உள்ளது. இந்தோனேஷியா, ஜாவா முதலிய தீவுகளில் வழங்கும் புராணக் கதைகளிலும் பிரம்மன் கழுகு வடிவத்துடன் உள்ளதாக கூறப்படுகிறது.[16]

'கிழார்க் கூற்றத்து பிரமதேயம் புள்ளமங்கலத்து திருவாலந்துறை மகாதேவர் கோயில்' என்றே இக்கோயிலில் உள்ள அனைத்துக் கல்வெட்டுகளும் குறிப்பிடுகின்றன.[17] எனவே தற்பொழுது வழங்கப்பட்டு வரும் புள்ளமங்கை பிரம்மபுரீஸ்வரர் கோயில் என்பது மிகவும் பிற்காலத்தில் ஏற்பட்ட வழக்காகும். பிரமதேயமாக வழங்கப்பட்ட நிலப்பரப்பில் கட்டப்பட்ட சிவன் கோயில் என்பதால் பிரம்மபுரீஸ்வரர் என்று அழைக்கப்பட்டிருக்கலாம். பிரமதேயம் என்பது பிரம்மபுரி என வழங்கப்பெறுவதுண்டு. அங்கு கோயில் கொண்டுள்ள ஈசுவரர் பிரம்மபுரீஸ்வரர் ஆனார் என்பது கருத்து.[18]

புரம் என்பதன் சுருக்கமே புரி ஆகும். புரம் பகுதிகளில் வணிகத் தொழில் செய்யும் வணிகர்களும், வணிகக் கூட்டத்தோடு பிற கைத்தொழில் செய்யும் மக்களும் சேர்ந்து வசித்தனர். 'கிழார்க் கூற்றத்து பரகேசரிப்புரத்து நகரத்தார்' என்பதை நோக்குங்கால் மேற்சொன்னது புலனாகும். பிரம்மதேயங்கள் அதிகளவு காணப்படுகின்ற இடங்களில் தான் நாளடைவில் இவ்வணிகக் குடியேற்றங்களும் நிகழ்ந்துள்ளன. அவ்வாறு கிழார்க்கூற்றத்து பிரம்மதேயம் புள்ளமங்கலம் ஊரில் ஏற்பட்ட வணிகர்களின் குடியேற்றங்களுக்குப் பிறகு இவ்வூர் கோயில் பிரம்மபுரீஸ்வரர் கோயில் என்று அழைக்கப்பட்டிருக்கலாம்.

திருப்புள்ளமங்கை ஆலந்துறையார் கோயிலை முதலாம் பராந்தகன் முழுவதும் கற்றளியாக கட்டினான். இவன் காலத்தில் 32 கோயில்கள் கட்டப்பட்டன. இவன் தனது தந்தை ஆதித்தனின் பணியைத் தொடரும் வண்ணமாக காவிரிக்கரையில் பல கோயில்களை எடுப்பித்துள்ளான். விசயாலயன் நிறுவிய சோழப் பேரரசு வலிமை பெற்று,

நிலைபெறுவதற்கு கோயில்கள் எடுப்பித்தல் அன்றைய சமூக நிலையில் இன்றியமையாததாக இருந்தது என்பதற்கு முதலாம் ஆதித்தனும், முதலாம் பராந்தகனும் காவிரியாற்றின் இருமருங்கிலும் கட்டிய பல கோயில்கள் சான்று பகர்வனவாக உள்ளன.

கோயில்கள் நீர்நிலையில் இருத்தல்வேண்டும் என்னும் சாத்திரவிதிக்கேற்ப இக்கோயிலின் வடக்கு பக்கத்தில் குடமுருட்டியாறு ஓடுகிறது. கோயில்கள் கட்டுவதற்கு வயல்கள் சூழ்ந்த, நல்ல விளைநிலப்பகுதி சிறந்தது என்ற மனைநூல் கூற்றிற்கேற்பவும் புள்ளமங்கை ஆலந்துறையாக அமைந்துள்ளது.

புள்ளமங்கை ஒரு பிரமதேயமாகும். மங்கை என்ற பெயருடன் முடியும் ஏழு ஊர்கள் இப்பகுதியில் அமைந்துள்ளன. அவையாவன. 1. பசுமங்கை 2. நந்தி மங்கை 3. அரிய மங்கை 4. தாழமங்கை 5. புள்ளமங்கை 6. சூல மங்கை 7. சக்ரமங்கை.[19] நந்தி மங்கை என்னும் பகுதியே தற்போது இங்குள்ள நல்லிச்சேரி ஆகும். இந்த நல்லிச்சேரி கல்வெட்டில் நடுவிற்சேரி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நடுவிற்சேரியிலுள்ள தாய்த்தெய்வமான காளாபிடாரிக்கு அளிக்கப்பட்ட கொடைகளும் கல்வெட்டில் குறிக்கப் பட்டுள்ளன.[20] சதுர்வேதிமங்கலமான இவ்வூர் 'புள்ளமங்கலம்' என்று கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் தனது தேவாரத்தில் 'திருப்புளமங்கை' என்று குறிப்பிடுகிறார். இதனை நோக்க, மங்கை என்பது மங்கலத்தின் வழக்குச் சொல்லாக இருந்திருக்கலாம் எனக்கருத இடமுண்டு. மங்கலம் என்பதே வேர்ச்சொல்லாகும். இது தூய தமிழ்ச் சொல்லாகும். மங்கலம் என்பதைப் பிரிக்க மன் கலம் என்பதில் மன் என்பது சிறப்பு, வளம், முதன்மை முதலிய பொருளில் சிறப்புப் பொருந்திய, வளம் மிக்க கலம் என்று வருகிறது.[21] கலம் என்பது இங்கு நிலத்தினைக் குறிக்கிறது. நான்குவேதங்களும் நிலைபெற்றுள்ள சிறப்பு மிக்க கலமாகும் பூமி என்பதே இதன் பொருளாகும். 'மங்கலம் என்ப மனைமாட்சி' என்னும் குறள் வரியையும் வளமான நிலத்தோடு இணைத்து பொருள் கொள்ளலாம்.

அடிக்குறிப்புகள்

1. சந்திரமூர்த்தி, மா. தமிழ்நாட்டுச் சிவாலயங்கள் தொகுதி-1, பக். 271
2. இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை எண். 555, 556, 558, 559
3. பாலசுப்ரமணியம், குடவாயில். தஞ்சாவூர், பக். 10
4. Epigraphia Indica. Vol. XIII pp.142
5. பாலசுப்ரமணியம், குடவாயில். தஞ்சாவூர், பக். 10-12
6. மேலது. பக். 1
7. மேலது. பக். 4
8. ஸ்ரீதர், தி.ஸ்ரீ. பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள், 100,102/1996 -ஆய்வேட்டு பின்னிணைப்பு
9. மேலது. 107/1996 -ஆய்வேட்டு பின்னிணைப்பு
10. மேலது. 98/1986 -ஆய்வேட்டு பின்னிணைப்பு
11. மேலது. 98/1986 -ஆய்வேட்டு பின்னிணைப்பு
12. தேவி, கோ. 'புள்ளமங்கை' அதிட்டானச் சிற்பங்கள் ஓர் ஆய்வு பக். 1
13. முதல் திருமுறை, திருப்புள்ளமங்கை தேவாரப் பதிகம்
14. தேவி, கோ. 'புள்ளமங்கை' அதிட்டானச் சிற்பங்கள் ஓர் ஆய்வு, பக். 10
15. அருணவசந்தன், பூசை. ச. சிவமஞ்சரி, பக். 822
16. மேலது. பக். 832
17. ஆய்வேட்டு பின்னிணைப்பு
18. பூங்குன்றன், ர. கல்வெட்டு வல்லுநர், த.நா.அரசு தொல்லியல் துறை
19. ஆய்வாளர் களஆய்வின்போது நேரில் கேட்டவை
20. ஆய்வேட்டு பின்னிணைப்பு
21. தமிழ்ப் பேரகராதி

2. கோயில் அமைப்பு

புள்ளமங்கை பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில் முற்காலச் சோழர் கலைப்பாணிக்கு சிறந்த சான்றாக விளங்குகிறது. கிழக்கு நோக்கிய இத்திருக்கோயில் நாகரபாணியில் அமைந்த கற்றளியாகும். சிவன்கோயில் கிழக்கு அல்லது மேற்கு நோக்கி இருந்தால் மன்னருக்கும் மக்களுக்கும் நன்மை என்கிறது சாத்திர விதி. அதற்கொப்ப இக்கோயிலின் அமைவும் உள்ளது.

வாணர்களோடு நடைபெற்ற போரில் பராந்தகன் பெற்ற வெற்றிக்குப்பின் இக்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும். கங்கமன்னன் இரண்டாம் பிருதிவீபதி என்பவன் இப்போரில் பராந்தனுக்கு உதவிபுரிந்து வாணர்களை வென்றான்.[1] அதனால் அவனுக்கு மாவலி வாணதிராயன் என்ற சிறப்புப் பட்டம் பராந்தகனால் கொடுக்கப்பட்டது. இந்த மாவலி வாணதிராயன் புள்ளமங்கை திருக்கோயிலுக்கு கொடுத்த கொடையை இங்குள்ள கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது.[2]

இவ்வூர் இறைவன் பெயர் ஆலந்துறை மகாதேவர் என்பதாகும். ஆலம்-நீர் நீர்த்துறையில் கோயில் கொண்டுள்ள இறைவன் ஆவார். ஆலம் என்பதற்கு ஆலமரம் என்ற பொருள் கொள்வோரும் உண்டு. ஆலமரம் இக்கோயிலின் தலவிருட்சமாக கருதப்படுகிறது. பண்டு இப்பகுதியில் ஆலமரங்கள் நிறைந்திருக்கக்கூடும். ஆலமரத்தின் அடியில் அமர்ந்த சிவபெருமானின் வடிவமான தட்சிணாமூர்த்தி சிற்பம் சோழர்களின் தனிப்பட்ட கலைப்பாணியாகும். இத்திருக்கோயில் ஆலமரத்தினை மனதிற்கொண்டு கட்டபட்டதாகவும் இருக்கலாம். விமானத்தில் உள்ள பறவைகள், விலங்குகள், மனித உருவங்கள், நாகரபாணி, அகழி அமைப்பு முதலியன

ஆலமரத்தினை நினைவுபடுத்துவனவாகவே உள்ளன. தென்முகக் கடவுள் ஆலமரத்தடியில் அறமுரைக்கும் தருணம் உயிர்க்குலமெல்லாம் உற்று கேட்பனவாய் வடிக்கப்படும் நிலையையே இது ஒத்துள்ளது. அகழி அமைப்பும் சிறப்புடையது. ஆலத்தின் வேர்கள் நிலத்தில் செல்வதற்கு இதனை ஒப்பிடலாம்.

புள்ளமங்கை ஆலந்துறையார் திருக்கோயின் அமைவானது கருவறை, மண்டபங்கள், திருச்சுற்று, மடப்பள்ளி, நந்தவனம், கோபுரம் எனும் கோயிலின் அங்கங்களை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. கருவறையும், அர்த்தமண்டபமும் சோழர் காலத்தன. முன் மண்டபம், மகா மண்டபம், பிரகார மண்டபம், கோபுரம் முதலிய பிற்கால கலைப்படைப்புகளைப் பெற்று விளங்குகிறது.

1. விமானம்
2. கருவறை
3. அந்தராளம்
4. அர்த்த மண்டபம்
5. மகாமண்டபம்
6. முகமண்டபம்
7. பிரகார மண்டபம்
8. நவக்கிரகம்
9. நடராசர் சன்னதி
10. அம்மன் சன்னதி
11. சண்டிகேசுவரர் சன்னதி
12. சுப்ரமண்யர் சன்னதி
13. நந்தவனம்
14. மடப்பள்ளி
15. முதல் திருச்சுற்று
16. கோபுரம்

விமானம்

திருப்புள்ளமங்கை கோயிலின் விமானம் உபானம் முதல் சிகரம் வரை சதுரமாகவே உள்ளது. சிகரமும் ஸ்தூபியும் சதுர வடிவினதாகவும், நடுவில் பிதுங்கியும் உள்ளது. கோயில்கள் ஒரே பொருள் கொண்டு கட்டப்பட்டால் சுத்தம் எனப்படும். கருங்கல் மற்றும் செங்கல் போன்ற இரண்டு பொருட்கள் கலப்பில் உருவானவை மிஸ்ரம் எனப்படும். இரண்டுக்கு மேற்பட்ட மூலப்பொருட்களைக் கொண்டவை சங்கீர்ண வகையைச் சார்ந்ததாகும். ஜயத விமானம் எனப்படும் வெற்றியின் நினைவாக எழுப்படும் கலைப்பாணியின் இக்கோயில் விமானம் கொண்டுள்ளது. மூன்று

தளங்களையுடைய இக்கோயில் விமானம் அதிட்டானம் முதல் சிகரம் வரை முழுவதும் கல்லால் அமைக்கப்பட்டதாகும். ஆனால் தற்போது சிகரப்பகுதி செங்கல், சுதையினால் பூச்சுப் பெற்றுள்ளது. விமானத்தின் தளங்களில் சிவன், விஷ்ணு வடிவங்கள் உள்ளன. கர்ணக்கூடு, பஞ்சரம், சாலை போன்ற அமைப்புகளைக் கொண்டு விமானம் அமைந்துள்ளது.

கருவறை

இக்கருவறை சதுர வடிவம் பெற்றுள்ளது. கருவறையில் இறைவன் இலிங்க வடிவினராய்த் திகழ்கிறார். இலிங்கத்தின் ஆவுடையார் வட்ட வடிவத்தில் உள்ளது. இலிங்கத்தின் சிவ, விஷ்ணு, பிரம்ம பாகங்கள் முறையே விருத்தம், எட்டுப்பட்டை, நான்கு பட்டையாக அமைந்திருக்கலாம். சோழர்காலத்திய இலிங்க அமைப்பில் அளவில் பெரியதாக உள்ளது.

அந்தராளம்

கருவறையையும், அர்த்த மண்டபத்தையும் இணைக்கும் பகுதி அந்தராளம் எனப்படும். ஆகமப்படியான கோயில்களில் வேதப்பிராமணர்கள் மூன்று சந்திகளிலும் அந்தராளத்தில் நின்று வேதங்களை ஓதினர்.[3]

அர்த்தமண்டபம்

நடுவில் நான்கு முழுத்தூண்களும், இருபுறமும் நான்கு அரைத்தூண்களும் சோழர்கால கலைப்பாணியில் நாட்டியச் சிற்பங்களுடன் கூடியதாக உள்ளன. 26 அடி நீளம், 22 அடி அகலம் உடைய அர்த்தமண்டபத்தின் நுழைவாயிலில் சோழர்கால கலைப்பாணியில் வடிக்கப்பட்டுள்ள வாயில் காவலர்கள் இருபுறங்களிலும் தமக்குள்ள வடிவத்திலிருந்து மாறுபட்டவராய் காட்சியளிக்கின்றனர். பல்லவர்களின் கலைத்தாக்கம் இச்சிற்பங்களில் தெரிகின்றது.

மகா மண்டபம்

ஆறு தூண்களுடன் விளங்கும் மகாமண்டபம் பிற்கால கட்டடப் பாணியாகவே உள்ளது. கிழக்கு மேற்காக

சதுரவடிவில் அமைக்கப்பட்டுள்ள இம்மண்டபத்தின் தூண்கள் வர்ணங்கள் பூசப்பட்டு சதுரம், கட்டு, வெட்டுப்போதிகை பெற்று விளங்குகின்றன. சில தூண்கள் தாமரைப் பதக்கம் பெற்றும் உள்ளன.

முகமண்டபம்

பத்துத் தூண்களுடன் விளங்குகின்றது. இம்மண்டபத்தின் நடுவில் பிற்கால சிறிய நந்தி சிலை உள்ளது. நவக்கிரக சிற்பங்கள் மண்டபத்தின் வடக்கில் உள்ளன. மண்டபத்தின் தெற்கில் சித்தி விநாயகருக்கு சிறிய சன்னிதியும், அச்சுவரின் தென்புற ஓரத்தில் நால்வர் சிலைகளும் காணப்படுகின்றன.

பிரகார மண்டபம்

பிரகார மண்டபத்தின் வடபால் அம்மன் சன்னிதி அமைந்துள்ளது. பிரகார மண்டபம் நான்கு முழுத் தூண்களைப் பெற்று விளங்குகிறது. இப்பிரகார மண்டபத்தின் சுற்றானது நந்தவனத்தோடு கூடிய கருவறை திருச்சுற்றோடு இணைகிறது.

நவக்கிரகம்

முகமண்டபத்தின் வடக்குப் பக்கத்தில் நடராசர் கருவறைக்கு அருகில் உள்ளது. நின்ற நிலையில் உள்ள நவக்கிரகச் சிற்பங்கள் சுமார் 1.25 அடி உயரம் உடையவை. இவை பிற்காலத்தில் அமைக்கப்பட்டதாக உள்ளன. உயரமான சதுர வடிவ கல்மேடை போன்ற அமைப்பின் மேல் நவக்கிரகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நடராசர் சன்னதி

முகமண்டபத்தின் வடக்குப்புறத்தில் நடராசர் கருவறை உள்ளது. முன்பு இங்கு நடராசரின் சிலை அல்லது செப்புத் திருமேனி இருந்திருக்கலாம். இவ்வாறு முகமண்டபத்தின் வடபுறம் நடராசருக்கு கருவறை அமைத்தல் ஆகமவிதியாகும். ஆகமவிதிப்படி கட்டப்பட்ட

கோயில்களில் இங்கு நடராசரை அமைப்பது மரபு. ஆனால் இக் கோயிலில் இவ்வமைப்பு பிற் காலத்தில் இணைக்கப்பட்ட ஒன்றாகவேத் தெரிகிறது. இது தற்போது பூசை பொருட்கள் வைக்கும் அறையாக பயன்பாட்டில் உள்ளது.

அம்மன் சன்னதி

கோயிலின் வடகிழக்கு மூலையில் அம்மனுக்கென தனி சன்னதி அமைந்துள்ளது. இது பிற்காலத்தில் ஏற்பட்ட அமைப்பாகலாம். சதுரவடிவமான கருவறையில் தாமரைப் பீடத்தின் மேல் நின்றநிலையில் அம்மன் சிற்பம் காணப்படுகிறது. நான்கு கைகளுடன் சமபாதத்தில் நிற்கும் இறைவியின் பெயர் அல்லியங்கோதை. சௌந்தர நாயகி என்ற மற்றொரு பெயரும் வழங்கப்படுகிறது. இக்கோயில் கல்வெட்டில் காமக்கோட்டம் என்றழைக்கப்படும் அம்மன் சன்னதியைப் பற்றிய குறிப்புகள் ஏதும் காணக் கிடைத்தில. எனவே இக்கோயில் கட்டப்பட்ட காலத்தில் அம்மனுக்கென்று தனி சன்னதி இருந்திருக்க வாய்ப்பில்லை.

பதினொறாம் நூற்றாண்டிலிருந்தே கோயில்களில் அம்மனுக்கென்று தனி சன்னதிகள் அமைக்கத் தொடங்கினாலும், புள்ளமங்கை கோயிலில் உள்ளூர்த் தெய்வமாகிய காளாபிடாரியே தாய்த் தெய்வமாக நீண்ட காலமாக வழிபடப்பட்டு வந்துள்ளதால் இங்கு அம்மன் சன்னிதி அக்காலகட்டத்தில் அமைக்கத் தேவையிருந்திருக்கவில்லை போலும். இப்போது அங்குள்ள அம்மன் கருவறையும், சிற்பமும் விசயநகர காலத்திற்கும் பின் ஏற்படுத்தப்பட்டதாகவே தெரிகிறது.[4]

சுப்ரமண்யர் சன்னதி

திருச்சுற்றின் மேற்குப் புறத்தில் கிழக்குமுகமாக சுப்ரமண்யர் சன்னதி லிங்கோத்பவர் சிற்பத்திற்கு நேர் எதிராக உள்ளது.

சண்டேசர் கருவறை

கருவறைத் திருச்சுற்றின் வடக்குப்புறம் சண்டேசர் சன்னதி உள்ளது. இங்கு சோழர்கால சண்டேசர் சிற்பம் உள்ளது.

மடப்பள்ளி

கோபுர நுழைவாயிலைத் தொடர்ந்து இடதுபுறத்தில் அதாவது கருவறைக்கு தென்புறம் மடப்பள்ளி பெரிய அறையாக அமைந்துள்ளது. இத்திருக்கோயிலின் மடப்பள்ளி தற்போது வாகன மண்டபம் போன்று காட்சியளிக்கிறது. வீதியுலாவிற்கான வாகனங்கள் இங்கு நிறுத்தப்பட்டுள்ளன.

நந்தவனம்

இத்திருக்கோயிலைச் சுற்றி சுற்றுப்பிரகாரத்தில் நந்தவனம் அமைந்துள்ளது. இறைவன் பூசைக்குத் தேவையான மலர்கள் இங்கு வளர்க்கப்படுகின்றன.

சுற்றுப்பிரகாரம்

மாந்தரின் தூல உடம்பு எனப்படும் பருவுடலைக் குறிக்கும் ஒரேயொரு பிரகாரம் மட்டும் இங்குள்ளது. சுற்றுப்பிரகாரத்தில் விநாயகர், முருகன் சன்னிதிகள் அமைந்துள்ளன. சுற்றுப்பிரகாரம் திருச்சுற்றுமாளிகைகளாக பிற்காலச்சோழர் கோயில்களில் காணப்படுவதும் இங்கு நோக்கத்தக்கது. திருச்சுற்றுகள் ஆகமங்களில் 'ஆவரணங்கள்' எனக் குறிப்பிடப்படுகின்றன. திருச்சுற்றில் பரிவார தேவதைகளுக்கு என எட்டுத்திக்கிலும் அமைக்கப் பெறும் சிற்றாலயங்கள் இக்கோயிலில் இடம் பெறவில்லை.

தேவகோட்டங்கள்

கருவறையின் வெளிப்புறச் சுவரின் கோட்டத் தெய்வங்களாக தெற்கு, மேற்கு, வடக்கில் முறையே தட்சிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், பிரம்மன் முதலியோரும், அர்த்தமண்டப வெளிப்புறக் கோட்டத் தெய்வங்களாக

தெற்கில் விநாயகரும், வடக்கில் கொற்றவையும் உள்ளனர். தேவகோட்ட சிற்பங்கள் அனைத்தும் முற்கால சோழர் கலைப்பாணியை பறைசாற்றுவனவாக திகழ்கின்றன. இறையுருவங்களின் ஆயுதங்கள் கைகளின் விரல்களுக்கிடையில் வைக்கபட்டிருக்கும் தோற்றமும், பூணூல் விரிவானதாகவும், ஸ்தானமாலா வலதுதோளிலும் காட்டப்பட்டிருக்கும் நிலையும் முற்கால சோழர்களின் சிற்பத்தன்மையை காட்டுவனவாகும்.

கோபுரம்

மூன்று நிலைகளையுடைய இராஜகோபுரம் கிழக்கு வாயிலில் அமைந்துள்ளது. பிற்காலத்திய வண்ணப் பூச்சுக்களுடன் விளங்கும் இக்கோபுரத்தில் அப்பர், சம்பந்தர், விஷ்ணு அவதாரங்களான வராகர், நரசிம்மர் முதலிய சுதைச்சிற்பங்கள் காணப்படுகின்றன.

அடிக்குறிப்புகள்

1. சதாசிவ பண்டாரத்தார், தி. வை., பிற்காலச் சோழர் வரலாறு, பக். 33
2. S.I.I. Vol. II. No. 76
3. அருணவசந்தன், பூசை. ச., சிவமஞ்சரி, பக். 876
4. ஆய்வாளர் நேரில் கண்டது

3. தேவாரப் புள்ளமங்கை

புள்ளமங்கை பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில் பண்டு தேவாரத்தில் திருப்புளமங்கை என்னும் ஊரில் அமைந்துள்ள திருஆலந்துறை திருக்கோயில் என திருஞானசம்பந்தரால் பாடப்பட்டுள்ளது. திருவாலந்துறைக் கோயிலின் இறைவன் ஆலந்துறை மகாதேவர் ஆவார். இக்கோயில் கல்வெட்டுகள் அனைத்திலும் இறைவன் பெயர் ஆலந்துறை மகாதேவர் என்று தேவாரப்பாடலில் கூறப்பட்டவாறே உள்ளது. தேவாரம் முதல் திருமுறையில் இத்தலத்தின் பதிகம் இடம்பெற்றுள்ளது.

பால்உந்துறு திரள்ஆயின
பரமன்பிர மன்தான்
போலும்திறல் அவர்வாழ்தரு
பொழில்சூழ்புள மங்கைக்
காலன்திறல் அறச்சாடிய
கடவுள்ளிடம் கருதில்
ஆலந்துறை தொழுவார்தமை
அடையாவினை தானே.

பாலின் திரட்சியைப் போன்று இனிமையானவன் பரமன். அவன் காலனுடைய வலிமையை இழக்கச் செய்தவன். அவனுடைய இடமாவது, பிரமனைப் போன்ற வேதத்தினை நாளும் ஓதும் சிறப்பினை உடைய அந்தணர்கள் வாழும் திருப்புளமங்கை என்னும் பதியில் விளங்கும் ஆலந்துறை யாகும். அதனைத் தொழுபவர்களை வினை அடையாது.

மலையான்மகள் கணவன்மலி
கடல்சூழ்தரு தன்மைப்
புலையாயின களைவான்இடம்
பொழில்சூழ்புள மங்கைக்

கலையால்மலி மறையோர்அவர்
கருதித்தொழுது ஏத்த
அலைஆர்புனல் வருகாவிரி
ஆலந்துறை அதுவே.

கடல் சூழ்தலால் விளையும் புலை மீசர் மணமானது மேலெழாதவாறு நறுமணத்தை நல்கும் பொழில் சூழ்ந்த திருப்புளமங்கை என்னும் ஊரில் கல்வியிலும் ஒழுக்கத்திலும் மிக்க மறையவர்கள் மனதாரத் தொழுது ஏத்திட, காவிரியாறு அலைகளையுடைய தீர்த்தத்தைத் தருமாறு திகழும் ஆலந்துறை உள்ளது. அங்கு கோயில் கொண்டு இருப்பவன் மலைமகள் தலைவன் ஆவன்.

கறைஆர்மிடறு உடையான்கமழ்
கொன்றைச்சடை முடிமேல்
பொறைஆர்தரு கங்கைப்புனல்
உடையான்புள மங்கைச்
சிறைஆர்தரு களிவண்டுஅறை
பொழில்சூழ்திரு ஆலந்
துறை ஆனவன் நறைஆர்கழல்
தொழுமின்துதி செய்தே.

விடத்தை உண்ட கறை தோய்ந்த மிடறு உடையவன். வாசனை பொருந்திய கொன்றை மலரைச் சடை முடிமேல் தரித்துக் கங்கையை உடையவன். அவன் திருப்புள மங்கையில் வண்டுகள் சூழும் பொழிலை உடைய திரு ஆலந்துறையில் விரும்பி இருப்பவன். அப்பெருமானுடைய மணம் மிகுந்த தேன் போன்ற இனிமையான மலர்ப்பாதத்தைத் துதி செய்து வணங்குமின்.

தணிஆர்மதி அரவின்னொடு
வைத்தான்இட மொய்த்தெம்
பணியாய்அவன் அடியார்தொழுது
ஏத்தும்புள மங்கை
மணிஆர்தரு கனகம்மவை

வயிரத்திர ளோடும்
அணிஆர்மணல் அணைகாவிரி
ஆலந்துறை அதுவே.

குளிர்ச்சியான சந்திரன் பாம்புடன் சேர்ந்து இருக்குமாறு, தன் முடியில் வைத்திருப்பவனுடைய இடம் எதுவெனில், அடியவர்கள் எல்லாம் மொய்த்து இருந்து, எம்பணியென அவனை கூடித்தொழுதேத்தும் திருப்புளமங்கை அவன் வீற்றிருக்கும் தலமாகும். இத்தலமானது மாணிக்கம், பொன், வயிரம் யாவும் மணலொடு கொண்டு வரும் காவிரியின் இயல்பு கொண்ட ஆலந்துறையாம்.

மெய்த்தன்னுறும் வினைதீர்வகை
தொழுமின்செழு மலரின்
கொத்தின்னொடு சந்துஆர் அகில்
கொணர்காவிரிக் கரைமேல்
பொத்தின்னிடை ஆந்தைபல
பாடும்புள மங்கை
அத்தன்நமை ஆள்வான்இடம்
ஆலந்துறை அதுவே.

வினைப்பயனால் மெய்யாகிய உடம்புடன் பிறவி வாய்க்கப்பெறுகிறது. பிறவி வேண்டார் எனின் வினைதீர்வகை அறிதல் வேண்டும். பிறப்பறுக்கும் பிஞ்ஞகனாம் ஈசனைத் தொழுதால் வினைதீரும். செழுமையான மலர்க்கொத்தினொடு சந்தனத்தையும் கொணரும் காவிரியின் கரைமேல் மரப்பொந்துகளில் வாழும் ஆந்தைகள் பாடும் திருப்புளமங்கையில் வீற்றிருக்கும் அத்தன் நம்மை ஆள்பவன். அவனுடைய திருக்கோயில் ஆலந்துறை ஆகும்.

மன்ஆனவன் உலகிற்குஒரு
மழையானவன் பிழைஇல்
பொன்ஆனவன் முதல்ஆனவன்
பொழில்சூழ்புள மங்கை

என்ஆனவன் இசைஆனவன்
இளஞாயிறின் சோதி
அன்னானவன் உறையும்மிடம்
ஆலந்துறை அதுவே.

அனைத்துமாய் ஒளிர்பவன். நீரின்றி அமையாத உலகிற்கு ஒப்பற்ற மழையானவன். குற்றமற்ற பொன்னானவன். யாவற்றிற்கும் முதற்பொருளானவன். பொழில் சூழ்ந்த திருப்புளமங்கையில் எனக்கானவன். பாடும் இசையானவன். இளஞாயிறு போன்ற சோதி வடிவானவன். அவன் வீற்றிருக்கும் இடம் ஆலந்துறை. என்ஆனவன் என்பது என் உயிர் போன்றவன் என்பதாம். எனக்கே உரியவன். எனக்கு மிகவும் வேண்டியவன். நானேயாகிய என்னவன். இறைவனின் மீதுள்ள காதல் இதில் உணருமாறு வெளிப்பட்டிருக்கிறது. அவன் மீதுள்ள காதலால் வந்த உரிமையை உணர்த்தி நிற்கிறது.

முடிஆர்தரு சடைமேல்முனை
இளவெண்மதி சூடிப்
பொடிஆடிய திருமேனியர்
பொழில்சூழ்புள மங்கைக்
கடிஆர்மலர் புனல்கொண்டுதன்
கழலே தொழுது ஏத்தும்
அடியார்தமக்கு இனியான்இடம்
ஆலந்துறை அதுவே.

இறைவன் தன்னுடைய திருமுடியில் விளங்கும் சடைமேல் இளமையான வெண்மதியை சூடி அதன் வெண்ணிறபாலொளியால் விளைந்தாற் போன்று தன் திருமேனியெங்கும் வெண்பொடி பூசிய தோற்றத்தினை உடையவன். அவன் பொழில்கள் சூழ்ந்த திருப்புள்ள மங்கையில் நீரும் மலரும் கொண்டு தன் கழல் ஏத்தும் அடியவர்களுக்கு இனியவன். அவன் உறையுமிடம் ஆலந்துறை அதுவே தான்.

இலங்கைமனன் முடிதோள்இற
எழில்ஆர்திரு விரலால்
விலங்கல்விடை அடர்த்தான்இடம்
வேதம்பயின்று ஏத்திப்
புலன்கள்தமை வென்றார்புகழ்
அவர்வாழ்புள மங்கை
அலங்கல்மலி சடையான்இடம்
ஆலந்துறை அதுவே.

இலங்கை மன்னன் தலைமுடியும் தோளும் நலியுமாறு அழகிய தனது திருப்பாத விரலால் ஊன்றி மலைக்குக் கீழே அவன் துன்பம் கொள்ளத் தண்டித்தவன் இடமெதுவெனில், வேதங்களை நன்கு பயின்று, அதனை உணர்ந்தோதி, புலன்களை ஐந்தினையும் வென்று வாழும் தன்மையால் புகழ்கொள்ளும் உயர்ந்தோர் வாழும் திருப்புளமங்கை ஆகும். ஆங்கண் கொன்றை மாலையை அணிந்த சடையன் இடமாவது ஆலந்துறையாகும்.

செறிஆர்தரு வெள்ளைத்திரு
நீற்றின்திரு முண்டப்
பொறிஆர்தரு புரிநூல்வரை
மார்பன்புள மங்கை
வெறிஆர்தரு கமலத்துஅயன்
மாலும்தனை நாடி
அறியாவகை நின்றான்இடம்
ஆலந்துறை அதுவே.

பொருந்தி, நெருங்கி மேவி தூய்மை தரும் திருவெண்ணீற்றைத் திருநுதலில் தரித்து, முப்புரிநூல் மார்பில் திகழ விளங்குபவன் சிவபெருமான். இப்பெருமான் தாமரை மலரின்கண் அமர்ந்துள்ள அயனும் திருமாலும் நாடிச் சென்றபோதும் அறியா முடியாதவகையில் திருப்புள்ள மங்கையில் நின்றான். அவன் இடமாவது ஆலந்துறை ஆகும்.

நீதிஅறி யாதார்அமண்
கையரொடு மண்டைப்

போதியவர் ஒதும்முரை
கொள்ளார்புள மங்கை
ஆதிஅவர் கோயில்திரு
ஆலந்துறை தொழுமின்
சாதிம்மிகு வானோர்தொழு
தன்மைபெறல் ஆமெ.

முறைமை அறியாத சமணர் மற்றும், பௌத்தர்களாகிய புறசமயத்தார்கள் கூறும் உரைகளைக் கொள்ளாதவர்கள் வாழ்கின்ற திருப்புளமங்கையில், ஆதி மூலப்பொருளாக உடையவனுடைய கோயில் திருவாலந்துறையாம். ஆங்கு சென்று வணங்குபவர்கள் வானோரும் மற்றும் அவ்வினம் சார்ந்தவரும் ஏத்திடும் சிறப்பைப் பெறுவார்கள்.

பொந்தின்னிடைத் தேனூறிய
பொழில்சூழ்புள மங்கை
அந்தண்புனல் வருகாவிரி
ஆலந்துறை யானைக்
கந்தம்மலி கமழ்காழியுள்
கலைஞானசம் பந்தன்
சந்தம்மலி பாடல்சொலி
ஆடத்தவம் ஆமே.

பொழில்கள் சூழ்ந்த நிலையில் மரப்பொந்துகளில் தேன் ஊறும் வளம் மிக்க திருப்புளமங்கையில், குளிர்ந்த நீர் வரும் காவிரி சூழ்ந்த இடம் ஆலந்துறை. இங்கு உறையும் சிவபெருமானை, மணம் கமழும் சீகாழியில் மேவும் ஞானசம்பந்தப் பெருமான் இசைத்த சந்தம் பெருகும் இத்திருப்பதிகத்தைப்பாடி, அதன் வழி மனம் இலயித்துத் தன்னை மறந்து பக்திப் பரவசத்தால் ஆடும் நிலையுடையவர்கள், தவம் செய்து அதனால் பெறுகின்ற பயனை உடையவர்கள் ஆவர்.

திருஞானசம்பந்தர் நமக்குக் காட்டும் புள்ளமங்கை யானது இயற்கைவளம் சூழ்ந்த, காவிரிக்கரையில் உள்ள

செழுமையான நிலப்பகுதியாகும். இங்கு வேதங்களை நன்கு பயின்று, அதனை உணர்ந்தோதி, புலன்களை ஐந்தினையும் வென்று வாழும் தன்மையால் புகழ்கொள்ளும் உயர்ந்தோர் வாழ்ந்தனர். சாமவேதிகளுக்கும் இருக்குவேதிகளுக்கும் கொடுக்கப்பட்ட நிலக்கொடை பற்றி இக்கோயிலில் உள்ள கல்வெட்டு கூறுகின்றது.[1] இதனை நோக்குங்கால் வேதங்களில் சிறந்த பயிற்சி பெற்ற பிராமணர்கள் வாழ்ந்திருந்த பகுதி புள்ளமங்கை என்பதாக தேவாரம் காட்டுவதை கல்வெட்டு உறுதி செய்கிறது.

மேலும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் முதலாம் இராசராசன் இங்கு சாமவேதம் பயின்றதாக கூறப்படுகிறது. எனவே கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை நான்கு வேதங்களைப் பயின்ற வேத விற்பன்னர்கள் இங்கு மிகுந்திருந்தனர் என்பது தெளிவு. இங்ஙனம் வேதத்தில் பயிற்சிபெற்ற பிராமணர்களுக்கு வேள்வியின் பொருட்டு கொடையாக வழங்கப்படும் நிலப்பகுதியே பிரமதேயமாகும்.[2] அவ்வகையில் புள்ள மங்கையும் அவ்வாறு வேதத்தில் சிறந்த பிராமணர்களுக்கு அரசர்களால் வழங்கப்பட்ட பிரமதேய ஊராகும். புள்ள மங்கையில் சாமவேதிகளும், இருக்குவேதிகளுமான பிராமணர்கள் இருந்ததை கல்வெட்டு உறுதி செய்கிறது.[3] இவ்விரு வேதங்களிலும் சிறந்த பிராமணர்களுக்கு நிலக் கொடை வழங்கப்பட்டதும் தெரிகின்றது.[4]

அடிக்குறிப்புகள்

1. தேவாரம் முதல் திருமுறை, திருப்புள்ளமங்கைப் பதிகம்
2. ஆய்வேட்டு பின்னிணைப்பு
3. பூங்குன்றன், ர. கல்வெட்டு வல்லுநர், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
4. ஆய்வேட்டு பின்னிணைப்பு
5. மேலது.
6. ஆய்வாளர் நேரில் கண்டது
7. நிழற்படங்கள் பின்னிணைப்பு

4. அரசியல் பின்னணி

தொன்றுதொட்டு சோழ மன்னர்களின் ஆட்சிக்குரியதாய் அரசாளப்பட்டு வந்த தமிழகப்பகுதி, சோழ மண்டலம் என்று வழங்கப்பெற்றது. இம்மண்டலம் தமிழகத்துள் கிழக்குப் பகுதியாக அமைந்துள்ளதால் 'குணபுலம்' என்று பண்டு அழைக்கப்பெற்றது. சோழமண்டலம் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கடலூர் மாவட்டத்தில் சிலபகுதிகளையும், புதுக்கோட்டை நாட்டின் ஒரு பகுதியையும் தன்னகத்தே கொண்டு விளங்கிய பெரும் நிலப்பரப்பாகும். சிதம்பரத்திற்கு வடக்கே பரங்கிப்பேட்டைக்கு அண்மையில் கடலோடு கலக்கும் வெள்ளாறு அதன் வடஎல்லையாகும். அறந்தாங்கி வட்டம் ஆளுடையார் கோயிலுக்கு வடபுறமாக ஓடி மணமேற்குடிக்கருகில் கடலில் கலக்கும் வெள்ளாறு தென்னெல்லையாகும். திருச்சிராப்பள்ளியிலுள்ள குளித்தலைக்கு மேற்கே மதுக்கரையைச் சார்ந்த கோட்டைக்கரையை மேற்கு எல்லையாகவும், கிழக்கு எல்லை வங்காளப்பெருங்கடலுமாக இம்மண்டலத்தின் பேரெல்லைகளாக அமைந்திருந்தன என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்து.

சோழ மன்னர்கள் தம் ஆற்றலாலும், படை வலிமையாலும் பிறநாடுகளை வென்று தம் ஆட்சிக்கு உட்படுத்தி, சோழப் பேரரசை நிறுவிச் சக்கரவர்த்திகளாக வீற்றிருந்து அரசாண்டனர். சங்ககாலத்திற்குப் பின் களப்பிரர்களை கலியடக்க, வெளிப்படக் கிளர்ந்த பாண்டியர்களைப் போல் சோழர்களின் இடைக்கால வரலாறு இல்லையெனலாம். அக்காலகட்டங்களில் பழையாறையை தலைநகராகக் கொண்டு சிற்றரசர்களாக ஆட்சிபுரிந்து வந்தனர். கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவர்கள் மீண்டும்

தம் வலிமையை நிலைநாட்டி, பெரும் பேரரசர்களாக உருவாகி கி.பி.13-ஆம் நூற்றாண்டு வரை சிறப்புடன் ஆட்சிபுரிந்தனர். சோழர்களின் ஆட்சிகாலம் 'தமிழ்நாட்டின் பொற்காலம்' என வரலாறு செப்புகிறது. அத்தகு பெருமைமிகு வரலாற்றை உருவாக்கிய சோழமன்னர்களின் அரசியல், போர்த் திறங்களைக் காண்போம்.

விசயாலயச் சோழன் (857-885)

சங்க இலக்கியங்களில் புகழுடன் சுட்டப்பெறும் பெருநற்கிள்ளி, கரிகாலன், செங்கணான், நல்லடி போன்ற சோழ அரசர்களின் வழிவந்தவன் என்று அன்பில், ஆனை மங்கலம், திருவாலங்காடு செப்பேடுகளும், கன்னியாகுமரிக் கல்வெட்டும் குறிப்பிடும் விசயாலயச் சோழன் என்பவனே கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடையில் சோழப் பேரரசை நிறுவியவன்.[1] இவனுடைய தந்தை பெயர் ஒற்றியூரன் என்பது வேளஞ்சேரி செப்பேட்டால் அறியமுடிகின்றது.[2]

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தஞ்சைப் பகுதியை ஆட்சிபுரிந்து வந்த முத்தரையர்கள் கல்வெட்டில் 'தஞ்சை கோன்' எனவும், தஞ்சை நற்புகழாளன்' எனவும் குறிக்கப்படுகின்றனர்.[3] இவர்களை வென்றே விசயாலயன் சோழப் பேரரசை நிறுவி, தஞ்சையைத் தலைநகராக்கினான் என்ற வரலாற்றுச்செய்தி தற்போது மயிலாடுதுறை, கருகாணி முட்டத்தில் கிடைத்துள்ள திருஇந்தளூர் நாட்டு இராதிராசன் செப்பேட்டின் மூலம் மாறுகிறது.[4] விசயாலயன் பல்லவமன்னனான கம்பவர்மனை வென்று சோழப் பேரரசை நிறுவி, பின் பல்லவர்களின் கீழ் குறுநில மன்னர்களாயிருந்த முத்தரையர்களை வென்று, தஞ்சையை சோழப் பேரரசின் தலைநகராக்கினான் என்ற அரிய வரலாற்றுச் செய்தியை இச்செப்பேடு தெரிவிக்கிறது. இம்மன்னன் தான் தஞ்சையை வெற்றி கொண்டதன் நினைவாக அங்கு வெற்றித்தெய்வம் நிசும்பசூதனிக்கு ஒரு கோயில் எடுத்து வழிபட்டான் எனத்தெரிகிறது.[5]

வேலூர் பாளையச் செப்பேடுகள் குறிப்பிடும் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தவனான குமாராங்குசன் என்ற சோழமன்னனுக்கு விசயாலயன் புதல்வன் என்பதாக பண்டாரத்தார் தம் சோழர் வரலாற்றில் மேற்கோடிடுகிறார். வேளஞ்சேரி செப்பேடுகள் விசயாலயனின் தந்தையாக ஒற்றியூரான் என்பவனைக் குறிப்பிடுகிறது.[6] திருவொற்றியூர் கோயிலுக்கு சோழப் பரம்பரையினர் கொடுத்த சிறப்பும் இங்கு கவனிக்கத்தக்கது. கடைச்சங்க காலத்துச் சோழரின் வழியில் தோன்றியவனே விசயாலயன் என்பதை ஜெயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணியும், ஒட்டக்கூத்தரின் மூவருலாவும் உறுதிப்படுத்துவதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

முதலாம் ஆதித்த சோழன் (கி.பி. 871-907)

விசயாலயனுக்குப்பின் இராஜகேசரி என்ற பட்டத்துடன் முடிசூடிக்கொண்ட பெரும்வீரன் ஆதித்த சோழன். பல்லவமன்னன் அபராஜிதவர்மனை வென்று தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றி, திருக்கழுக்குன்றக் கோயிலுக்கு பல்லவர்களால் வழங்கப்பட்டிருந்த கொடைகளை தனது 27-ஆம் ஆட்சியாண்டில் உறுதிப்படுத்தினான்.[7] மேலும் செங்கற்பட்டு, திருமால்புரம் கோயிலுக்கு தன் 21-ஆம் ஆட்சியாண்டின் போது தேவதான நிலம் அளித்த செய்தியை அங்குள்ள கல்வெட்டு கூறும். ஆதித்தன் கொங்கு மண்டலத்தின் மீது படையெடுத்து வென்றதை 'கொங்கு தேச இராசாக்கள்' என்ற வரலாற்று நூல் கூறுகிறது.

திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி என்பவர் தாம் இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியில், ஆதித்தன் கொங்கை வென்று, அங்கிருந்து கொணர்ந்த பொன்னைக் கொண்டு திருச்சிற்றம்பல முகட்டினை வேய்ந்தான் என்று பாடுகிறார். ஆதித்தன் கொங்கு மண்டலத்தை வென்றான் என்பதற்கு ஒரு கல்வெட்டுச் சான்று கிடைத்துள்ளது. அக்கல்வெட்டு இராசகேசரிப் பெருவழி என்ற பெருவழியைப் பற்றிக் கூறுகின்றது. அதில் உள்ள வெண்பா பாடலில் 'வளங்காவிரி நாடன் கோழியர்

கோக்கண்டன்' என்ற வரி பயின்று வருவது குறிப்பிடத்தக்கது. இதில் கோக்கண்டன் என்ற விருதுப்பெயர் இக்கல்வெட்டு யார் காலத்தது என்பதை அறிய உதவுகின்றது. இக்கல்வெட்டு கண்டராதித்தன் காலத்தது என புலவர் இராசு அவர்கள் கூறுகிறார். இரா. நாகசாமி அவர்கள் அது முதலாம் இராசராசன் காலத்தைச் சார்ந்தது என்பார். மேலே கூறப்பட்ட கோக்கண்டன் என்ற விருதுப்பெயர் சோழர்களில் முதலாம் ஆதித்தனுக்கும், இரண்டாம் இராசராசனுக்கும் உரியது. தில்லைத்தானம் கல்வெட்டில் முதலாம் ஆதித்தன் ''பல்யானைக் கோக்கண்டன் ஆயின தொண்டைநாடு பாவிய இராசகேசரி' என்று கூறப்பெறுகின்றான். இது கொண்டு இராசகேசரிப் பெருவழி முதலாம் ஆதித்தன் காலத்தைச் சேர்ந்தது எனலாம்.

திருநெய்த்தானம் கல்வெட்டு இவனை 'தொண்டைநாடு பரவின சோழன் இராசகேசரிவர்மன்' என்று குறிப்பிடுகிறது.[8] கோதண்டராமன் என்ற மற்றொரு பெயரை கன்னியாகுமரிக் கல்வெட்டினால் அறியக்கூடும். இவன் காவிரியாற்றின் இருமருங்கும் பல சிவாலயங்களைக் கற்றளிகளாக எடுப்பித்தவன். திருப்புறம்பியப் போருக்குப் பின்னே சோழ அரசு நிலைபெற்றதைத் தொடர்ந்து திருப்புறம்பியத்தில் ஆதித்தேச்சுரம் என்னும் பெருங்கற்றளியை அமைத்தான். திருஎறும்பியூர் கோயில் இவனால் கற்றளியாக்கப்பட்டது. இவனுக்கு இளங்கோப்பிச்சி, திரிபுவனமாதேவியாகிய வயிரியக்கள் என்பர் பட்டத்தரசிகளாக இருந்தனர். பராந்தகன், கன்னரதேவன் என்னும் இருபுதல்வர்கள் இருந்தனர். சித்தூர் மாவட்டம், திருக்காளஹஸ்திக்கு அண்மையில் தொண்டைமான் பேராற்றூரில் அவன் இறந்தவிடத்தில் 'கோதண்ட ராமேச்சுரம்' என்னும் பெயரில் ஆதித்தன் புதல்வன் முதலாம் பராந்தகனால் எடுக்கப்பட்ட பள்ளிப்படைக் கோயில் அமைந்துள்ளது.

முதலாம் பராந்தகன் - கி.பி. 907-955

முதலாம் பராந்தகன் ஆதித்தசோழனின் மகனாவான். பராந்தகன் 48 ஆண்டுகள் சோழநாட்டை ஆட்சிசெய்தான் என்பதை அவனின் 48-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது. தன் தந்தை முதலாம் ஆதித்தனின் வெற்றிகளைத் தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டும், சோழப்பேரரசை விரிவுபடுத்தி நிலைப்படுத்தவும், தன் வாழ்நாள் முழுவதும் ஈடுபட்டிருந்தான். தனது தந்தையின் காலத்தில் நிறைவேறாத கனவாயிருந்த பாண்டியநாட்டை கைப்பற்றுதலை இவன் தன் 3-ஆம் ஆட்சியாண்டில் மெய்ப்பித்தான். பாண்டியர்களோடு போரிட்டு கன்னியாகுமரி வரை பேரரசை விரிவுபடுத்தினான்.

பாண்டியர்களுடன் போர்

பராந்தகன் தன் 3-ஆம் ஆட்சியாண்டின் தொடக்கத்திலேயே 'மதிரை கொண்ட கோப்பரகேசரி' என்ற பட்டம் தாங்கினான்.[9] ஆயினும் அவனது 24-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுகளே பாண்டிய நாட்டில் கிடைத்துள்ளன. பராந்தகனது 12-ஆம் ஆட்சியாண்டின் இரு கல்வெட்டுகள் பாண்டிய, ஈழத்துப் படைகள் வெள்ளூர் போரில் சோழரிடம் தோற்றதைக் குறிப்பிடுகின்றன. வெள்ளூர் போரில் பாண்டிய, ஈழப் படைகளுக்கு எதிராக பராந்தகனோடு நின்று போர்புரிந்த பழுவேட்டரையர் கண்டன் அமுதனார் என்பவர் பெற்ற வெற்றியைக் கொண்டாடும் வகையில் கொடுக்கப்பட்ட தானத்தைக் குறிப்பிடுகிறது.[10] இப்போர் கி.பி. 915-இல் நடைபெற்றிருக்கலாம். இவ்வெற்றியால் பாண்டிய நாடு சோழப் பேரரசோடு சேர்த்துக் கொள்ள வழி வகுத்தது. இதனை திருவாலங்காட்டுப் பட்டயம் உறுதிப்படுத்துகிறது. இப்போரில் தோல்வியுற்று ஈழத்திற்கு ஓடி ஒளிந்த பாண்டிய மன்னன் இராசசிம்மன் ஆவான்.

ஈழப்போர்

பராந்தகனது 37-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுகள் இவனை 'மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி' என்று குறிப்பிடுகிறது.[11] பராந்தகன் மதுரையில் தன் வெற்றியைத்

தொடர்ந்து, தோற்றோடிய பாண்டிய மன்னனின் மணிமுடியையும், மற்ற சின்னங்களையும் கைப்பற்ற எண்ணி ஈழத்தின் மேல் படையெடுத்தான். அப்பொருட்கள் இராசசிம்மனால் ஈழமன்னன் நான்காம் உதயன் (கி.பி. 945-53) வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. ஆனால் நான்காம் உதயன் மணிமகுடத்தையும், மற்ற அரிய பொருட்களையும் எடுத்துக்கொண்டு ரோஹணாவுக்குச் சென்று மறைந்து விட்டான். துரத்திச் சென்ற சோழர் படை பொருட்களைப் பெற இயலாமல் வெறுங்கையுடன் திரும்பி விட்டது. ஈழப் படையெடுப்பு கி.பி. 944-ஆம் ஆண்டிற்கு முன்னர் நிகழ்ந்திருக்க வேண்டும்.

மற்ற போர்கள்

வல்லம் போர்

உதயேந்திர செப்பேடுகள் பராந்தகன் இரண்டு வாணர்குல அரசர்களை வென்று வாணகப்பாடி நாட்டை கங்கமன்னனாகிய இரண்டாம் பிருதிவிபதிக்கு வழங்கியதோடு, அவனுக்கு செம்பியன் மாவலி வாணதிராயன் என்ற பட்டமும் அளித்தான் என்று கூறுகின்றன.[12] சோளசிங்கபுரத்திலுள்ள பராந்தகனது ஆட்சியில் 9-ஆம் ஆண்டு கல்வெட்டு 'வல்லாள' என்ற இடத்தில் நடைபெற்ற போரைக் குறிப்பிடுகிறது. வல்லாள என்ற ஊர் வாணர்களின் தலைநகராகிய வல்லமாக இருத்தல் வேண்டும். வல்லத்துப் போர் கி.பி. 913-ஆம் ஆண்டிற்கு முன்னர் நடைபெற்றிருக்க வேண்டும். வாணர்கள் பாலாற்றுக்கு வடக்கே சித்தூர் மாவட்டம் வரையில் உள்ள வாணகப்பாடி நாட்டை 200 ஆண்டுகளாக ஆட்சிபுரிந்து வந்தவர்கள். இவர்களின் தலைநகரம் வல்லம், வாணபுரம் ஆகும். இவர்கள் பல்லவர்களுக்கு அடங்கிய குறுநிலமன்னர்களாய் இருந்தனர் என்பதை பல நடுகற்கள் மூலம் அறியலாம். பல்லவர்களை வென்ற சோழப்படைகள் அவர்களுக்கு அடங்கிய வாணர்களை அடக்குவது தேவையாயிற்று. வல்லம் போரில் வாணர்குல மன்னன் இரண்டாம் விஜயாதித்தன் இறந்ததால்,

அவன் மகன் இரண்டாம் விக்கிரமாதித்தன் என்பவன் இராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணதேவனிடம் அடைக்கலம் புகுந்தான்.

வைதும்பர்களுடன் போர்

பராந்தகன் ரேணாடு நாட்டை அரசாண்ட தெலுங்கர்களாகிய வைதும்பர்களைப் போரில் வென்றான் என்ற செய்தியை உதயேந்திர செப்பேடுகள் தெரிவிக்கின்றன. இந்த வைதும்ப மன்னனின் பெயர் யாதென அறியக் கூடவில்லை.

சீட்புலிப் போர்

பராந்தகனது 36-ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 941) இவன் படைத்தலைவன் சிறுகுளத்தூர் மாறன் பரமேசுவரன் செம்பியன் சோழியவரையன் என்பவன் சீட்புலியை வென்று நெல்லூரையும் கைப்பற்றினான் என்ற செய்தியை திருவொற்றியூர் கல்வெட்டுகள் கூறுகின்றன. சீட்புலி என்பது நெல்லூர் மாவட்டத்தில் வடபகுதியில் இருந்த ஒரு நாடு. அந்நாளில் அது கீழைச் சாளுக்கிய அரசின் தென்பகுதியில் இருந்தது. கீழைச்சாளுக்கிய மன்னன் இரண்டாம் வீமனை வெற்றி கொள்ளவே இப்படையெடுப்பு நிகழ்ந்திருக்க வேண்டும். தென்குமரி முதல் நெல்லூர் மாவட்டத்தின் வடஎல்லை வரை பராந்தகனது சோழப் பேரரசு விரிந்து பரந்திருந்தது.

பராந்தகனின் கோயில் திருப்பணிகள்

பராந்தகன் சிறந்த சிவபக்தன். தில்லைச்சிற்றம்பலத்திற்கு பொன் வேய்ந்து அதனை பொன்னம்பலமாக்கியவன்.

'வெங்கோல் வேந்தன் தென்னாடும் ஈழமுங் கொண்டதிறற்
செங்கோற் சோழன் கோழிவேந்தன் செம்பியன்
பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடியாடும் அணிதில்லையம்பலம்'

என்று கண்டராதித்தச் சோழன் இச்செயற்கரிய பணியைப் பாடுகிறான்.[13]

'கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றல்
காதலாற் பொன்வேய்ந்த காவலனும்'

என்று ஒட்டக்கூத்தரும் போற்றிப் புகழ்ந்துள்ளார்.[14] பராந்தகனின் காலம் 'தென்னாட்டு கோயில்களின் பொற்காலம்' எனக் கூறலாம். அவன் காவிரியின் கரையில் 42-க்கும் மேற்பட்ட கோயில்களை எடுப்பித்தான். கோயில் திருப்பணிகளில் தன் தந்தை ஆதித்தனை அவன் முழுவதும் பின்பற்றினான். திருவாவடுதுறை, திருச்செந்துறை, உறுமூர், திருவிடைமருதூர் ஆகிய கோயில்களை கற்றளிகளாக்கினான். திருவாவடுதுறை கோயிலுக்கு அவனே நேர்நின்று 500 கழஞ்சு பொன் கொடுத்த செய்தியை கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[15] தனது தந்தை முதலாம் ஆதித்த சோழனுக்கு தொண்டைமானாற்றூரில் ஆதித்தேச்சுரம் என்னும் பள்ளிப்படையை எடுப்பித்தான். அவனுடைய இவ்வரிய செய்கை பின்வந்த இராஜராஜ பெருமன்னன் அரிஞ்சேச்சுவரம் என்னும் பள்ளிப்படையை கட்டுவிக்க முன்னோடியாக அமைந்தது எனில் மிகையில்லை.

குடிகளைப் போற்றுதல்

நிலவுடைமைக் கொள்கை சோழர்கள் காலத்தில் பராந்தகன் ஆட்சியிலேயே தொடங்கியது எனலாம். கரையீடு, கரையாண்மை மூலம் நிலத்தைப் பங்கீடு செய்து வேளாண்மை சிறக்கச் செய்வது அவனுடைய நோக்கமாக இருந்தது. சிதம்பரத்திற்கு மேற்கே உள்ள காட்டுமன்னார் கோயில் என்னும் ஊர் வீரநாராயண சதுர்வேதிமங்கலம் என்றழைக்கப்பட்டது. மற்றும் அவ்வூரின் வடக்கே 'வீரநாராயணன் ஏரி' ஒன்றினை அமைத்தான். சோழ சிங்கபுரத்திற்கு அண்மையில் சோழவாரிதி என்னும் ஏரி இவன் ஆட்சிக் காலத்தில் தோண்டப் பெற்றது. கிராமசபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் குடவோலைமுறை உத்திரமேரூர் கல்வெட்டில் இவனது ஆட்சித்திறமையைப் பறைசாற்றுகின்றன.

பராந்தகனது சிறப்புப் பெயர்கள்

வீரநாராயணன் என்ற சிறப்புப் பெயர் பல போர்களில் வெற்றிகொண்டதாலும், இராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனைப் போரில் வென்றதால் *வீரசோழன்* என்ற பெயர் பெற்றதாகவும் கன்னியாகுமரி கல்வெட்டு கூறுகிறது. புலவர்களை அன்போடு ஆதரித்து வந்ததால் *பண்டித வத்சலன்*, மற்போரில் வல்லவனாகவும், வலிமை மிக்கவனாகவும் விளங்கியதால் *குஞ்சரமல்லன்*, இராமனைப் போல் ஈழநாட்டில் போர் நிகழ்த்தி வென்ற *சங்கிராம ராகவன்*, பாண்டிய நாட்டை வென்று அப்பேரரசை சோழப் பேரரசோடு இணைத்ததால் *இருமுடிச்சோழன்* எனவும் பட்டங்கள் பெற்றான்.[16]

பராந்தகன் குடும்பம்

பராந்தகனுக்கு தேவிமார் பலர் ஆவர். இராசாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன், உத்தமசீலி என நான்கு புதல்வரும், வீரமாதேவி, அநுபமா என்ற இருமகளிரும் இருந்தனர்.[17] இராசாதித்தன் தாயாகிய கோக்கிழானடிகளே பட்டத்தரசியாக விளங்கியவள். அரிஞ்சயன் தாய் பழுவூரில் வாழ்ந்த கேரள மன்னனாகிய பழுவேட்டரையன் மகளாவாள். அருமொழிநங்கை, வில்லவன் மாதேவி, திரிபுவன மாதேவி, வளவன் மாதேவி, சோழசிகாமணி, சோழ மாதேவி, தென்னவன் மாதேவி ஆகியோர் மற்ற அரசிகள் ஆவர். இராசாதித்தன் தந்தை இருக்கும் பொழுதே தக்கோலப்போரில் உயிர்துறந்தான். மகள்கள் வீரமாதேவி இராஷ்டிரகூட மன்னன் நான்காம் கோவிந்த வல்லவரையனையும், அநுபமா கொடும்பாளூர் சிற்றரசன் பூதி விக்கிரம கேசரியையும் மணந்தார்கள்.

பராந்தகன் தன்மகன் பெருவீரன் இராசாதித்தனை போரில் இழக்க நேர்ந்தமையால் பெருங்கவலையும் துன்பமும் கொண்டு கி.பி. 953-இல் இறந்திருக்க வேண்டும். தன் இரண்டாம் புதல்வனாகிய கண்டராதித்தனுக்கு கி.பி. 950-இல் இளவரசு பட்டம் கட்டி அரசாங்க அலுவல்களைக் கவனித்து வருமாறு செய்தான்.

இராசாதித்தன் (கி.பி.936-949)

இராசாதித்தன் தன் தந்தை காலத்திலேயே தக்கோலப்போரில் இறந்தனன். இவன் தன் தந்தை பராந்தகனால் சோழப்பேரரசின் வடபகுதியைக் கண்காணிக்க நியமிக்கப்பட்டான். திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருநாவலூரில் அவன் தன் படைகளோடு தங்கியிருந்து, அங்கு இராசாதித்தபுரம் என்னும் ஊர் அமைத்து, இராசாதித்தேச்சுவரம் என்னும் கோயிலை எடுப்பிக்க, அக்கோயிலுக்கு அவன் படைவீரர்களும், பணிமக்களும் பல நிவந்தங்களை அளித்துள்ளனர் என்பதை அங்குள்ள கல்வெட்டுக்களால் அறியலாம். அவன் நண்பனும், படைத்தலைவனுமாகிய சேரநாட்டு நந்திக்கரைக் புத்தூரினைச் சேர்ந்தவனாகிய வெள்ளங்குமரன் என்பவன் முடியூரில் படைகளோடு தங்கி, கி.பி. 943-இல் ஆற்றுத்தளி என்ற சிவன் கோயில் ஒன்றை எடுப்பித்ததைக் கல்வெட்டு கூறுகின்றது.

கி.பி.949-இல் இராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணதேவன், கங்கமன்னனாகிய இரண்டாம் பூதுகனோடு சேர்ந்து பெரும்படையுடன் தொண்டைநாட்டைத் தாக்கினர். இப்பெரும்போர் வடஆர்க்காடு மாவட்டம், அரக்கோணம் தென்கிழக்கே தக்கோலம் என்னுமிடத்தில் நடைபெற்றது. இப்போரில் இராசாதித்தன் கங்கமன்னன் விடுத்த அம்பினால் யானை மேலிருந்து உயிர்நீங்கினான். கும்பகோணம், திருவிடைமருதூர், திருவெள்ளறை முதலான ஊர்களில் காணப்படும் கல்வெட்டுகள் இவனை 'ஆனைமேற்றுஞ்சினார்' என்று குறிப்பிடுகின்றன.[18]

கண்டராதித்த சோழன் (கி.பி.950-957)

கண்டராதித்தன் பராந்தகனுக்குப் பின் இராஜகேசரி என்ற பட்டத்துடன் சோழ அரியணையில் அமர்ந்தவன். தென்ஆர்க்காட்டில் மும்முடிச் சோழ கண்டராதித்தனின் 2-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றும், திருச்சிராப்பள்ளியில் கிடைக்கும் அவனது 8-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டும் இவனது ஆட்சியைச்

சுட்டுகின்றன. இவன் கொள்ளிடப்பேராற்றிற்கு வடகரையில் திருமழபாடிக்கு மேற்கே கண்டராதித்தச் சதுர்வேதிமங்கலம் என்ற ஊர் ஒன்றை அமைத்தான் என்று ஆனைமங்கலச் செப்பேடுகள் கூறும். விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம் உலகாபுரத்திலுள்ள ஒரு கல்வெட்டு 'கண்டராதித்தப்பேரேரி' ஒன்றை இம்மன்னன் அமைத்ததைக் கூறுகிறது.[19]

இவன் சிறந்த சிவபக்தன். இவனது திருவிசைப்பா பாடல், இவனது தந்தை முதலாம் பராந்தகன் சிதம்பரம் கோயிலுக்கு பொன்வேய்ந்ததைக் குறிப்பிடுகிறது. தன்னைக் கோழி (உறையூர்) மன்னன் என்றும், தஞ்சையார் தலைவன் என்றும் கூறிக்கொள்கிறான். 'மேற்கெழுந்தருளிய தேவர்' என்றும் அழைக்கப்பட்டான்.

செம்பியன் மாதேவி

கண்டராதித்தனின் பட்டத்தரசியான இவ்வம்மையார் உத்தமச் சோழனை திருவயிறு வாய்த்தவர். தன் இளவயதிலேயே கணவனையும், பின்பு தன் மகனையும் இழந்தவர். மிகச் சிறந்த சிவபக்தர். இவ்வரசியார் பல சிவன் கோயில்களை எடுப்பித்ததோடு கோனேரிராஜபுரம் கோயில் 'கண்டராதித்தம்' கற்றளிக்கு பல நிவந்தங்களையும் வழங்கியுள்ளார். செம்பியன் மாதேவியார் கலைப்பாணி என்று போற்றப்படும் அளவுக்கு அவர் பல கோயில்களுக்கு வழங்கிய செப்புத்திருமேனிகள் எழிலார்ந்தவை.

அரிஞ்சய சோழன் (கி.பி.956-957)

கண்டராதித்தனுக்குப் பின் அவன் இளையன் பரகேசரி என்ற பட்டத்துடன் அரிஞ்சயன் முடிசூட்டப் பெற்றான். முதலாம் பராந்தகனின் பட்டத்தரசி கேரளஅரசனான பழுவேட்டரையன் மகள்பாற் பிறந்தவன். இவன் தன் தமையன் இராசாதித்தன் சோழப் பேரரசின் வடபகுதியைப் பாதுகாத்துக் கொண்டிருந்த காலத்தில் அவனுக்கு உதவிபுரிய திருக்கோவலூரில் பெரும் படையுடன் தங்கி இராஷ்டிரகூடருடன் நடந்த போரில் பங்குபெற்றான். இவ்வேந்தன் சோழ பேரரசின் வடபகுதியாகத் தன் தந்தையின்

காலத்திலிருந்த திருமுனைப்பாடி நாட்டையும், தொண்டை நாட்டையும் கைப்பற்றுவதற்குப் பெரும் படையுடன் புறப்பட்டிருக்க வேண்டும். போர்பற்றிய கல்வெட்டுகள் ஏதும் இதுவரை கிடைத்தில. வடஆர்க்காடு மாவட்டம் ஆற்றூரில் இவன் இறந்ததை 'ஆற்றூர்த்துஞ்சின தேவர்' என சில கல்வெட்டுகள் கூறுவதால் அறியலாம்.[20] மேல்பாடி 'அரிஞ்சயேச்சுரம்' என்னும் பள்ளிப்படைக் கோயில் இவன் நினைவாக முதலாம் இராசராசன் எடுப்பித்த கற்றளியாகும்.

சுந்தர சோழன் (கி.பி.957-970)

அரிஞ்சயனின் மகனாகிய இரண்டாம் பராந்தகனே தன் அழகிய உருவமைதியினால் இச்சிறப்புப் பெயர்பெற்றவன். இம்மன்னன் 'மதுரை கொண்ட கோ இராசகேசரிவர்மன்', எனவும், வீரபாண்டியனை வெற்றிகொண்டு அவனை ஒளிந்தோடச் செய்ததால் 'பாண்டியனை சுரம் இறக்கின பெருமாள் ஸ்ரீசுந்தரசோழ தேவர்' எனவும், கொடும்பாளூர் கல்வெட்டில் 'மதுராந்தகன் சுந்தரசோழன்' என்றும் புகழப்பெற்றவன். தம் முன்னோர் இராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனிடம் இழந்த திருமுனைப்பாடி நாட்டையும், தொண்டைநாட்டையும், கி.பி. 963 இவன் தன் ஆட்சிக்குட்படுத்தினான். இச்சோழனின் அமைச்சனான மழநாட்டு அன்பில் ஊரைச்சேர்ந்த அநிருத்தபிரமாதி ராஜன் என்பவனுக்கு இவ்வரசன் திருவழுந்தூர் நாட்டிலுள்ள கருணாகரமங்கலம் என்னும் ஊரை இறையிலியாக வழங்கியமைக்கான செப்பேடுகளான அன்பில் செப்பேடுகள் தான் நமக்குக் கிடைத்த காலத்தால் முந்தைய சோழர் செப்பேடு என்று கருதப்பெற்றது.

விழுப்புரம் மாவட்டம் உலகாபுரம் என்னும் ஊரில் சுந்தரச்சோழப்பெரும் பள்ளி என்னும் புத்தகோயில் ஒன்றும், வடஆர்க்காடு மாவட்டம் பிரமதேசம் என்ற ஊரில் சுந்தரச்சோழப் பேரேரி ஒன்றும் இவனால் அமைக்கப் பட்டன. திருமெய்யத்தில் சுந்தரசோழபுரம் ஒன்றும் இருந்தது. இவன் தமிழ்ப்புலவர்களை ஆதரித்துள்ளான். இவன்மேல் பாடிய இரண்டு பாடல்கள் வீரசோழிய உரையில்

மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.[21] கி.பி. 969-ஆம் ஆண்டில் தன் முதல் மகனாகிய ஆதித்த கரிகாலனை பாண்டிய பிரமாதிராயர் இருவர் வஞ்சனையால் கொன்றமையால், மிகுந்த துயரத்தில் மூழ்கி அவ்வாண்டிலேயே காஞ்சிமாநகரிலிருந்த பொன்மாளிகையில் உயிர்துறந்தான்.[22]

ஆதித்தகரிகாலன் (கி.பி.966-970)

வீரபாண்டியனைத் தலைகொண்ட கோப்பரகேசரிவர்மன் என்ற பட்டம் பெற்றவனும், இளவரசனாயிருந்தபோதே பாண்டிய பிரமாதிராயர்களால் கொல்லப் பட்டவனும், சுந்தர சோழனின் மூத்த மகனுமான ஆதித்தகரிகாலன் ஆவான். ஆனைமங்கலச்செப்பேடுகள் இவன் புலிக்குட்டி போன்று போர்க்களத்தில் துள்ளிக்குதித்து பாண்டியனோடு போரிட்டதை பெருமையுடன் விவரிக்கிறது. சிதம்பரம் வட்டம் காட்டுமன்னார்குடி கோயிலுக்கு அருகிலுள்ள உடையார் குடியில் காணப்படும் கல்வெட்டொன்று, இவ்வரசகுமாரனைக் கொன்றவர்கள் சோமன் ரவிதாசனான பஞ்சவன், பிரமாதி ராஜன், மலையனூரானான ரேவதாசக் கிரமவித்தன் என்போராகக் காட்டுகிறது. மேலும் இராசராசன் ஆட்சியின் இரண்டாம் ஆண்டில் அவர்களுக்கு தண்டனை வழங்கப் பட்டதையும் தெரிவிக்கிறது. புள்ளமங்கை திருக்கோயிலில் உள்ள ஆதித்த கரிகாலனின் 5-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டொன்று, இவ்வூர் திருமணி மண்டபத்திலுள்ள காளாபிடாரிக்கு திருவமுது செய்துவிக்க வழங்கப்பட்ட நிவந்தங்களைக் குறிப்பிடுகிறது.[23]

உத்தமசோழன் (கி.பி. 970-985)

உத்தமசோழன் திருவிசைப்பா பாடிய சோழமன்னன் கண்டராதித்தன், செம்பியன் மாதேவியார் வாழ்நாளெல்லாம் சிவப்பணிக்கு தம்மை அர்ப்பணித்த பெற்றோருக்கு பிறந்தவன். இவன் தன் குழந்தைப் பருவத்தில் தந்தையை இழந்தவன். அரசமுடி பெற அவன் காத்திருக்க வேண்டியதாயிற்று. காஞ்சிபுரம், திருமால்புரம், திருமுனைப்பாடி ஆகிய இடங்களில் இம்மன்னனது ஆட்சியாண்டு கல்வெட்டுகள் காணக்கிடக்கின்றன. அவை

யாவும் இவன் தாய் செம்பியன் மாதேவியும், பட்டத்தரசிகளும் புரிந்த அறச்செயல்களை விளக்குகின்றன. திருமால்புரம் கல்வெட்டுகள் வரிஏய்ப்பு குற்றங்களை விசாரித்து உரிய தண்டனை வழங்கியதை எடுத்தியம்புகிறது. இம்மன்னன் மதுராந்தகன் என்றும் அழைக்கப்பட்டதை 'ஸ்ரீ மதுராந்தக தேவரான உத்தம சோழரைத் திருவயிறுவாய்த்த உடையபிராட்டியார்' என்னும் கல்வெட்டினால் அறியலாம்[24]. நடுவில் புலியுருவம் பொறிக்கப்பட்டு, 'உத்தமசொழ' என்று நாகரியில் எழுதப்பெற்ற பொற்காசு ஒன்றினை இவன் வெளியிட்டான். இவன் தனது 11-ஆம் ஆட்சியாண்டில் வெளியிட்ட பெயரில்லா செப்பேடுகள் ஒன்று சென்னை அருங்காட்சியத்தில் உள்ளது.[25]

முதலாம் இராசராசன் (கி.பி.985-1014)

சோழர் குலத்தின் மாணிக்கமாக விளங்கிய இப்பெருவேந்தன் சுந்தரசோழனுக்கும், பட்டத்தரசியார் வானவன்மாதேவிக்கும் பிறந்த அரும்தவப்புதல்வன். இராசராசனின் ஆட்சிக்காலம் சோழர்களின் பொற்காலமாகும். அருண்மொழிவர்மன் என்ற பெயர் கொண்ட இவன் தான் பிறந்த ஐப்பசித் திங்கள் சதயநாளில் திருநந்திக்கரை கோயிலுக்கு இறையிலியாக நிலம் வழங்கி விழா நடத்த ஏற்பாடு செய்தான்.[26] அவ்வாறே திருவெண்காட்டு இறைவர்க்கும் விழா நடைபெற்றது. தன் சிறிய தந்தை உத்தம சோழன் ஆட்சிக்குப் பின் கி.பி.985-இல் இராசகேசரி என்ற புனைவுடன் முடிசூடிய இப்பெருமகன் பிறப்பிலே இத்தகு பேரரசனாய் திகழ உத்தம இலக்கணங்களை பெற்றிருந்தான். ஆதிசேடன் மனைவியர் தம் கணவர்க்கு இனி நிலப்பொறை குறைந்துவிடும் என உவகை கொண்டதாக திருவாலங்காட்டு செப்பேடுகள் இவன் பிறப்பினை சிறப்பிக்கின்றன.[27]

இவனது ஆட்சியின் 4-ஆம் ஆண்டு செங்கற்பட்டு மதுராந்தகத்தில் வரையப்பெற்றுள்ள கல்வெட்டொன்று இவனைக் காந்தளூர்ச்சாலைக் கலமறுத்தருளிய கோ இராசகேசரிவர்மன்' என்று கூறுகிறது.[28] காந்தளூர்ப்போர் சேரன் பாஸ்கரரவி வர்மனுக்கு எதிராக கி.பி.988-இல்

நடந்தது. அந்நாளில் சேரருக்கு உதவும் பொருட்டு இராசராசனின் பெரும்படையை வழிமறித்து எதிர்த்த பாண்டியன் அமரபுயங்கனையும் வெற்றி கண்டு, 'செழியரைத் தேசுகொள் கோவிராசகேசரி வர்மன்' என்று புகழப்பட்டவன். அரசர்களுக்கு மெய்க்கீர்த்திகள் வழங்கும் வழக்கினை இவன் தொடக்கி வைத்தான். இப்பேரரசனின் மெய்க்கீர்த்தி, 'திருமகள் போல பெருநிலச்செல்வியும்' என்று தொடங்கி, அவனின் ஒவ்வொரு வெற்றியும் நிரல் வரிசையில் இத்துடன் இணைக்கப்பட்டது. இராசகேசரியின் மெய்க்கீர்த்தியினை நோக்குங்கால் அவன் மாபெரும் சோழச் சக்கரவர்த்தியாக பரந்த சோழப் பேரரசின் நிலப்பரப்புக்கு விளங்கியமை நன்கு புலப்படும். கடற்போரில் முந்நீர் பழந்தீவு பன்னீராயிரமும், ஈழநாடு, கொல்லம், கலிங்கம், குடமலைநாடு. கங்கபாடி, தடிகைபாடி, நுளம்பபாடி ஆகிய பல பகுதிகள் இவன் ஆட்சியின் எல்லைக்குட்பட்டதோடு, சோழப்பேரரசு இவ்வெற்றிகளின் மூலம் மிகுந்த பொருள்வளத்தையும் பெற்றது. பெருஞ்செல்வமும், பெருநிலமும் உடைய பேரரசன் செய்யத்தக்க உயர்ந்த அரிய பல செயல்களை இராசராசன் தன் ஆட்சிக்காலத்தில் செய்தான்.

தனது 16-ஆம் ஆட்சியாண்டில் 'உலகளந்தான் கோல்' என்ற நில அளவுகளைக் கொண்டு சோழநாடு முழுவதும் அளந்ததும், தஞ்சை பெருவுடையார் கோயிலை எடுப்பித்ததுவும் அவற்றில் முக்கியமானவை. தன் பாட்டனார் அரிஞ்சயதேவர்க்கு மேல்பாடியில் ஒரு பள்ளிப்படைக் கோயிலும், உத்தமசோழனின் தாயும், தன் பாட்டியுமான செம்பியன் மாதேவியின் நினைவாக திருமுக்கூடலில் ஒரு மணி மண்டபமும் எடுப்பித்தான். சிறந்த சிவபக்தனாக விளங்கிய சிவபாதசேகரன் தாம் எடுப்பிச்ச திருக்கற்றளியின் ஸ்ரீவிமானத்தின் கல்லில் தாம் கொடுத்தனவும், தம் அக்கன் கொடுத்தனவும், தம் பெண்டுகள் கொடுத்தனவும், கொடுப்பார் கொடுத்தன வற்றையும் வெட்டுவித்தான்.

சமயப்பொறை கொண்டு விளங்கிய இப்பெருவேந்தன் நாகையில் பௌத்தப்பள்ளி ஒன்றுக்கு ஆனைமங்கலம் என்ற ஊரை பள்ளிச்சந்தமாக கொடையளித்தான் என்பதை லெய்டன் செப்பேடுகள் கூறுகின்றன. அவனது தஞ்சை பெரியகோயிலில் அமைந்துள்ள சிற்பங்களைக் காண்கையில் வைணவ, பௌத்த மதங்களுக்கும் அவன் அளித்துள்ள பெருமை விளங்கும். நித்தவிநோதனான இவன் கலைகளில் பேரார்வம் கொண்டவன். நானூறு தளிச்சேரி நாட்டிய பெண்டுகளை இக்கோயிலின் கலைச்சேவையில் ஈடுபடுத்தினான். கோயிலில் நாளும் திருமுறையோதவும், இசைக்கருவிகள் முழங்கவும் பலநிவந்தங்களை அளித்தான்.

முதலாம் இராஜேந்திர சோழன் (கி.பி. 1012-1044)

இவன் 'கங்கையும் கடாரமும் கொண்ட கோப்பரகேசரி வர்மன்' என்ற பட்டத்தோடு முடிதரித்த பெருவேந்தன் இராசராசனின் தவப்புதல்வன் ஆவான். மதுராந்தகன் என்ற இயற்பெயர்கொண்ட இம்மன்னன் ஈடுஇணையற்ற மாவீரன்[29]. கடல் கடந்து சென்று ஈழப்போர் புரிந்து சோழர்களின் கனவாகிய பாண்டிய முடியைக் கொணர்ந்தவன். கடற்போரில் சிறந்து விளங்கியவன். தன் தந்தை புரிந்த போர்கள் அனைத்திலும் துணைநின்று வெற்றி ஈட்டியவன். இவனது மெய்க்கீர்த்தி 'திருமன்னி வளர' என்று தொடங்கி மிக நீளமான அதிக வரிகளைக் கொண்டு இவன் புகழ் இயம்புகிறது.[30] வடநாட்டின் மீது படையெடுத்து, கங்கைப்பகுதியை வென்று, அவ்வெற்றியின் நினைவாக 'கங்கைகொண்ட சோழபுரம்' என்ற புதிய தலைநகரை நிர்மாணித்து, 'சோழகங்கம்' என்ற புதிய ஏரியினை வெட்டுவித்து, அவ்வூரில் தந்தை இராசராசனின் பெருவுடையார் கோயிலைப் போன்றே கங்கை கொண்ட சோழீச்சுரம் என்னும் மாபெரும் கற்றளியை உருவாக்கினான். இராஜேந்திரன் தான் ஆட்சிக்கு வந்து சில ஆண்டுகளிலேயே தன் புதல்வன் முதலாம் இராசாதிராசனுக்கு பட்டம் சூட்டினான்.

முதல் இராசாதிராச சோழன் (கி.பி.1018-1054)

முதலாம் இராஜேந்திரனின் நான்கு புதல்வருள் மூத்தவன் இவன். திருமால்புரத்தில் இவன் ஆட்சியாண்டு கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. இம்மன்னன் மூன்று மெய்க்கீர்த்திகளைப் பெற்றவன். திங்களேர் பெறவளர், திங்களேர் தரு, திருக்கொடியோடு தியாகக்கொடி என்று தொடங்கும் மெய்க்கீர்த்திகள் இவனுடையவை. இவன் பல அரசர்களை வென்று அசுவமேதம் செய்து ஜெயங்கொண்ட சோழன் என்ற சிறப்புப் பெற்றவன். மேலைச் சாளுக்கியருடன் ரோடு நடைபெற்ற கொப்பம் போரில் யானை மீதிருந்து உயிர் துறந்து 'கல்யாணபுரமும் கொல்லாபுரமும் எறிந்து யானை மேல் துஞ்சின உடையார் விஜயராசேந்திரதேவர்' என்று கல்வெட்டுகளினால் புகழப்படுகிறான்.[31]

இராசமகேந்திரன்

இம்மன்னன் இரண்டாண்டுகளே ஆட்சிபுரிந்தான். இவனுடைய கல்வெட்டுகள் சோழ மண்டலத்தில் கிடைக்கின்றன.

இரண்டாம் இராஜேந்திர சோழன் (கி.பி.1051-1063)

கங்கைகொண்ட சோழனின் இரண்டாம் புதல்வனாகிய இவன் தன் தமையன் இராசாதிராசனின் பலபோர்களில் துணைநின்று குந்தள நாட்டுடனான கொப்பம் போரில் அவன் உயிரிழந்த போது போர்க்களத்திலே முடிசூடிக் கொண்டு, சோழப்படைகளுக்கு எழுச்சியூட்டி ஆகவ மல்லனை வென்றான் என்பது திருமழபாடியிலுள்ள கல்வெட்டுச் செய்தியாகும்.[32] தென்னார்க்காடு மரக்காணம் கல்வெட்டொன்று இவ்வூர் தம்பித்துணைச் சோழ வளநாட்டில் உள்ளதாக குறிப்பிடுகிறது. இது மேற்சொன்ன கூற்றை மெய்ப்பிக்கும் சான்றாகும். கலைகளில் பற்றுடைய இவன் தஞ்சை பெரியகோயிலில் இராசராசேச்சுர நாடகம் நடத்துவதற்கு ஆண்டொன்றுக்கு 120 கலநெல் நிவந்தமாக அளித்துள்ளான். கலிங்கத்துப் பரணியிலும், மூவருலாவிலும் போற்றப்பட்டுள்ளான்.

இவன் வெளியிட்ட செப்பேட்டுத் தொகுப்பு இந்தளூர் கழுக்காணிமுட்டம் என்ற ஊரில் கிடைத்துள்ளது. அதில் உள்ள சமஸ்கிருதப் பகுதி சோழர் வரலாறு பற்றி பல அரிய செய்திகளைக் கொண்டுள்ளது. விசயாலயன் தஞ்சையைக் கம்பவர்மனிடமிருந்து கைப்பற்றினான் என்று கூறுகின்றது.[33] சோழர் செப்பேடுகளிலேயே மிகுந்த எண்ணிக்கை (86)யைக் கொண்டது இந்தச் செப்பேட்டுத் தொகுப்பு ஆகும்.

வீரராசேந்திரன்

இம்மன்னன் ஏழு ஆண்டுகள் ஆண்டான். இவனுடைய குறுகிய ஆட்சி காலத்தில் பல அரிய செயல்கள் நடைபெற்றன. சமயம், கலை, பண்பாடு, அரசியல் ஆகிய துறைகளில் பல அரிய நிகழ்வுகள் நடந்ததை இவனது ஆட்சியாண்டு கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. திருவொற்றியூர் கோயிலில் இம்மன்னனது பல கொடைக் கல்வெட்டுகள் உள்ளன. திருவெண்காட்டில் கிடைக்கும் கல்வெட்டொன்று கன்யாபூசைக்கு நிவந்தம் அளித்த செய்தியைக் கூறுகின்றது. இம்மன்னன் ஆட்சிக்காலத்தில் தான் வீரசோழியம் என்ற தமிழ் இலக்கணநூல் எழுதப்பெற்றது. இவன் காலத்திலும் நடைபெற்ற கொப்பத்துப் போரில் இவ்வரசனே வெற்றி வாகை சூடினான்.

அதிராசேந்திரன்

இம்மன்னன் இரண்டாண்டு காலமே ஆட்சி செய்தான். நோய்வாய்ப்பட்டு இறந்துபட்டான். இவன் உடல்நலம்பெற திருவொற்றியூர் கோயிலுக்கு கொடைகள் அளிக்கப்பட்டதை அங்குள்ள கல்வெட்டுகள் கூறுகின்றன. இவனுக்குப்பின் சோழநாட்டில் குழப்பம் மிகுந்திருந்தது. அதனை சரிசெய்து ஆட்சிக் கட்டிலேறினான் முதலாம் குலோத்துங்கன்.

முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1070-1120)

முதலாம் இராஜேந்திரச் சோழனின் பேரனான குலோத்துங்கச் சோழனின் இயற்பெயர் இராஜேந்திரன் ஆகும். அதிராஜேந்திரனுக்குப் பின் சோழஅரசியலில் ஏற்பட்டக் குழப்பத்தினாலும், கலகத்தினாலும் அதனை

அடக்கும் பொருட்டும், நாட்டில் அமைதி ஏற்படவும் வழிகோலிட சோழநாட்டின் அரசபதவியை இராசகேசரி என்ற பட்டத்துடன் ஏற்றான். இவன் தாய் கங்கை கொண்ட சோழமன்னனின் புதல்வியும், கீழைச்சாளுக்கிய மன்னன் இராசராச நரேந்திரனின் அரசியாருமான அம்மங்கை தேவியாராவார். தாயாதி நிலத்தை ஆளப்பிறந்த இவன் பூச நட்சத்திரத்தன்று பிறந்தவன் என்பதை குண்டூர் மாவட்டம் பாபட்லாவிலுள்ள திருமால் கோயிலில் காணப்படும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

இவ்வேந்தன் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி புரிந்துள்ளான். தமிழ்நாட்டிலும், மைசூர்ப் பகுதியிலும், தெலுங்கு நாட்டிலும் இவன் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இம்மன்னனுக்கு பல மெய்க்கீர்த்திகள் உள்ளன. 'திருமன்னி விளங்கும்' மற்றும் 'புகழ்மாது விளங்கச் செயமாது விரும்ப' என்று தொடங்கும் மெய்க்கீர்த்திகள் இவனின் நான்காம் ஆட்சியாண்டிலிருந்து கிடைக்கிறது. கலிங்கத்துப்பரணியின் நாயகன் இவனே ஆவான். குலோத்துங்கன் இரண்டு கலிங்கப்போர்களை நடத்தி வெற்றிகண்டான். 72 ஆண்டுகள் கலிங்கத்தை ஆண்டவன் அனந்தவர்ம சோழகங்கன். இவனை சோழப்படையின் தளபதி கருணாகரத் தொண்டைமான் வெற்றி கொண்ட நிகழ்வே கலிங்கத்துப்பரணி இலக்கியமாகும். மேலும் குலோத்துங்கன் மேலைச் சாளுக்கியர், பாண்டியரோடும் போர்களை நடத்தி வெற்றி பெற்றான். சீனா, கம்போடியா நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தான். இவன் தன் ஆட்சியில் நாட்டில் சுங்கவரியை நீக்கி, 'சுங்கம் தவிர்த்த சோழன்' என புகழப்பெற்றான். இவன் 52 ஆண்டுகள் ஆண்டான் என்பர். ஆனால் கிருஷ்ணகிரி மாவட்டம் கைலாவரம் நடுகல் இவனது 54-ஆம் ஆட்சியாண்டைக் குறிப்பிடுகின்றது.[34]

விக்கிரமச்சோழன் (கி.பி.1118-1136)

முதலாம் குலோத்துங்கனின் நான்காம் மகன் தன் தந்தையின் வேங்கிநாட்டில் அரசப்பிரதிநிதியாய் இளமையில் இருந்தவன். கி.பி.1120-இல் பரகேசரி பட்டத்துடன்

முடிசூட்டிக் கொண்டான். காஞ்சிபுரம் மாவட்டம் சிவன்கூடல் என்னும் ஊரிலுள்ள கோயிலில் இவன் பிறந்த ஆனித்திங்கள் உத்திரட்டாதி நாள்முதல் ஏழுநாட்கள் விழா நடத்த நிலம் அளிக்கப்பட்டச் செய்தியை அங்குள்ள கல்வெட்டால் அறியலாம்.[35] 'பூமாலை மிடைந்து பொன்மாலை திகழ', 'பூமாது புணரப் புவிமாது வளர' என்ற இரண்டு மெய்க்கீர்த்திகள் இவனுடையவை.[36] இம்மன்னனின் ஆட்சியின் ஆறாம் ஆண்டில் கி.பி.1125-இல் பெருவெள்ளம் ஏற்பட்டு, தொண்டை மற்றும் நடுநாடுகளிலும், கி.பி. 1130-இல் இவனது 11-ஆம் ஆட்சியாண்டில் சோழநாட்டிலும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது.[37]

இவனது அவைப்புலவர் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் ஆவார். அவர் பாடிய பிள்ளைத்தமிழிலும், விக்கிரமச்சோழனுலாவிலும், தக்கயாகபரணியிலும் இவன் பாடப்பெற்றான். தில்லையின் திருத்தேரை பொன்வேய்ந்து, முத்துவடங்களால் அலங்கரித்தவன். தில்லைச் சிற்றம்பலத்தைச் சூழ்ந்துள்ள முதல் திருச்சுற்று மாளிகை 'விக்கிரமசோழன் திருமாளிகை' எனப்பட்டதை கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இக்கோயிலிலுள்ள நூற்றுக்கால் மண்டபம் ஒன்றும் இவன் பெயரால் வழங்கப்பட்டு வருகிறது.[38] தியாகசமுத்திரம், அகளங்கன் என்ற சிறப்புப்பெயர்களைக் கொண்ட இவன் தியாகசமுத்திர சதுர்வேதி மங்கலம் என்ற ஊரை திருவிடைமருதூர் கோயிலுக்கு இறையிலி தேவதானமாக அளித்தான் என்பதை அவ்வூர் கல்வெட்டொன்று கூறுகிறது.

இரண்டாம் குலோத்துங்க சோழன் (கி.பி.1133-1150)

'பூமன்னுபாவை' எனவும், 'பூமன்னுபதுமம', 'பூமன்னுயாணர்', 'பூமருவிய புவியேழும்', 'பூமேவி வளர், பூமேவு திருமகள் என பல தமிழ் மணங்கமழும் மெய்க்கீர்த்திகளைக் கொண்ட இந்த அநபாயன் என்னும் நிகரிலிச் சோழன் விக்கிரமனின் மகன். திருமாணிக்குழி கல்வெட்டொன்று 'தில்லைத் திருநகர் சிறப்புடையதாகத் திருமுடி சூடிய ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்' என்கிறது.

இரண்டாம் இராசராசன் (கி.பி. 1146-1163)

இரண்டாம் குலோத்துங்கனின் மகன். பரகேசரி பட்டம் பெற்று கி.பி. 1150-ல் அரசு பொறுப்பேற்றவன்.தொண்டை நாட்டிலும் சோழ நாட்டிலும் இம்மன்னனது 18,19-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுகள் கிடைக்கின்றன. 'பூமருவிய திருமாதும்' எனவும், 'பூமருவிய பொழிலேழும்' எனவும் இவன் மெய்க்கீர்த்திகள் தொடங்கும்.[39] இவனே தாராசுரத்திலுள்ள 'ராசராசேச்சுரம்' என்னும் அழகிய சிற்பங்கள் நிறைந்த ஐராவதேசுவரர் கோயிலை எடுப்பித்தவன். கவிச்சக்கரவர்த்தி ஓட்டக்கூத்தரால் மூவருலாவில் பாடப்பெற்றவன். தக்கயாக பரணியிலும் போற்றப்பெற்றவன். இவன் காலத்திலேயே பெரியபுராணக் கதைகள் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கு இவன் எடுப்பித்த தாராசுரம் கோயிலில் விளங்கும் புடைப்புச் சிற்பங்களே சான்று பகர்கின்றன. இவன் 'இராசபண்டிதன்' என்றும், 'இராசகம்பீரன்' என்றும் சிறப்புப் பெயர்கள் பெற்றவன்.போசளர்கள் காவிரிநீரைத் தேக்க அணை கட்டினர். அந்த அணையைத் தகர்த்து காவிரியில் நீர் வர ஏற்பாடு செய்து 'காவிரிக்கு வழி கண்டவன்' என்று இராசராச சோழனுலாவில் புகழப்படுகிறான்.

இரண்டாம் இராதிராசன் (கி.பி.1163-1178)

இரண்டாம் இராசராசனுக்குப்பின் இரண்டாம் இராசாதிராசன் ஆட்சிக்கு வந்தான். இவன்காலத்தில் பாண்டியர் தாயாதி சண்டை நடைபெற்றது. இந்தத் தாயாதித் சண்டையில் குலசேகர பாண்டியனும், பராக்கிரம பாண்டியனும் போர் புரிந்து கொண்டிருந்தனர். குலசேகரனுக்கு இரண்டாம் இராசாதிராசனும், பராக்கிரம பாண்டியனுக்கு இலங்கை அரசன் பராக்கிரம பாகுவும் உதவினர். இந்தச் சண்டையைப் பற்றி தொண்டைநாட்டில் மூன்று கல்வெட்டுகளும், சோழநாட்டில் ஒரு கல்வெட்டும் குறிப்பிடுகின்றன. இந்தப் போர் சோழர்களுக்கும், இலங்கை நாட்டிற்குமிடையில் நடைபெற்ற போராகவே இருந்தது. போரில் வெற்றி தோல்வி மாறி மாறி வந்தாலும், இறுதியில் சோழர்படை வென்றது. அதனால் இம்மன்னனுக்கு கரிகாலன் என்ற சிறப்புப் பெயரும் உண்டு.[41]

மூன்றாம் குலோத்துங்க சோழன் (கி.பி.1178-1218)

இரண்டாம் இராசராசனின் புதல்வனாகிய இவன் பரகேசரி பட்டம் புனைந்து ஆட்சிபுரிந்தவன். இவன் நாற்பது ஆண்டு காலம் ஆட்சியிலிருந்தான். 'புயல் வாய்த்து வளம் பெறுக', 'பூமருவிய திசை முகத்தோன்' என்ற இரு மெய்க்கீர்த்திகளும் முறையே இம்மன்னனின் மூன்று மற்றும் ஐந்தாம் ஆட்சியாண்டு கல்வெட்டுகள் இடம்பெறுகின்றன. வீர பாண்டியனோடு மூன்று போர்களை நிகழ்த்தி அப்பாண்டியர்க்கு துணையாய் நின்ற சேரரையும் வென்று திரிபுவனச்சக்கரவர்த்திகள் என்ற பட்டம் சூட்டிக் கொண்டான். திரிபுவனம் என்னும் வெற்றிமாநகர் அமைத்து அங்கு கம்பஹரேஸ்வரர் கற்றளியை எடுப்பித்தான். சிறந்த சிவபக்தனாய் விளங்கியவன். இவன் காலத்தில் சேக்கிழார் பெருமானார் அமைச்சராயிருந்தார். புள்ளமங்கலம் திருக்கோயிலில் இம்மன்னனின் கல்வெட்டொன்று உள்ளது.[42]

மூன்றாம் இராசராசன் (கி.பி.1216-1256)

சோழர்களில் நீண்டகாலம் ஆட்சிசெய்தவர்களில் இவனும் ஒருவன். இவன் இராசகேசரி என்ற பட்டம் பெற்றவன். இவன் காலத்தில் சோழப்பேரரசுக்கு பல இன்னல்கள் வந்தன. போசளரும், பாண்டியரும் பேரரசு விரிவாக்கத்தில் ஈடுபட்டனர். பல சிற்றரசர்கள் கலகம் செய்யத் தொடங்கினர். அவனால் இந்த கலகங்களை அடக்கமுடியாத நிலையிருந்தது. மாறவர்மன் சுந்தரபாண்டியன் படையெடுப்பு சோழப் பேரரசுக்குப் பேரிடியாக விளங்கியது. இராசராசனிடம் கப்பம் வாங்கிக் கொண்டு ஆட்சிபுரியச் செய்தான். அதனால் சுந்தரபாண்டியன் சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியன் என்று போற்றப்பெற்றான். இருப்பினும் மூன்றாம் இராசராசன் பாண்டியனுடன் நடத்திய இரண்டாம் போரில் தோல்வியுற்று, உதவி கேட்டு குந்தள நாட்டிற்குச் சென்றபோது காடவன் கோப்பெருஞ்சிங்கனால் சிறைபிடிக்கப் பெற்று போசள மன்னனால் விடுவிக்கப் பெற்றான். இவன் ஆட்சியின் இறுதிப்பகுதி கோப்பெருஞ் சிங்கன், வாணகோவரையன், கங்கர் ஆகியரோடு பல

கலகங்கள் சோழநாட்டை அலைக்கழித்து வந்தன. இதனால் இராசராசன் ஆட்சிப் பரப்பு சுருங்கிப் போயிற்று.

மூன்றாம் இராசேந்திரன் (கி.பி.1246-1279)

இவன் ஆட்சிப் பரப்பு சுருங்கிய நிலையிலேயே இருந்தது. பாண்டியருடன் நடந்த போரில் பாண்டிமண்டலம் கைவிட்டுப் போயிற்று. படிப்படியாக பல பகுதிகள் இழக்கப் பெற்றது. உள்நாட்டுக் கலகங்களும் சோழப் பேரரசு வீழ்ச்சிக்கு அடிகோலியது.[43]

மேற்கண்டவாறு சோழமன்னர்களின் மரபு பட்டியலை அவர்தம் வரலாற்றோடு நோக்குகையில் அவர்களின் அரசியல் நெறி 'கோயில்களும் குடிகளும்' என்ற இரட்டை மாட்டுவண்டியில் தடம் கொண்டு சென்றதை உணரலாம். பேரரசு விரிவாக்கத்திற்கும் கோயில்களின் வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அவை ஒன்றுக்கொன்று இணையானவை என்றும் கூறலாம். வளங்கொழிக்கும் பகுதிகளை வென்று பேரரசின் பரப்பினை விரிவுபடுத்தும் பொழுது உயரும் செல்வநிலையானது கோயில்களின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகிறது. தன் நீண்ட அரசியல் ஆட்சியாண்டுகளில் பராந்தகன் சந்தித்த போர்கள் ஏராளம். அவை அனைத்தும் அவன் பேரரசின் விரிவாக்கத்திற்கே. அதோடு இணையாக அவன் காவிரிக் கரையில் 32 கற்றளிகளை எடுப்பித்ததுவும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. மேலும் கோயில்களின் உருவாக்கம் அரசியல் நலனுக்கு மட்டுமல்லாது அவை சமய, சமூக முன்னேற்றத் தையும் பிரதிபலிக்கும் கண்ணாடியாக சோழர் காலத்தில் விளங்கியது. எனவே பிரமதேயங்கள் வழங்குவதும், தேவதானங்கள் அளிப்பதும் அரசியல் நிர்வாகக் கட்டமைப்பில் இன்றியமையாத ஒன்றாகத் திகழ்ந்த நிலையில் உருவானதுதான் புள்ளமங்கல பிரமதேயமும் எனக் கொள்ளலாம்.

அடிக்குறிப்புகள்

1. சதாசிவ பண்டாரத்தார், தி.வை., "பிற்காலச் சோழர் வரலாறு", பக். 12
2. Nagasamy, R. Tirutani and Velanchei Copper Plates
3. Epigraphia Indica. Vol. XIII pp.142, 144
4. ஸ்ரீதர், தி. ஸ்ரீ. தமிழக முதல்வர் உரை, இதோ செப்பேடுகள் உரைத்திடும் உறுதி
5. சதாசிவ பண்டாரத்தார், தி. வை., "பிற்காலச் சோழர் வரலாறு", பக். 14
6. Nagasamy, R. Tirutani and Velanchei Copper Plates
7. சதாசிவ பண்டாரத்தார், தி. வை., "பிற்காலச் சோழர் வரலாறு", பக். 22
8. S.I.I. Vol. III. No. 89
9. சதாசிவ பண்டாரத்தார், தி. வை., "பிற்காலச் சோழர் வரலாறு", பக். 29
10. Ins. 231/1926
11. Ins. 553/1928
12. S.I.I. Vol. II. No. 76
13. ஒன்பதாம் திருமுறை, கோயிற்பதிகம், பக். 8
14. விக்கிரமசோழன் உலா வரிகள் 31-32
15. Ins.126/1925, 143/1925
16. சதாசிவ பண்டாரத்தார், தி. வை., "பிற்காலச் சோழர் வரலாறு", பக். 46
17. மேலது. பக். 47
18. மேலது. பக். 42
19. மேலது. பக். 49
20. மேலது. பக். 57
21. வீரசோழியம் அலங்.10
22. S.I.I. Vol. III. No. 142
23. ஆய்வேட்டு பின்னிணைப்பு
24. S.I.I. Vol. III. No. 147
25. Ibid. No. 128

26. சதாசிவ பண்டாரத்தார், தி. வை., "பிற்காலச் சோழர் வரலாறு", பக். 77
27. மேலது. பக். 77
28. Ins. 395/1922
29. S.I.I. Vol. III. No. 205
30. Ins. 451/1908
31. S.I.I.Vol. V. No. 647
32. S.I.I. Vol. III No. 29
33. ஸ்ரீதர், தி. ஸ்ரீ. தமிழக முதல்வர் உரை, இதோ செப்பேடுகள் உரைத்திடும் உறுதி
34. பூங்குன்றன், ர. கல்வெட்டு வல்லுநர், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
35. விக்கிரமச்சோழன் மெய்க்கீர்த்தி
36. S.I.I. Vol. III. No.79
37. S.I.I. Vol. III. No. 96
38. Ins. 616/1930
39. Ins. 465/1919
40. சதாசிவ பண்டாரத்தார், தி. வை., "பிற்காலச் சோழர் வரலாறு", பக். 301
41. Ins. 263/1913
42. ஆய்வேட்டு பின்னிணைப்பு
43. சதாசிவ பண்டாரத்தார், தி. வை., "பிற்காலச் சோழர் வரலாறு", பக். 387

5. புள்ளமங்கை – ஒரு பிரமதேயம்

பிரமதேயம்

நமது பண்டைய வரலாறானது சிந்துவெளி நாகரிகத்தினையும், அதன் பின்வந்த வேதகாலத்தினையும் பற்றியதாகும். வேதகாலமக்களின் சமூக அமைப்பில் சபா, சமிதி என்ற இரு ஊர் அமைப்புகள் இருந்தன. அவை ஊர் நிர்வாகத்தில் ஈடுபட்ட அமைப்புகளாகும். அதன் உறுப்பினர்கள் வேதம் பயின்ற, ஓரளவு நிலத்தினை சொந்தமாகக் கொண்ட பிராமணர்களே ஆவர். வேதகால சமுதாயத்தில் பிராமணர்கள் வேள்விகள் செய்தலும், அதனை நிறைவேற்றும் பொருட்டு பொருட்களை மன்னர்களும், செல்வநிலையில் உயர்ந்தோரும் கொடையளித்தலும் தலையாய அறப்பணிகளாக இருந்தன.[1] வேள்வி வேட்டுதலே வழிபாடாகவும் கருதப்பட்டது. அவ்வழிபாட்டின் தொடர்நிலையாக பின்பு உருவவழிபாட்டுடன் கூடிய கோயில்கள் அமைந்தன. அங்கும் வேதங்கள் கற்ற பிராமணர்களின் தீ வளர்த்தல் என்னும் சமய சடங்கு இன்றியமையாததாய் இருந்தது. வேதங்கள் கற்றோரும், மக்கள் நலனிற்காக வேள்விகள் செய்வோருமான பிராமணர்கள் சமூகத்தில் உயர்ந்த நிலையில் மதிக்கப்பட்டனர்.[2]

இத்தகு மேன்மை பொருந்திய அந்தணர்களுக்குத் தான தருமங்கள் செய்வதைப் பெரும் புண்ணியமாகக் கருதிய நம் மன்னர்கள் அவர்களுக்கு நிலங்களையும், ஊர்களையும் தானமாக அளித்தனர்.[3] அவ்வாறு அளிக்கப்பட்ட நிலங்களே பிரமதேயம் எனப்படும். அப்பிரமதேயங்கள் வரிகள் நீக்கப்பட்டு இறையிலியாக கொடுக்கப்பட்டன. சமுதாயத்தில் பல்வகைப்பிரிவு மக்களில் முதல்நிலையில் வைத்துப் போற்றப்பட்ட இப்பிராமணர்களுக்கு கொடையாக

வழங்கப்பட்ட நிலமாதலாலும், அவர்கள் வசிக்கும் குடியிருப்புகளைக் கொண்ட பகுதியாதலாலுமே இவை பிரமதேயங்கள் எனப்பட்டன. பிரமம் என்றால் முதல் என்று பொருள்படும். பிரமதேயம் என்றாலே பிராமணர்களுக்கு அளிக்கப்பெற்ற ஊர் எனக் குறிக்கும் முறை இருந்தும், பிராமணர்கள் வாழும் இடத்தைக் குறிக்கும் அகரம் என்ற சொல்லையும் சேர்த்து அகர பிரமதேயம் எனவும் வழங்கப்பட்டு வந்தது. இத்தகைய பிரமதேய ஊர்களுக்கு மன்னர்கள் தங்கள் பெயரையோ, பட்டத்தரசிகள் பெயரையோ வைத்தனர்.[4]

பாழ்நிலத்தை கோயில் தன் சொத்தாகப் பெற்றிருந்தால் ஒருவர் அதனை விலைக்கு வாங்கி, பண்படுத்தி மீண்டும் கோயிலுக்கே தானம் செய்வதும் வழக்காயிருந்தது. கோயில் பூசாரிகளும் தம் பணிக்கு நிலத்தை ஊதியமாகப் பெற்றனர். இவையும் தானமாக அளிக்கப்பட்டவையே.

தேவதான பிரமதேயம்

கோயிலுக்கென அளிக்கப்பெற்ற தேவதான நிலங்கள், ஊர்கள் தேவதான பிரமதேயம் எனப்பட்டன. இந்த தேவதான நிலங்கள், ஊர்கள் இவற்றின் வருவாயிலிருந்து ஒரு பகுதியை பிராமணர்களுக்கு அளிக்கும் முறையும், அவ்வாறே அவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்களின் வருவாயிலிருந்து ஒரு பகுதியை கோயிலுக்கு அளிக்கும் முறையும் இருந்தன. இவ்வாறு கோயிலுக்கும், பிராமணர்களுக்கும் கொடையாக நல்கப்பட்டவையே தேவதான பிரமதேயங்கள் ஆகும்.[5]

கி.பி.925-ல் பராந்தகனது 18-ஆம் ஆட்சியாண்டில் கிழார்க்கூற்றத்து புள்ளமங்கலம் திருவாலந்துறை இறைவன் மகாதேவர்க்கு குடிநீக்கிய தேவதானமாக ஐந்தே காலே அரைமா அரைக்காணி நிலம் வழங்கப்பட்டமை இங்குள்ள கல்வெட்டினால் அறியமுடிகிறது.[6] குடிநீக்கிய தேவதானமாவது ஏற்கெனவே அங்குள்ள குடிகளின் அந்நிலத்தின் மேல் உள்ள உரிமைகளை நீக்கி, நிலத்தின் முழு உரிமையையும் கோயிலுக்கே அளித்தல் என்பதாம். அன்றியும் ஏற்கெனவே அந்நிலத்தில் உரிமை கொண்டாரை மீண்டும் புதிதாக நியமித்தலாம்.

சதுர்வேதி மங்கலம்

அந்தணர்களுக்கென தனிக்குடியிருப்புகளையும் ஏற்படுத்தினர். நான்கு வேதங்கள் கற்ற மறைவல்லோர்கள் குடியேற்றப்பட்ட குடியிருப்புப் பகுதியே சதுர்வேதி மங்கலம் எனப்படும். இவையும் வரிகள் நீக்கப்பட்டு இறையிலியாக வழங்கப்பட்டன. சதுர்வேதி மங்கலங்கள் அவ்வட்டார கல்விக் கழகங்களாக விளங்கின. காஞ்சிபுரம், உத்திரமேரூர் முதலியன அத்தகு சதுர்வேதி மங்கலங்களேயாகும்.[7]

தமிழ்நாட்டில் பிரம்மதேயம் பற்றிய குறிப்புகள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டிலிருந்தே கிடைக்கின்றன. பல்லவர் ஆட்சியில் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் உருவாக்கம் பெற்ற இப்பிரம்மதேயங்கள் படிப்படியாக எண்ணிக்கையில் வளர்ச்சியடைந்துள்ளன. கி.பி. 601-700-இல் மூன்று பிரம்மதேயங்களும், கி.பி. 701-800-இல் பதினான்கு பிரம்மதேயங்களும், கி.பி. 900-க்கு பிறகு ஒன்பது பிரம்மதேயங்களும் உருவாக்கப்பெற்றன. கி.பி. 7-9-ஆம் நூற்றாண்டுகள் பிரம்மதேய உருவாக்க உச்சக்காலம் எனலாம்.[8]

சோழர்கால பிரமதேயம்

சோழர்கள் ஆட்சியில் தமிழ்நாட்டில் பல ஊர்கள் பிரமதேயமாக அளிக்கப்பட்டன.[9] பிராமணர்கள் மேலாதிக்கம் பெற்றிருந்த இவ்வூர்களின் 'சபை' எனப்பட்ட ஊராட்சி மன்றம் இருந்தது. பிரமதேயம் சோழநாட்டு உள்ளூராட்சியில் ஒரு முக்கிய பங்கு வகித்தது. ஆற்றங்கரைகளில் அமைந்த வேளாண் நிலங்களே பிரமதேயக் கொடைகளாக வழங்கப் பட்டன. காவிரியாறு, வேகவதி, பாலாறு இவற்றின் படுகைப் பகுதி பாசன நிலங்கள் பெரும்பாலும் பிரமதேயங்களாக இருப்பதுவும் கல்வெட்டினால் அறியலாம்.[10] முற்காலப் பாண்டியர், பல்லவர்களே முதலில் பிரமதேய நிலங்களை கொடைகொடுத்துள்ளனர் என அவர்களின் செப்பேடு களினால் அறிகிறோம். பின்னாளில் வந்த சோழர்களும் இதனைப் பின்பற்றி அவர்களை விஞ்சினர் என்பதில் வியப்பில்லை. அரச நிலக்கொடைகளின் இரண்டு வகையைப் பற்றி நொபொரு கராஷிமா தன்னுடைய நூலில்

விவாதிக்கிறார்.[11] ஒன்று, காணியாட்சி உரிமையோடு கொடுக்கப்படும் நிலம். இதில் கொடை பெற்றவர்கள் நிலத்துக்கு முழுச் சொந்தக்காரர்கள் ஆகிறார்கள். சோழர் காலத்தில் வழங்கப்பட்ட பிரமதேயங்கள் இத்தகையனவே. மற்றொன்று, நில வருவாயின் ஒரு பகுதியை மட்டுமே கொடை செய்வது. கோயில்களுக்குக் கொடுக்கப்பட்ட பெரும்பாலான தேவதானங்கள் இப்படிப்பட்டவையே.

பிரமதேய ஊர்களில் அமைந்த சபையில் உள்ளூர் நிலஉடைமையாளர்களான அதாவது பிராமணர்களே உறுப்பினராக இருந்தனர். இந்த ஊர் சபையானது ஒரு நிர்வாக அமைப்பாக செயலாற்றியது. பல்வேறு செயற்பாடுகளைக் குறித்தும் இச்சபை பல வாரியங்களைக் கொண்டிருந்தது. பருடை என்பது கோயில் நிர்வாகப் பொறுப்புகளை மேற்கொண்ட ஒரு அமைப்பு போலத் தெரிகிறது. தலைவாச்சான்றார் ஆற்றின் நீர் மதகுகளை பராமரித்து நீர்ப் பாசனத்திற்கு பொறுப்பாவர். பருடை, தலைவாச் சான்றார், கோயிலார் எனப்படும் கோயில் பூசாரிகள், கிழவர் என்கிற ஊர்த்தலைவர் போன்ற சொற்கள் யாவும் சோழர்கால பிரமதேய நிலக் கல்வெட்டுக்களில் பயின்று வருவனவாகும். பிரமதேயத்தில் பிராமண நிலக்கிழார்கள் முதல்நிலையிலும், அவர்களுடைய நிலங்களை உழுது பயிரிட்ட வெள்ளான் குடிகள் அடுத்தநிலையிலும் இருந்தார்கள் என்பது நொபொரு அவர்களின் ஆய்வாகும்.[12]

தங்கள் ஊர் நிர்வாகத்துக்காகப் பிராமண நிலக்கிழார்கள் சபையென்ற ஊராட்சி மன்றத்தின் மூலம் வேளாண்மை, பாசனம் முதலியவற்றை பராமரித்தனர். சபை உறுப்பினரான பிராமணர் உள்ளூர் உழுகுடிகளிடம் ஒருவகை பண்பாட்டுத் தாக்கத்தையும், சமயரீதியிலான வாழ்வியலையும் ஏற்படுத்தினர். பிரமதேயங்கள் அரசரால் ஏற்படுத்தப்பட்டு அரச அரவணைப்பில் வளர்ந்தனவாதலால் இவை இரண்டிற்குமிடையே நெருங்கிய உறவு இருந்து வந்தது. முதலாம் பராந்தகச் சோழனின் உத்தரமேரூர்க் கல்வெட்டுகளின் படி அவ்வூர்ச் சபைத் தேர்தல் விதிகளைப்

பற்றிய முடிவுகள் அரசனால் அனுப்பப்பட்ட ஒரு அதிகாரியின் முன்னிலையில் எடுக்கப்பட்டன என்பது மேற்சொன்ன கூற்றை மெய்ப்பிக்கும் [illegible]

சோழப் பேரரசின் பெரு நிலப்பகுதி மண்டலங் களாகவும், மண்டலங்கள் வளநாடுகளாகவும், வளநாடுகள் நாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு நாடும் சில ஊர்களையும் கொண்டிருந்தன. சோழ மண்டலத்தில் ஒவ்வொரு நாட்டிலும் ஒன்று அல்லது இரண்டு பிரம தேயங்கள் ஆள்பவர்களால் உண்டாக்கப்பட்டிருந்தன.[13]

முதலாம் பராந்தகச் சோழனின் புள்ளமங்கை ஒரு பிரமதேய ஊராகும். பராந்தகன் அல்லது அவன் தந்தை ஆதித்த சோழனின் வெற்றியினை குறிக்க இவ்வூர் பிரமதேயக் கொடையாக வழங்கப்பட்டிருக்கலாம். ஏனெனில் இங்கு அமைந்துள்ள திருக்கோயிலின் விமானம் 'ஜயத விமானம்' என்ற வெற்றியைக் குறித்த ஒன்றாகும். காவிரியின் தென் கரையில் அமைந்துள்ள இவ்வூரானது பிராமணர்களுக்கு கொடையாக வழங்கப்பட்டிருப்பதோடு, வெள்ளூர் போரில் பராந்தகனது வெற்றிக்கு உறுதுணையாக நின்ற கங்கமன்னன் இரண்டாம் பிருதிவிபதியின் நிவந்தக் கொடையும் இவ்வூர் கோயில் பெற்றுள்ளது.[14]

பிரம்மதேயங்களில் பல குடும்புகள் இருந்தன என்பதை உத்தரமேரூர் கல்வெட்டில் அங்கு முப்பது குடும்புகள் இருந்தது என்பதிலிருந்து அறியலாம்.[15] பிரம்மதேயங்கள் நிலவுடைமையுடன் பெருந்தொடர்பு கொண்டிருந்தமையை பிள்ளைப்பாக்கம், திருநின்றவூர் கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன.

தேவாரம் காட்டும் பிரமதேயம்

ஆதியில் வேதம் ஓதும் அந்தணர்கள் தமக்கு எரியோம்பவும், தீர்த்தங்களில் புனித நீராடவும் வசதியான இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு உலக நன்மையைக் கருதி வேள்விகளைச் செய்தார்கள். வேள்விக் காலம் தவிர்ந்த நேரங்களில் வேதங்களை ஓதுதல், ஓதுவித்தல், பிறருக்கு

வேதக் கருத்துக்களை விளக்குதல் முதலியவற்றை செய்துவந்தனர். அரசர்களால் ஒரு நிலம் பிரமதேயம் ஆவதற்கு முன் அந்த வளமிக்க நிலப்பகுதி எவ்வாறு வேதம் அறிந்த அந்தணர்கள் சூழ அவர்களின் இருப்பிடமாக இருந்தது என்பதை இத்தலத்தின் தேவாரப்பதிகம் விளக்குகிறது.[16]

கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் பிரமதேயமாக கொடுக்கப் பட்ட புள்ளமங்கலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத் திலேயே அதாவது தேவார காலத்திலேயே பிரமதேயம் ஆவதற்குரிய தோற்றங்களைப் பெற்றிருந்தது என்பதை கீழ்க்கண்ட வரிகளால் உணரலாம்.

'பால்உந்துறு திரள்ஆயின பரமன்பிரமன்தான் போலும் திறல் அவர்வாழ்தரு பொழில்சூழ்புளமங்கை' - பிரமனைப் போன்ற வேதத்தினை நாளும் ஓதும் சிறப்பினை உடைய அந்தணர்கள் வாழும் திருப்புள்ளமங்கை என்னும் பதியில் விளங்கும் ஆலந்துறையாகும்.[17] 'கலையால்மலி மறையோர் அவர் கருதித்தொழுது ஏத்த' - திருப்புள்ளமங்கை என்னும் ஊரில் கல்வியிலும் ஒழுக்கத்திலும் மிக்க மறையவர்கள் மனதாரத் தொழுது ஏத்திட, காவிரியாறு அலைகளையுடைய தீர்த்தத்தைத் தருமாறு திகழும் ஆலந்துறை உள்ளது.[18] 'வேதம்பயின்று ஏத்திப் புலன்கள்தமை வென்றார்புகழ் அவர்வாழ்புள மங்கை' - வேதங்களை நன்கு பயின்று, அதனை உணர்ந்தோதி, புலன்களை ஐந்தினையும் வென்று வாழும் தன்மையால் புகழ்கொள்ளும் உயர்ந்தோர் வாழும் திருப்புள்ளமங்கை ஆகும்.[19]

அந்தணர்களின் மேற்சொன்ன பணிகள் தடை படாதிருக்க அரசர்கள் இறையிலி நிலங்களைத் தானமாகக் கொடுப்பதுவும் மரபு. அவ்வாறே, தேவாரக் கூற்றின்படி புள்ளமங்கை சிறந்த வளமிக்க, காவிரியாற்றின் ஆலந்துறைப் பகுதியாதலால் இங்கு அதிகமிருந்த அகரத்துக் காரர்களான அந்தணர்களுக்கே இந்நிலம் பிரமதேயமாக வழங்கப்பட்டு விட்டது. பிரமதேயத்தைக் கைக்கொண்ட அந்தணர்கள் வேத வேள்விகளை ஆற்றவும், சிவாலயங்களில் வேதங்களை

முழக்கவும் ஏற்றவாறு அந்த பிரமதேய ஊரின் மையத்தில் ஒரு சிவாலயம் எழுப்பப்படும். அவ்வாறே புள்ளமங்கை ஆலந்துறை மகாதேவர் கோயில் சோழ அரசனால் கட்டப்பட்டது. நிவந்தங்களும் வழங்கப்பட்டன.[20]

அடிக்குறிப்புகள்

1. ஆளவந்தார், ஆர். "கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள்", பக். 40
2. மேலது. பக். 36
3. மேலது. பக். 36
4. மேலது. மேலது பக். எண்
5. மேலது. பக். 36
6. ஆய்வேட்டு பின்னிணைப்பு
7. ஸ்ரீதர், தி. ஸ்ரீ., "காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள்", தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
8. மேலது.
9. கரோஷிமா நொபொரு, "வரலாற்றுப் போக்கில் தென்னகச் சமூகம்", பக். 21
10. தமிழ்நாடு கல்வெட்டுகள்
11. கரோஷிமா நொபொரு, "வரலாற்றுப் போக்கில் தென்னகச் சமூகம்", பக். 24
12. மேலது. பக். 24
13. மேலது. பக். 68
14. ஆய்வேட்டு பின்னிணைப்பு
15. ஸ்ரீதர், தி. ஸ்ரீ., "காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள்", தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
16. முதல் திருமுறை, திருப்புள்ளமங்கைப் பதிகம்
17. மேலது.
18. மேலது.
19. மேலது.
20. ஆய்வேட்டு பின்னிணைப்பு

6. சோழர் கால சமுதாயம் – ஒரு பார்வை

சமயம் என்பதன் வேர்ச்சொல் 'சமை' என்பதாம். 'சமை' என்றால் பக்குவப்படுதல். சமுதாயத்தில் மனிதன் வாழ அவனை நன்கு பக்குவப்படுத்துதலே 'சமயம்' எனப்படும்.[1] 'சமயம்' என்பதற்கு 'வழிகாட்டுதல்' என்றும் பொருள் கொள்ளலாம். சமயங்காட்டும் நெறியில் வழுவாது செல்லுதல் வழிபாடாகும். இறைவழிபாடு என்பதும் இதிலிருந்து உருவானதேயாகும். மனிதன் சமூகத்தில் வாழும் நெறியைக் கற்பிக்கும் சமயக் கொள்கையானது சமுதாயத்தில் மக்களுக்கு இன்றியமையாததாக இருந்தது. சமயத்தின் அத்தியாவசியமே அதன் எழுச்சிக்கும் அடிப்படையாக அமைந்தது.

சைவமும் வைணவமும்

சோழர்களின் ஆட்சிக்காலம் சமயப் பொறையுடைமைக் காலம் எனலாம். வேதக் கொள்கைகளுக்கு எதிராக எழுந்த சமண, பௌத்த மதங்களை வேரறுக்க கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒன்றாகசேரத் தொடங்கிய பல கடவுள் சார்பு பிரிவுகளில் சைவமும் வைணவமும் மிக முக்கியமானவை. கடவுள் கொள்கை பொருந்திய பிரிவுகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டு குப்தர்கள் காலத்தில் இந்து சமயம் என்னும் பெருங்கொள்கை உருவாக்கப்பட்டு, அதற்கென புராணங்களும், இதிகாசங்களும், கடவுளர்களின் உருவங்களை சமைக்க சிற்ப சாத்திர நூல்களும் இயற்றப்பட்டன. வடநாட்டில் தோன்றிய இந்த சமய எழுச்சியானது, தென்னாட்டில் பக்தி இயக்கமாக மாறியது. தென்னாட்டின் அரசு உருவாக்கமானது இடைக்காலத்தில் சமயங்கள் என்னும் அடித்தளத்தின் மீதே அமைந்தது எனலாம். பல்லவ, சோழர்களின் அரசு உருவாக்கமானது பேரரசாக

எழுந்தமைக்கு அவர்கள் சமயங்கள் என்னும் குதிரைகளைக் கொண்டே தங்கள் ஆட்சித் தேரை வழிநடத்தினர். இக்காலகட்டத்தில் தோன்றிய சமயப்பெரியார்களும் பக்திக் கொள்கையை மக்களிடையே பரப்பியதோடு, அரசர்களின் ஊடகங்களாகவும் சமுதாயத்தில் செயல்பட்டனர். இப்பணிக்கு எம்மதப்பெரியாரும் அரசர்களால் பொறையுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர்தம் சமயப்பணிகளுக்கும் பலவித நிவந்தங்களும் வழங்கப்பட்டதோடு, சமுதாயத்தில் மிக முக்கிய அந்தஸ்தைப் பெற்றிருந்தனர்.

பண்டைக்காலத் தமிழ்மக்கள் அரசர்களைக் காத்தற் கடவுளாகிய திருமாலின் அவதாரமாகக் கருதிப் போற்றி வந்தனர். அவ்வாறே சோழமன்னர்கள் தங்களை ரகுகுலவழித் தோன்றல்கள் என்பர். அவர்களின் செப்புப்பட்டயங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன. சூர்யகுலத்தவரான அன்னோரின் பெயர்களும் ஆதித்தன், இராசாதித்தன், ஆதித்தகரிகாலன், அருண்மொழிவர்மன் என்றிருக்கக் காணலாம். காவியநாயகனான ஸ்ரீஇராமன் ஆதித்தகுலத்தைச் சார்ந்தவனாகவே புராணங்களும், இதிகாசங்களும் கூறுகின்றன. திருமாலின் அவதாரங்களுள் ஒன்றாகக் கருதப்படும் இராமன் தன் நாட்டை அறநெறியில் ஆட்சி நடத்திய மன்னன் ஆவான். சோழ மன்னர்களும் தங்களை இராமனாகக் கருதிக்கொண்டு நீதிவழுவாது குடிமக்களைக் காத்தல் வேண்டும் என்ற திண்ணம் உடையோராயத் திகழ்ந்தனர். அங்ஙனமே சோழ மன்னர்களையும் அவர்களது ஆட்சிக்கு உட்பட்ட சோழ இராச்சியத்தில் வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் எல்லோரும் திருமாலின் அவதாரமாகவே எண்ணிப் பேரன்பு பூண்டு ஒழுகி வந்தனர் என்று தெரிகிறது.[2]

திருமாலை மூலக்கடவுளாகக் கொண்டு விளங்கிய வைணவமதமே சோழர்களின் ஆதித்தியகுலத்திற்கு மரபாயிருந்தாலும் அவர்கள் சைவநெறியிலே மிகுந்த பற்றுடையவர்களாய்த் திகழ்ந்தனர். அவர்கள் தம் ஆட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் நிலவிய எண்ணிக்கையில் அதிகமான சிவன் கோயில்களை இவற்றிற்கு

சான்று பகர்கின்றன. முற்காலச் சோழர்களில் ஆதித்தன் சிற்றம்பலமுகடு கொங்கிற் கனகம் அணிந்தவன்.[3] அன்பில் செப்பேடுகள் கூற்றின்படி ஆதித்தன் மலையிலிருந்து கடல்வரை காவிரியின் இருகரைகளிலும் கோட்டைகள் போன்ற உயர்ந்த பல சிவாலயங்களை கற்றளிகளாக எடுப்பித்த சிறந்த சிவபக்தன். தன் தந்தை வழியிலே சிதம்பரம் திருக்கோயிலுக்கு பொன்கூரை வேய்ந்து அதனை பொன்னம்பலமாக்கிய பெருமானான ஆதித்தன் மகன் முதலாம் பராந்தகனோ 'சிவனின் பாதக்கமலங்களில் இடையறாது மொய்க்கும் வண்டு' என்று திருவாலங்காடு செப்பேடுகளால் புகழப்படுபவன். திருவாவடுதுறை கோயிலுக்கு அவனே நேரில் வழங்கிய ஐந்நூறு கழஞ்சு பொன் கொடையைப் பற்றி அக்கோயில் கல்வெட்டு கூறுகின்றது.[4] அல்லூர், நந்திபுரம், திருக்களித்தட்டை, புள்ளமங்கலம், திருச்செந்துறை முதலிய சிவாலயங்களின் கட்டட கலைப்பாணியும், சிற்பங்களின் அணிமுறையும் அவன் சிவபக்தியை மேன்மையுறுத்துகின்றன.[5]

பராந்தகனின் மகன் இராசாதித்தன் திருமுனைப்பாடி நாட்டில் தங்கியிருந்தபோது அங்கு அவனால் எடுப்பிக்கப்பட்ட 'ஆதித்தேச்சுரம்' கோயிலுக்கு அவன் படைவீரர்களும், பணிமக்களும் கொடுத்த கொடையை அங்குள்ள கல்வெட்டால் அறியலாம். பராந்தகனின் புள்ளமங்கலத்து திருக்கோயிலுக்கு கங்கமன்னன் செம்பியன் மாவலி வாணராயன் என்பவன் கொடுத்த நிலக்கொடையை கல்வெட்டு இயம்புகிறது.[6] இங்ஙனம் சோழஅரசர்கள் மட்டுமின்றி, அவர்களுடைய அமைச்சர்கள், உறவினர்கள், படைவீரர்கள், அவர்களுக்கடங்கிய சிற்றரசர்கள் எனப்பலரும் கோயிற்பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதை அறிகிறோம். சோழர்கள் காலத்தில் சைவசமயம் உச்சம் பெற்றிருந்தது எனலாம். சிவவடிவங்களை சோழ அரசர்கள் தங்களோடு இணைத்துக்கொண்டு அப்புராணக் கதைகளையும், தங்கள் வாழ்வில் நடந்ததாக கருதுவதும் இயல்பாயிற்று. இராசராசனின் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் விமானத் தளங்களில் காணப்படும் திரிபுராந்தகர்

சிற்பம் அவன் நினைவுபடுத்துகிறது. மும்முடிச் சோழன் என்பதையே அவ்வாறே அன்னாரது ஆட்சியில் ஏற்றம் பெற்றிருந்த ஆடல்வல்லான் சிற்பமும் அவன் நடனக்கலையில் கொண்டிருந்த அளவற்ற ஈடுபாட்டையே காட்டுகின்றன. புள்ளமங்கை திருவாலந்துறை மகாதேவர் கோயிலில் காணப்படும் நாட்டிய கரணச்சிற்பங்கள் யாவும் எடுப்பித்தவனின் கலையுணர்வைக் காட்டி நிற்பனவாகும்.

சோழர் கோயில்களில் கருவறை தென்புறச் சுவர் கோட்டத் தெய்வமாக விளங்கும் தென்முகக் கடவுள் உருவமைப்பும், வழிபாடும் சோழர் மன்னர்கள் தங்களின் தனித்ததொரு கலைத்தாக்கத்தை அதன் மேல் கொண்டதை வெளிப்படுத்தும். தென்னகத்தின் சைவசமயம் அக்காலத்தில் இந்தியாவின் ஏனையபகுதிகளில் நிலவிவந்த சைவத்தோடு கொண்டிருந்த நெருங்கிய தொடர்பினை முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் இவர்களது ஆட்சியில் வடநாட்டு சைவப் பெரியார் சதுரானன சிவபண்டிதர் கொண்டிருந்த புகழால் உணரலாம். காஞ்சிபுரம் மாவட்டத்தில் கூழம்பந்தல் கங்கை கொண்ட சோழீச்சுரம் அப்பெரியார் எடுப்பித்தக் கற்றளியாகும்.

எழுச்சிமிக்க, வீரமிகு சிவவடிவங்களை சோழர்கள் தங்கள் கலைப்பாணியில் மிகுதியாக உருவாக்கினர். இத்தகு சிற்ப உருவமைதியை கூர்ந்து நோக்குங்கால் அவை அக்கால சமூக, அரசியல் நிலையை பின்புலமாகக் காட்டுவதாகவும் அமைகிறது. கஜசம்ஹாரமூர்த்தி சிற்பம் யானையைக் குலச்சின்னமாகக் கொண்டவர்களோடு சோழர்கள் கொண்டிருந்த பெரும்பகையை உணர்த்தி நிற்கிறது. புள்ளமங்கை திருக்கோயிலின் தேவகோட்ட மகரத் தோரணத்தில் காட்டப்படும் இம்மூர்த்தி கவனிக்கத்தக்கது.[7] இராசராசனின் தஞ்சை பெரியகோயிலின் துவாரபாலகர்களின் சிற்பத்தில் கையில் கொண்டுள்ள பெருந்தடியில் சுற்றியுள்ள பாம்பு ஒன்று யானையை விழுங்குவது போல் காட்டப்பட்டுள்ள அமைப்பானது சோழர்கள் நாக வமிசத்தார் என்ற கூற்றினை மெய்ப்படுத்துவதாகவே உள்ளது.

வைணவக் கோயில்களிலும் சோழர்களின் உள்தாக்கம் தெரியாமலில்லை. சோழப்பரம்பரை மன்னர்கள் தங்களுக்குள் முடிசூடும் பொழுது மாற்றிமாற்றி புனைந்துகொள்ளும் பட்டங்களான இராஜகேசரி, பரகேசரி என்பன நரசிம்மத்தைக் குறிப்பனவாகும். மேலும் முற்காலச் சோழர் கோயில்களில் காணப்படும் இராமாயணச் சிற்பங்கள் அம்மன்னர்களோடு தொடர்புடையதாகவே உருவாக்கப்பட்டன.[8] சான்றாக, முதலாம் ஆதித்தனின் மற்றொரு சிறப்புப் பெயர் கோதண்ட ராமன் என்பதாகும். அவன் விற்போரில் சிறந்த வீரன் என்பதால் அப்பெயர் பெற்றான் போலும். அவன் கோயில்களில் காணப்படும் இராமகாதைச் சிற்பங்கள் அவனையே நினைவூட்டுகின்றன. முதலாம் பராந்தகன் மதிரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி என அவன் 3-ஆம் ஆண்டு கல்வெட்டுகளால் புகழப்படுகிறான்.[9] இவ்வாட்சியாண்டு கல்வெட்டினைக் கொண்ட புள்ளமங்கை கோயிலில் இராமன் ஈழத்தினை வென்ற இராமகாதைச் சிற்பங்கள் இடம்பெற்றிருப்பது பராந்தகனின் வெற்றியை நம் நினைவில் நிறுத்தும்பாலன்றோ!

சோழ அரசர்கள் தம் ஆட்சிக் காலத்தில் சமயப் பொறையுடையவராய் எல்லா மதங்களையும் ஆதரித்து வந்தனர் என்றே கூறவேண்டும். ஆனைமங்கலச் செப்பேடுகள் கூறும் இராஜராஜனின் நாகை பௌத்தப்பள்ளி கொடையும், அவனுடைய அக்காள் குந்தவை தாராசுரம் என வழங்கப்பெறும் இராஜராஜபுரத்தில் பெருமாளுக்கு ஒரு கோயிலும், ஜீனருக்கு ஒரு கோயிலும், சிவனுக்கு ஒன்றுமாக ஓரிடத்திலேயே கட்டி, பல கொடைகளை வழங்கினாள் (8/1919) என கல்வெட்டுகளால் அறிகிறோம். இராசராசனின் பட்டத்தரசியான உலகமாதேவி திண்டிவனம் அருகிலுள்ள உலகாபுரத்தில் சிவன் கோயில் மற்றும் சுந்தரச் சோழப் பெரும்பள்ளி இவற்றை எடுப்பித்துள்ளாள்.

சமயப்பொறையும் சைவசித்தாந்த எழுச்சியும்

வரலாற்றறிஞர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் சோழப் பேரரசு பைசாந்திய அரசு போன்று ஒருமைத்தன்மை உடையது என்று கூறுவார். கி.பி. 1980-ஆம் ஆண்டில்

பர்ட்டன் ஸ்டீன் அவர்கள் இக்கருத்தினை ஆய்வுக்குட்படுத்தினார். அவர் கருத்துப்படி சோழப்பேரரசு ஒரு கூறாக்க நிலை அரசு (Segmentary state) என்பார். அண்மையில் தம்பையா என்பவர் சோழப்பேரரசு சமயஞ்சார்ந்த அரசு (Galactic state) என்று கூறுகிறார். ரோமிலா தாப்பர் அவர்கள் கூறாக்கநிலை அரசு என்ற கருத்து அதுவரையில் கூறப்பெற்ற ஏகச்கராதிபதி அரசு என்ற கருத்தினை கேள்விக்குள்ளாக்கியது என்பார். சாஸ்திரி அவர்களின் பைசாந்திய அரசு என்ற கூற்றை பல அறிஞர்கள் சான்றுகளுடன் மறுத்துள்ளனர். அவர்களில் தலைமை சான்றவர் பர்ட்டன் ஸ்டீன் ஆவார். அவர் கருத்தை முதலில் காண்போம். "அரசியல் அதிகாரமும் கட்டுப்பாடும் பல ஜீவாதாரமான வழிகளில் வட்டார நிலைப்பட்டதாகவே காணப்பட்ட இடைக்கால இந்திய அரசானது இங்கு ஒரு "கூறாக்க நிலை" அரசு ஆகக் கொள்ளப்படுகின்றது. இந்த அரசானது ஆக்க அலகுகளில் செயல் வீச்சு, நன்கு வரையறுக்கப்பட்ட, நிலையான இனக்குழுமங்கள் வாழும் பிரதேசங்களுக்குள் வரையறை செய்யப்பட்டதாகவே இருந்தது. அப்பிரதேசங்களின் பிரதானிகளாக இருந்தோர் பெரும்பான்மையும் அந்த உள்ளூர் வட்டாரத்தில் வாழ்ந்த மேலாதிக்கமுடைய இனக் குழுமங்களின் தலைவர்களாகவோ, தலைமைப் பேச்சாளர்களாகவோ தான் இருந்தனர். அத்துடன் தென்னிந்தியாவுக்கே தனிச் சிறப்பு தருவனவாக அமைகின்ற பல்வேறு உள்ளூர்க் குழுக்களின் நலன்களைப் பிரதி நிதித்துவம் செய்வனவாகவிருந்த கூட்டு நிறுவனங்கள் அவ்வட்டாரத்தின் பொது அலுவல்களில் பங்கு கொண்டன.

இது பிரமிட் எனப்படும் கூர் கோபுர முறையில் கூறுகளாக ஆக்கப்பட்டு முழுமை பெற்ற அரசு வகையாகும். இந்த அரசு வகை இப்பெயர் பெறுவதற்குக் காரணம் அதன் கட்டமைப்பேயாகும்."[11]

பர்ட்டன் ஸ்டீன் அவர்களின் கருத்துக்கு மறுப்புத் தரப்பட்டது. ஆப்பிரிக்கன் பழங்குடியான அலூர் சமூகத்தில்

நிலைபெற்றுள்ள அரசியல்தான் சோழப்பேரரசின் அரசியல் என்பது அவரின் உறுதியான கருத்து. ஆனால் பழங்குடி அரசியலை நாகரிகமடைந்த சோழப்பேரரசுக்குப் பொருத்திப் பார்ப்பது வரலாற்று முரண். இருப்பினும் ஸ்டீன் கருத்து அதுவரையில் தென்னிந்திய வரலாற்றாய்வியலில் அரசு பற்றி நிலைபெற்றிருந்த கருத்தினைப் புரட்டித் தள்ளியது. அந்த வகையில் இதுவொரு புதுக் கருத்தேயாகும்.[12]

தம்பையா அவர்கள் சோழப்பேரரசினை சமயஞ்சார் அரசு (Galactic State) என்று கூறுவது எடுத்துக் காட்டத்தக்கது. சோழப்பேரரசர்கள் எண்ணிறந்த கோயில்களைக் கட்டினர். கோயில்களுக்குப் பேரளவில் நிலக் கொடைகளை அளித்தனர். பிரமதேயங்கள் பலவற்றை வழங்கினர். கோயில்களும், தேவதானங்களும் அரசனது பெருமையை மக்களிடத்தில் பரவச் செய்தது. மக்கள் மன்னனை இறைவனுக்குச் சமமான நிலையில் வைத்துப் போற்றினர். முரண்பட்ட மக்களையும் ஒரு குடையின்கீழ் வைத்து ஆளும் பெருமையை கோயில் பரப்பியது. அரசர்கள் ஆளும் தகுதியுடையவர்கள் என்பதை பிராமணர்கள் பிரச்சாரம் செய்தனர். கோயிலும், பிராமணர்களும் சோழர் கால அரசியலில் பெரும் பங்காற்றிய நிலையைப் பார்க்கிறோம்.

நிலவுடைமைக் கொள்கையும் மகாசபையும்

புள்ளமங்கலத்துப் பிரமதேய சபையை மகாசபை என்று இவ்வூர்க் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.[13] மகாசபை என்பது பல பிரம்மதேயங்களையும், தேவதான ஊர்களையும் ஆட்சி செய்கின்ற பொறுப்பிலிருந்த சபையாகும். மகாசபையின் கீழிருக்கும் பிரம்மதேயங்களிலிருந்து இந்த மகாசபைக்கு உறுப்பினராக அனுப்பப் பெறுவர். இந்த மகாசபைக்கு ஆளுங்கணத்தார் என்ற பெயரும் உண்டு. மகாசபை நிலைபெற்றிருக்கும் ஊர்களை தன்கூறு என்றும், தனியூர் என்றும் அழைப்பர். தொண்டைமண்டலத்திலும், சோழமண்டலத்திலும் பல தனியூர்கள் இருந்தன. இது அரசுக்கு வரி செலுத்தும் ஓர் அமைப்பாகும். உத்தரமேரூர்

சதுர்வேதிமங்கலம் 27 பிடாகைகளைக் கொண்டிருந்தது. வேளச்சேரியில் கிடைக்கும் சுந்தரசோழன் கல்வெட்டு ஆளுங்கணத்தார் பற்றிக் குறிப்பிடுகின்றது. திருவாலங் காட்டுச் செப்பேடுகளில் நித்தவிநோத சதுர்வேதி மங்கலமும், சிங்களாந்த சதுர்வேதிமங்கலமும் பல பிடாகைகளைப் பெற்றிருந்தன. தென்னேரியில் (காஞ்சிபுரம்வட்டம்) உள்ள முதலாம் இராசராசன் கல்வெட்டுகள்அவ்வூரை தன்கூறு என்று கூறுகின்றன. அதற்கு உத்தமசோழ சதுர்வேதிமங்கலம் என்று பெயர். 'பார்த்திவேந்திரனின் திருவிடந்தைக் கல்வெட்டுகள் தையூர் என்ற ஊரை தன்கூறு என்று கூறுகின்றது. இந்தப் பின்னணியில் புள்ளமங்கலம் மகாசபையின் செயல்பாட்டை அணுகவேண்டும்.

புள்ளமங்கலம் மகாசபைக்கு முதலாம் இராசராசன் ஆணை குறிப்பிடத்தக்கது. சட்டபோகமாக அளிக்கப் பெற்ற நிலத்தை உரியவர் அனுபவித்துக் கழிந்தபின் அவன் (சட்டர்) நிலம், உடன்பிறந்தார் நிலம், அவன் மக்கள் நிலம், பிராமணிமார் நிலம் ஆகிய நிலங்களை விற்று பாண்டிகுலாசனி மாராயர் தண்டல் நிலத்தில் சேர்க்க மன்னன் ஆணை பிறப்பித்தான். சபையார் பறை அறிவித்து கூட்டம் கூடி சாதி சாமந்தர் தனிகர் முன்னிலையில் விற்க முயன்றனர். வாங்குவார் யாருமில்லை. அதனால் மகாசபையாரே விலைக்கு வாங்கி பணத்தை பாண்டிகுலாசனி மாராயரிடம் அளித்தனர். மறுபடியும் சபையாரே சாமவேதிகளுக்கும், இருக்குவேதி களுக்கும் சட்டபோகமாக வழங்கப்பெற்றது. திருஞான சம்பந்தர் புள்ளமங்கை பதிகத்தில் 'வேதம்பயின்று ஏத்திப் புலன்கள் தமை வென்றார் புகழ் அவர் வாழ் புளமங்கை' என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. முதலாம் இராசராசன் காலத்திலும் வேதம் ஓதும் பணி தொடர்ந்தது என்பதை இக்கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது.[14]

சதுர்வேதிமங்கலத்து மகாசபையார் அவர் தம் ஆளுகைக்குட்பட்ட ஊர்களிலிருந்து வரி வசூல் செய்து அரசுக்கு அளிக்கும் பணியைச் செய்தனர். நீர்ப்பாசனத்தைத் தன் அதிகாரத்தில் வைத்திருந்தது. ஊர்ப்பொது நிலங்களின் மேல் தன் அதிகாரத்தை வைத்திருந்தது.

வணிகமும் பொருளாதார நிலையும்

புள்ளமங்கலம் கல்வெட்டுகளும், சிற்பங்களும் காட்டும் சமூகப் பொருளியல் ஆகியவை சோழர் காலப் பிரமதேயங்களில் காணப்பெற்ற சமூக அமைப்பையும், பொருளியல் நிலையையும் பெற்றிருந்தது எனலாம். பிரமதேயத்தில் பிராமணர்களே ஆட்சியாளர்களாய் விளங்கினர். இங்குள்ள பல கல்வெட்டுகள் மகாசபையையும், சபையையும் பற்றி பேசுகின்றன.[15] மகாசபை கூடியது குறித்து மூன்று கல்வெட்டுகள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. ஸ்ரீகண்டமங்கலம், மங்கலம் ஆகிய சதுர்வேதிமங்கலங்கள் புள்ளமங்கலம் மகாசபையின் ஆதிக்கத்தில் இருந்துள்ளன. வேதம் ஓதும் பிராமணர்கள் வாழ்ந்தமை பற்றியும் இரண்டு கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

அவற்றில் ஒன்று வேதம் ஓதும் பிராமணர்கள் புள்ளமங்கலத்தை விட்டுப்போய் விட்டார்கள் என்று கூறுகின்றது. இதன்மூலம் பிரமதேயம் செல்வாக்கிழந்து வருவதை உணரமுடிகின்றது. இக்கல்வெட்டு இராசராசனின் 21-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது. அவன் காலத்திலிருந்து படிப்படியாக செல்வாக்கு குறைந்து காலப்போக்கில் முழுமையும் குறைந்து போயிற்று. இந்த பிரமதேயத்தில் வெள்ளாளர்கள் வாழ்ந்துள்ளனர். அவர்கள் உழுதுண்ணும் குடிகளாக வாழ்ந்திருக்க வேண்டும். வெள்ளாளர்களின் குடியிருப்புகள் இருக்கும் பகுதியில் இயற்கையாகவே வணிகரும் குடியேறுவது இயல்பே. ஏனெனில் பிரம்மபுரி என்று இவ்வூர் வணிகக் குடியேற்றத்திற்குப் பின்பே குறிக்கப்பெறுகின்றது. வணிகம் நடைபெறும் ஊர்களே புரி என வழங்கப்பெறும். எனவே காவிரியின் ஆற்றுப்படுகையில் அமைந்துள்ள இவ்வூரின் பொருளாதார நிலையானது பாசன வேளாண்மையாலும், வேளாண் பொருட்களின் வணிகத்தாலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பது இதன் கல்வெட்டுகளால் உணரமுடிகின்றது.

மேலும் ஆடு, மாடு, எருமை முதலிய கால்நடைகள் பல புள்ளமங்கலம் கோயிலுக்குக் கொடையாக அளிக்கப்

பட்டுள்ளமையைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. கால்நடை களைப் பெற்றுக்கொண்டு கோயிலுக்கு நெய்யளந்தவர்கள் மன்றாடிகளே. இவர்கள் இடையர் வகுப்பினைச் சேர்ந்தவர்களாவர். இதனால் வேளாண்மையும், வணிகமும், கால்நடைவளர்ப்பும் இணைந்த சமூகப் பொருளியல் இப்பிரமதேயத்தில் இருந்தது எனலாம்.[16] கால்நடை வளர்ப்பும், வேளாண்மையும் நிறைந்த வளமானப் பகுதியில் வணிகம் செழித்திருப்பது இயல்பேயாகும். மேலும் இம்மூன்றினாலும் உயர்ந்த செல்வாக்கு நிலையை புள்ளமங்கலத்து கோயில் கட்டடக்கலைப் பாணியிலும், சிற்பமைவிலும் நாம் காணலாம். ஓரிடத்தின் செல்வச்செழிப்பு நிலையை அங்குள்ள கோயிலின் அமைப்பு முறை நமக்கு நன்கு எடுத்துக்காட்டிவிடும் என்பதற்கு புள்ளமங்கலத்துக் கோயில் ஒரு சிறந்த சான்றாகும்.

கலையும் இலக்கியமும்

தமிழகத்தில் ஆக்கப்பெற்ற சிற்பவடிவங்கள் உள்ளூர்த்தன்மை வாய்ந்தவை. சிவ வழிபாடு கி.பி. 5-ஆம் நூற்றாண்டிலிருந்து செல்வாக்கு பெறத் தொடங்கியது. இந்தியா முழுவதும் இதுதான் நிலைமை. ஆரியவர்த்தத்தில் வாழ்ந்த ஆரியர்கள் இந்தியாவில் வாழ்ந்த உள்ளூர் மக்களைத் தாழ்ந்தவர்களாகக் கருதினர். ஆனால் மக்கட்தொகையில் அவர்கள் மிகுந்திருந்தமையால் அவர்களுடைய கடவுளர் வடிவங்களை இந்துசமயத்தில் இணைத்துப் புதுப்புது கடவுளர் படிமங்களை உருவாக்கினர். இந்த ஆக்கத்திற்குப் புராணங்களைப் படைத்து இந்த புதுமை வடிவங்கள் பண்டைய மரபிற்குரியவை என்று காட்ட முயன்றனர். ஆரியரல்லாதார் கடவுளர்களை தொடக்கத்தில் கேலிக்குட் படுத்தினாலும் அவற்றை இந்துக்கடவுளர் குழாமில் இணைத்து ஆரியரல்லாத மக்களை ஆரியர் சமயத்தில் இணைக்க முயன்றனர். இந்த இணைப்பிற்கு எதிர்ப்பு இல்லாமல் இல்லை. இந்த எதிர்ப்பும் புராணங்களில் பதிவு செய்யப் பெற்றுள்ளன. கேரளத்தில் பகவதி அம்மன் வழிபாட்டில் பார்வதி சிவனைக் கொல்வது போல வரைந்து வழிபடுகின்றனர். காஞ்சி புராணத்தில் சிவனை பார்வதி கொல்வதாக பேசப் பெறுகின்றாள்.

உள்ளூர்த் தெய்வங்களை சைவத்தில் இணைக்கும் போது பல சிக்கல்கள் உருவானமை பற்றி புராணங்களும் இலைமறை காயாக பேசுகின்றன. சில ஊர்களில் ஊரகத் தாய்த்தெய்வங்கள் சிவனை மணக்காமல் தனித்து நிற்கின்றன. அதற்கு கன்னியாகுமரித் தெய்வம் சிறந்த சான்றாகும். மேலும் காஞ்சி காமாட்சி, மாங்காட்டு அம்மன், அங்காள பரமேசுவரி போன்ற தாய்த்தெய்வங்களின் புராணக்கதைகளை நோக்கவும் அச்செய்தி வலுப்படுகிறது.[17]

தென்னிந்திய அரசர்கள் தங்களின் அரசியல் அதிகாரத்தை கொண்டு செலுத்த சமயக் கோட்பாடுகளையும், கடவுளர் வடிவங்களையும் பயன்படுத்தினர். ஒரிசாவில் கஜபதிகள் எழுச்சி பெற்றபோது அவர்களின் பழங்குடித் தெய்வமான ஜெகந்நாதர் கிருஷ்ண வழிபாட்டுடன் இணைக்கப்பெற்று பெருந்தெய்வ வழிபாடாக மாற்றப்பட்டார். பெருங்கதையில் உதயணனுக்கு உதவி செய்த யானைக்குக் கோயில் கட்டி தேவதானங்கள் அளித்த செய்தி கூறப்பெறுகின்றது. பல ஊரகத் தெய்வங்கள் சிவ வழிபாட்டுடனும், விஷ்ணு வழிபாட்டுடனும் இணைக்கப் பெற்ற செய்தியினை தேவாரத்திலும், பிற தல புராணங்களிலும் குறிக்கப்பட்டுள்ளதை நாம் காணவியலும். இந்தப் பின்னணியில் புள்ளமங்கை கோயில் சிற்பங்களை அணுகவேண்டும்.

புள்ளமங்கை கோயில் கல்வெட்டுகளில் காளாபிடாரி என்னும் உள்ளூர்த் தெய்வத்திற்கு நிவந்தங்கள் அளித்தமை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தாய்த் தெய்வமே இங்கு ஊரகத் தெய்வமாக பல்லாண்டுகள் இருந்திருக்க வேண்டும். கி.பி.10-ஆம் நூற்றாண்டின் மையப்பகுதியில் முதலாம் பராந்தகனால் கட்டப்பட்ட இக்கற்றளியின் கருவறை நுழைவுவாயிலின் மேற்புறம் காட்டப்பட்டுள்ள சிறுசிறு புடைப்புச்சிற்பங்களான நந்தியுடன் சிம்மமும் உள்ளதை நோக்க இதன் இணைப்புச் செய்தி நமக்கு புலப்படுகிறது.[18] அவ்வாறே இம்மன்னனால் கட்டப்பட்ட மற்றுமொரு கற்றளியான திருவாவடுதுறைக் கோயிலில் அங்கு முதலில் உள்ளூர்த் தெய்வமாக வழிபடப்பெற்றவைகளான பசுவும்,

தாய்த்தெய்வமும் ஒன்றிணைக்கப்பட்டு கோமுகிஸ்வரர் என இங்குறையும் இறைவன் வழிபடப்பெறுவதும் மேற்கண்ட கூற்றினை உறுதிபடுத்துகிறது.[19] காஞ்சி கைலாசநாதர் கோயிலின் கருவறைத் திருச்சுற்றில் உள்ள சிற்றாலயங்களின் இடையிடையே உள்ள தாய்த்தெய்வ புடைப்புச்சிற்பங்களையும் நாம் இப்பின்னணியில் உற்று நோக்கலாம்.[20]

சோழர் காலத்தில் இலக்கியங்களும், புராணங்களும் எழுச்சிப் பெற்றதோடு அவை சிற்பவடிவங்களாக கோயில்களில் இடம்பெற்றன. கம்பராமாயணத்தின் மூன்று காண்டங்களின் கதைவடிவங்கள் அதிட்டானச் சிற்பங்களாக புள்ளமங்கை கோயிலில் செதுக்கப்பட்டுள்ளன.[21] இலக்கிய வருணனைகளுக்கேற்ப சிற்பங்களின் உருவமைதிகளையும் சோழர்கால சிற்பங்களில் காணலாம். புள்ளமங்கை, திருவாவடுதுறை, சீனிவாசநல்லூர், குடந்தைக் கீழ்க்கோட்டம் ஆகிய கோயில் சிற்பங்கள் இவற்றிற்குச் சான்று பகர்வனவாக உள்ளன. சிவபுராணம், மகாமேரு புராணம் முதலியவைகளில் கூறப்படும் சிவவடிவங்கள் தேவகோட்டங்களிலும், விமானத்தின் தளங்களிலும், கண்டப்படையிலும் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளதை மேற்கண்ட கோயில்களில் சோழர்கால படைப்புகளாகக் காணலாம்.

அடிக்குறிப்புகள்

1. தமிழ்ப் பேரகராதி
2. நாலாயிர திவ்ய பிரபந்தம்
3. தமிழ்நாட்டு கல்வெட்டுகள்
4. Swaminathan, S. “The Early Cholas”, p.228
5. ஆய்வாளர் நேரில் கண்டது.
6. ஆய்வேட்டு பின்னிணைப்பு
7. மேலது. நிழற்படங்கள் பின்னிணைப்பு
8. ஆய்வாளர் நேரில் கண்டது.
9. ஆய்வேட்டு பின்னிணைப்பு

10. பூங்குன்றன், ஆர். "தொல்குடி, வேளிர் அரசியல்", பக். 108
11. மேலது. பக். 108
12. பூங்குன்றன், ர. கல்வெட்டு வல்லுநர், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
13. ஆய்வேட்டு பின்னிணைப்பு
14. மேலது.
15. மேலது.
16. பூங்குன்றன், ர. கல்வெட்டு வல்லுநர், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
17. மேலது.
18. ஆய்வாளர் நேரில் கண்டது.
19. மேலது.
20. மேலது.
21. சுப்ரமணியன், ச.வே. கம்பராமாயணம், பக். 35, 36, 40, 43, 85, 86, 165, 171, 173, 202, 204, 258, 397, 581

7. கட்டடக்கலை

விமானம் பொதுத் தோற்றம்

தாங்குதளம் அகழி அமைப்புடையதாக உள்ளது. உபபீடமற்ற நிலையில் அதிட்டானத்தில் இருந்தே தாங்குதளம் தொடங்குகிறது. அதிட்டானப்பகுதி நாற்புறமும் குழிவாக, பள்ளப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதால் அகழி போன்ற தோற்றம் பெற்றுள்ளது. இக்கோயில் மூன்று தளங்களையுடைய நாகரபாணி விமானத்தை உடையதாகும். கருவறை சதுர வடிவம் கிழக்கு நோக்கிய சன்னிதியைப் பெற்றுள்ளது. இரண்டு தளங்களின் தேவகோட்டங்களிடையே பஞ்சரங்கள் உள்ளன. கீழ்த்தளத்தில் நான்கு பக்கங்களையுடைய 2 அரைத்தூண்கள் உள்ளன. அவை யாளி வரிமானத்தின் மேல் நிறுவப் பட்டுள்ளன. அரைத்தூண்களில் சிற்றுருவங்கள் அமைக்கப் பட்டுள்ளன. கொடுங்கைகள் சாய்வாகவும், சுருள்களை உடையனவாகவும் காணப்படுகின்றன. சிற்றுருவங்களின் நடுவில் காணப்படும் மனித உருவங்கள் பூக்கொடிகளால் வளைக்கப்பட்டுள்ளன.

விமானத்தின் முதல் தளத்தில் கோட்டங்களில் சிவனின் பல்வேறு வடிவங்கள் உள்ளன. இரண்டாவது தளம் அரை வடிவத்தில் உள்ளது. நடுவே உள்ள கோட்டத்தில் உள்ள சிலை திரிபங்க நிலையில் உள்ளது. பின்னங்கால்கள் மேல் நின்ற விலாப்புறத்தை நோக்கித் தாங்கி இருக்கும் இருயாளி உருவங்களைக் காணலாம். தேவகோட்டத்தின் சிகரம் செவ்வகவடிவினதாய் வண்டிக்கூடு போன்ற அமைப்போடு கொடுங்கையில் கூட்டோடு இணைந்து காட்டப்பட்டுள்ளது. கருவறையின் தாங்குதள கொடுங்கைக்கும், மேல்தள தொடக்கத்துக்குமிடையே பறவைகள், விலங்குகள், கணேசர் உருவங்கள் இவற்றைக் கொண்ட பூதகண வரிசை உள்ளது.

இக்கொடுங்கை ஓரங்களில் வட்டங்களாலும், முகப்புகளில் கூடுகளாலும் அணி செய்யப்பட்டுள்ளது.


பராந்தகச் சோழன் கற்றளிகளில் கட்டடக்கலையில் தனித்துவம் பெற்று விளங்குவது புள்ளமங்கை பிரம்மபுரீசுவரர் கோயிலாகும். இக்கோயில் விமானத்தின் அதிட்டானம் பாதபந்தம், பத்மபந்தம் என்ற இரண்டையும் பெற்று, இவ்விமானம் கபோதபந்த அதிட்டானமாக அமைந்துள்ளது. அதிட்டானம், பாதம், பிரஸ்தரம், நிலைகள், கண்டம், சிகரம் என அனைத்து உறுப்புக்களும் சதுரவடிவம் பெற்று நாகர பாணியாக விளங்குகின்றது. பிரஸ்தர மட்டத்திற்கு மேல் அமையும் ஹார வரிசைகளாக கர்ணக்கூடு, அகாரை மற்றும் அகாரையில் பஞ்சரம், முகசாலை போன்ற அலங்கார அணி வரிசை அமைந்திருக்கின்றது. இந்த அணிவரிசைகள் மொத்தம் எட்டு பத்திகளை உடையன. நான்கு பக்கமும் எட்டு பத்திகள். கர்ணக்கூடு-1, அகாரை-2, முகசாலை-2, அகாரை-2, கர்ணக்கூடு-1 என்ற வகையில் அமைந்துள்ளது. இது பத்திமானம் எனப்படும். இந்த பத்திமானம் அதிட்டானம் முதல் நாசிகை வரை அமையும். கட்டட சாத்திரவிதிகளின் படி உயரம், அகலம் ஆகிய அளவுகளைக் கொண்டு கணக்கிடும்போது இதனை 'ஜயத விமானம்' என அழைக்கலாம். மானசார விதிப்படி 'ஜயத விமானம்' வெற்றியைத் தரக்கூடிய விமானம் என பொருள்படும்.



விமான கட்டட அமைப்பு

நீர் தேங்குவதற்கான நாற்சதுர வடிவ குழிவில் அதிட்டானம் அமைக்கப்பட்டுள்ளது. உபானம், ஜகதி, இருபத்மவரிகளுக்கிடையே அமைந்த விருத்த குமுதம், கம்புகளுக் கிடையேயான கண்டப் பகுதியின் பாதங்களில் சிற்றுருவங்கள், சந்திர மண்டலத்தோடு கூடிய கபோதத்தின் முனை களில் வள்ளி மண்டலம் உள்ளது. அடுத்து யாளி வரிசை நேர் நோக்கில்






ஒன்றன் பின் ஒன்றாகவும், ஒன்றையொன்று நோக்கியும் காணப்படுகின்றன. யாளி வரிசையின் முனைகளில் திறந்த யாளியின் வாயில் வீரர் உருவம் உள்ளது. தொடர்ந்துள்ள வேதிகையின் கண்டப் பாதங்களில் இராமாயணச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இரு கம்புகளுக்கிடையே இவை உள்ளன. சுவர்ப்பகுதியில் அமைந்துள்ள தேவ கோட்டங்களும், கோட்டப் பஞ்சரங்களும் முன்னோக்கி நீட்டம் பெற்றதாக சோழர் கால தனிப்பட்ட கலைப்பாணியைக் காட்டி நிற்கின்றன.[1]

கோட்டப்பஞ்சரங்கள் இங்கு இரண்டு வகையாக உள்ளன. பத்மஜகதியைக் கொண்ட நிஷ்காந்த பஞ்சரம் சிறப்பாக அமைக்கப்பட்டும், அகழி அமைப்பின் மேல் அமைக்கப்படும் தாங்குதளத்தின் பத்மஜகதியானது நீரில் மிதக்கும் தாமரையைப் போன்ற தோற்றத்தை உருவாக்குகிறது. அரைத்தூண்களைப் பெற்றுள்ள சுவர்ப்பகுதியானது தரங்கப்போதிகையுடன் உத்தரத்தில் இணைகிறது. கூரைப்பகுதியானது வலபி, பூதவரி, கம்பு, கபோதம், கபோதத்தில் சந்திரமண்டல வரிசை மற்றும் முனைகளில் வள்ளிமண்டலம், கூடுமுகம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. கூரைப்பகுதியைத் தொடர்ந்து தளஅமைப்பில் கம்புகளின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள யாளிவரி, வேதிகையின் கண்டப்பகுதியில் கொடிக்கருக்கு வேலைப்பாடுகள் உள்ளன. இந்தத் தொகுதி தள அமைவிற்கு தாங்குதளமாக அமைகிறது.

கர்ணக்கூடு, அகாரை-2, சாலா-2, அகாரை-2, கர்ணக் கூடு என எட்டுப்பத்திகளாக முதல்தளமும், மேற்கண்ட வற்றில் சாலாப் பகுதி மட்டும் இரண்டாகவும், மற்ற தள உறுப்புகள் ஒன்றாகவும் ஆறு பத்திகளைக் கொண்டதாக இரண்டாவது தளமும் அமைந்துள்ளன. கீரிவப் பகுதியின் நான்கு புறமும் இரண்டிரண்டு நந்திகளாக எட்டு நந்திகள் உள்ளன. கிரீவப்பகுதியின நாற்திசையிலும் வெற்றுக் கோட்டங்கள் பிற்கால சிகர அமைப்பில் அமைக்கப் பட்டுள்ளன. நாகர பாணி சிகரத்தின் கலசமும் நாற் சதுரமாக உள்ளது.




அதிட்டானச் சிறப்பு

அதிட்டான உறுப்புகள் இங்கு மாற்றம் செய்யப் பட்டுள்ளன. உபானத்தின் மீது அமைந்துள்ள ஜகதிவரி, கர்ணக்கூடு பத்தியில் வேலைப்பாடற்ற ஜகதியாகவும், பஞ்சரப்பத்தியில் பத்மஜகதியாகவும் திகழ்கிறது. அதிட்டானத்தில் கண்டப்படை மீது கபோதகவரி இடம்பெற்று இருப்பது இதன் தனிச் சிறப்பாகும். இக்கபோதக வரி பஞ்சரபத்தியில் வேதிகையாக உறுப்பு மாற்றம் பெறுகிறது.[2]

அதிட்டானச் சிற்பங்களின் அமைவு

அதிட்டானத்தின் கண்டப்படையில் சிறு சிறு சதுரவடிவில் புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கண்டப்படை சிற்பங்கள் இராமயணக் காட்சிகள் மற்றும் சிவலீலைகளை விளக்குவனவாக அமைந்துள்ளன. அதிட்டானத்தில் அமையும் வகையில் இப்புடைப்புச் சிற்பங்கள் ஆதித்தன் காலத்தில் தான் தோற்றம் பெற்றிருக்க வேண்டும்.[3]



அதிட்டானத்தை அழகு செய்யும் விதமாகவும், சிற்பங்களின் நுணுகிய கலைத்திறனாகவும், கட்டிடக் கலையின் ஒரு கூறாகவும் இக்கண்டப்படைச் சிற்பங்கள் அமைந்து வியப்பூட்டுகின்றன. மரத்தேர்களில் இவ்வாறு அமைக்கும் பாணியை இங்கு கல்லில் வடித்த பராந்தகன் கலைத் திறனைக் காண்போர் களியில் மூழ்குவர்.


பாதச்சுவர்

பாதச்சுவர் அதிட்டானத்தின் கபோதகத்தின் மீது இடம்பெறும் யாளிவரியின் மேல்மட்டத்திலிருந்து


தொடங்குகிறது. இக்கோயிலின் கருவறை புறச்சுவர் பகுதி வேதிகை, நிஷ்கராந்த பஞ்சரம், தேவகோட்டம், மகரத்தோரணங்கள் மற்றும் போதிகைச் சிற்பங்களுடன் அணிசெய்யப்பட்டுள்ளது. பாதச்சுவரை அலங்கரிக்கும் வேதிகை வரியானது கண்டம், கம்பு, வேதி பத்மம், வாஜனம் ஆகிய சிற்றுறுப்புகளோடு அமைந்துள்ளது. வேதிகைக் கண்டப்பகுதியிலும் சிறிய சதுரவடிவப் பட்டைகளின் நடுவே புடைப்புச் சிற்பங்கள் சிவஉருவங்களைக் காட்டி நிற்கின்றன. சுவரைச்சுற்றிலும் மரத்தேர்களின் வேலைப் பாடுகள் போன்று அமைக்கப்பட்டுள்ள கட்டடத்திறனோடு கல்லிலே கலைவண்ணத்தை காட்டிநிற்கும் பராந்தகனின் புதுமைக்கோயிலாகும் இது.

அரைத்தூண்கள்

கருவறை மற்றும் அர்த்த மண்டபத்தின் புறச்சுவர்பகுதி முழுவதும் அரைத் தூண்களால் அணி செய்யப்பட்டுள்ளது. அதிட்டானத்தில் மேல் இடம்பெறும் இவ்வர்க்கம் பாதம் எனப்படும். சுவரைச் சுற்றிலும் அலங்கரிக்கும் இத்தூண்கள் யாவும் கால், இடை, பத்மக்கட்டு. கலசம், குடம், பாலிகை, பலகை, வீரகண்டம், தரங்கப்போதிகை ஆகிய உறுப்புகளோடு அமைந்து உத்திரத்தோடு இணைகின்றன. தூண்கள் சதுரம், நீண்ட கட்டுப்பகுதி நான்கு பட்டையாகவும், மாலைத்தொங்கல்களுடன் கூடிய இடைப்பகுதியும் கொண்டனவாக அமைந்துள்ளன. இத்தூண்களின் மேற் பகுதியில் பூத்தோரணங்களும், மாலைகள், வட்டங்கள் போன்ற சித்திர வேலைப் பாடுகள் முதலியன இடம் பெறுகின்றன. மாலாஸ்தானம் எனப்படும் மாலைத் தொங்கல் அலங்காரப்பகுதியில் சிறுசிறு வடிவில் நடனமாதரும், இசைமுழக்கும் மகளிரும் சிற்பங்களாக அமைந்துள்ளனர்.



மாலைத்தொங்கல் இருபிரிவுகளாக உள்ளது. மாலைத்தொங்கலின் மேற்பகுதி இடைக்கட்டு ஒன்றினால் நீண்ட கீழ்க்கட்டிலிருந்து பிரிக்கப்பட்டு, அப்பகுதியில் மாதர்களின் நாட்டியக் கரணச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. மாலைத்தொங்கல் என்னும் ஒரு அலங்காரஉறுப்பை இரண்டாகப் பகுத்து மேற் பகுதியில் கரணச் சிற்பங் களும், தொங்கலாகிய கீழ் பகுதியில் நடனச் சிற்பங் களையும் எழில்பட அமைத் துள்ளமை காணுந் தோறும் கவினுறும் காட்சி யாகும். மேலும், இத்தூண்கள் இங்கு இடம்பெற்றுள்ள நிலையில் மற்றொரு சிறப்பானது, அவை சுவரைச் சுற்றிலும் அலங்கரிக்கும் நிலையில் கர்ணக்கூடு பத்தியிலும், பஞ்சரப் பத்தியிலும் சதுரமாகவும், முகசாலையில் எண்பட்டையாகவும், கோட்டங்களில் வட்டமாகவும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட நிலையில் அமைந்துள்ள தனித்த தன்மையாகும்.[5]




அரைத்தூண்கள் அமைப்பது சுவர்ப்பகுதியை அழகு செய்வது மட்டுமோடல்லாது, அவை விமான மேற்பகுதியினை தாங்கும் ஒரு தாங்கிக் கால் உறுப்பாகவும் அமைக்கப் பட்டுள்ளது. மர வேலைப்பாடுகளில் அமையும் இவ்வித நுணுக்கங்கள் இங்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதிட்டானத்தில் கண்டபாதத்தில் தொடங்கும் பாதபந்தத்தின் தொடர்நீட்சியாகவே சுவர்ப்பகுதியில் அரைத்தூண்கள் இடம்பெறுகின்றன. தூண்களின் இந்நீட்சியானது கூரைப் பகுதியில் கர்ணக்கூடு, பஞ்சரம், முகசாலை ஆகியவற்றோடு இணைவதாக உள்ளது.[6] கூரைஉறுப்புகளை தாங்கும் பொருட்டு அதிட்டானத்திலிருந்தே அமைத்து மேல்நோக்கி கொண்டு

செல்லப்படும் மிக முக்கிய தாங்கு உறுப்பாகும் இத்தூண்கள். மரத்தில் அமைக்கப்படும் தாங்கிகள் போன்று கல் வேலைப் பாடுகளுக்கும் அதிமுக்கியமானதாவெனில், அவை விமானத்தின் மொத்த எடையை சமநிலைப்படுத்துகின்றன அதாவது விமான கொள்ளளவு முழுவதும் தாங்குதளத்திற்கே உரியதாக்காமல் அதனை பரவலாக்குகின்றன என்றே கூறவேண்டும். கட்டிடக்கலையில் அதிநுணுக்கமான முறையாகும் இதுவென்றே கருதலாம்.

கோட்ட பஞ்சரம்

கருவறையின் தெற்கு, மேற்கு, வடக்கு மற்றும் அர்த்தமண்டபத்தின் வடக்கு, தெற்கு ஆகிய பக்கங்களில் கோட்டப் பஞ்சரங்கள் அமைந்துள்ளன. அதிட்டானப் பகுதியில் வேதிகை, கால், தொங்குமாலை, இடைக்கட்டு, கலசம், பத்மம், கண்டம், குடம், கண்டம், பலகை வரை அரைவட்ட வடிவாக உள்ளது. அதற்கு மேலே உத்தரம், மகரதோரணம் அமைந்து, அரைவட்ட காலில் தொங்குமாலை, கலசம், சட்டதளம் போன்ற பகுதிகளில் கொடிக் கருக்குகளின் வடிவமைப்பு பெற் றுள்ளன. மகரதோரணத்தின் நடுவில் அமைந்த அலங்கார வளைவில் கஜசம்ஹாரமூர்த்தி, படுத்திருக்கும் கிருஷ்ணன், பறவையின் மேல் அமர்ந்துள்ள இறையுருவங்கள் (விஷ்ணு), உமாமகேசுவரர் முதலிய சிற்றுருவங்கள் காட்டப்பட்டுள்ளன. யாளியின் வாயிலிருந்து வெளிவரும் வளங்கொடுக்கும் தோரணத்தில் பல சிறு பூதகணங்கள் அலங்கார வளைவுகளாகக் காட்டப்பட்டுள்ளது.




நிஷ்கராந்த பஞ்சரம்

கருவறை அகாரைப்பகுதியில் இடம்பெறும் பஞ்சரம் இங்கு மிகவும் வளர்ச்சியடைந்த நிலையில் காணப்படுகிறது. நிஷ்கராந்த பஞ்சரம் என்னும் வகையைச் சார்ந்த இப்பஞ்சரம் இங்கு உபானத்திலிருந்து எழுந்து கபோதக வரியில் யாளி மட்டத்திற்கு மேல் உயர்ந்து செல்கிறது.

பிரஸ்தரம்

பிரஸ்தரம் இங்கு கல் அமைப்பாகும். கருவறையின் மேற்கூரை பிரஸ்தரம் எனப்படும். இது பாதப்பகுதிக்கு மேல் அமையும். இது உத்தரம், கம்பு, வலபி, கொடுங்கை வரி (கபோத வரி), கபோதம், வியாழவரி முதலிய வர்க்கங்களைக் கொண்டுள்ளது. உத்தரத்தில் அமைந்த வலபியில் பல சிற்பங்கள் காணப்படுகின்றன. கொடுங்கையில் அமைந்துள்ள பூதவரியில் கணங்கள் வரிசையாக காட்டப்பட்டுள்ளன. அவை இசைக் கருவிகளை வாசித்துக் கொண்டும், ஆடல் பாடல்களோடு மகிழ்வுற்ற நிலையில் உள்ளன. கணங்கள் இரண்டு முத்தமிடும் காட்சியும், ஒன்றின் வாயை மற்றொரு கணம் பிடித்திழுக்கும் காட்சியும் அவற்றின் அங்க சேஷ்டைகளைக் காட்டி நிற்கின்றன. கொடுங்கை கீழே உள்ள பூதவரியில் அரைத்தூண் பலகையின் மீது நந்தி, பூதகணம், யானைத்தலையையுடைய கணம் ஒன்று, பூதகணம் படுத்த நிலையில் உள்ளது. கபோதக் கூடுகளில் யக்ஷன், யக்ஷி முக வடிவங்களும், சிங்கமுகமும், மனித உருவமும் அமைந்துள்ளன. கபோதக்கூடுகள் கீர்த்திமுக தோரணஅமைப்பு பெற்று நடுவில் வட்டவடிவ முகப்புகளைப் பெற்றுள்ளன. கபோதத்தில் வரிசையாக சிறு சிறு வட்டவடிவமாக




சந்திரமண்டலம் அமைந்துள்ளது. கபோதத்தின் மூலைப்பகுதியிலும், மையத்திலும் வள்ளிமண்டலம் கொடிக்கருக்குப் போன்று அமைக்கப்பட்டுள்ளது.

கருவறை விமானத்தின் கூரைப்பகுதியில் நான்குபுறமும் கபோதத்தின் கீழ் பூதவரியும், கபோதமும், யாளிவரிமானமும் சுற்றிச் செல்கின்றன. மேற்குப்புறத்தின் பூதவரிமானத்தில் கணம் ஒன்று ஒரு பறவையைப் பிடித்தவாறு உள்ளது. இப்பறவை கழுகாய் இருக்கலாம். புள்ளமங்கை என்பதின் புள் இப்பறவையைக் குறிப்பதாகக் கருதவும் இடமுண்டு.

முதல்தளம்

கருவறை பிரஸ்தரத்தின் மேல் முதல் தளம் வரிசை அமைகிறது. முதல் தளத்தின் வரிசையானது எட்டு பத்திகளை உடையதாக இருக்கிறது. கர்ணக்கூடு-1, அகாரை-2, சாலா-2, அகாரை-2, கர்ணக் கூடு-1 என வரிசையாக அமைகிறது.



இரண்டாம் தளம்

கருவறை விமானத்தின் இரண்டாம் தளவரிசையானது மொத்தம் 6 பத்திமானங்களை கொண்டுள்ளது. கர்ணக்கூடு-1, அகாரை 1, சாலா-2, அகாரை-1, கர்ணக்கூடு-1 என அமைந்துள்ளது. இரண்டாம் தளத்தின் இந்த ஆறு பத்திகளும் முதல் தள வரிசையில் அமைந்த பத்திகளைவிட அளவில் சிறியதாக உள்ளது. அவை கட்டடப்பாணி அமைப்பின் சிறப்பினைக் காட்டி நிற்கிறது. கர்ணக்கூட்டின் அமைவில் அலங்காரமும் சற்று வேறு பட்டுள்ளது.



கர்ணக்கூடு

வியாள வரியை உபானமாகக் கொண்டு, இரண்டு கம்புகளுக்கிடையில் பாதத்துடன் கூடிய கண்டப்பகுதி, வேதிகை, பட்டிகை என தாங்குதளம் அமைய நாகரபாணிக் கோயிலின் சிறிய மாதிரி வடிவம் போன்று கர்ணக்கூடு அமைக்கப்பட்டுள்ளது. விமானத்தின் நாற்திசைகளின் மூலையிலும் வடிக்கப்பட்டுள்ள கர்ணக்கூட்டின் சுவர்ப் பகுதியானது அரைத் தூண்களுடன் கூடிய கோட்டங்களையும் அவற்றுள் இறையுருவங்களையும் பெற்று விளங்குகிறது.




ஓரங்களில் அமைந்துள்ளதால் இரண்டு கோட்டங்களை மட்டுமே நாம் காணமுடிகிறது. பிரஸ்தரத்தில் பூதவரி செல்கிறது. கபோதத்தில் சந்திர மண்டலமும் நடுவிலும், ஓரங்களிலும் வள்ளி மண்டலமும் அணிசெய்கின்றன. கீர்த்தி முகம் நாற் புறமும் கோட்டங்களின் மேற் பகுதியில் அமைகிறது. சிகரம் சதுரவடிவமானது. சிகரமும் கொடிகளால் அணி செய்யப் பட்டுள்ளது. சிகரத்தின் உச்சி யில் சதுரவடிவ கலசம் உள்ளது. சிறுகோயில் போன்ற அமைப்பைக் கொண்ட கர்ணக்கூடு முற்காலச் சோழர்களின் கலையை எடுத்தியம்புகிறது.

பஞ்சரம்

இங்கு இரண்டு பஞ்சரங்கள் உள்ளன. கர்ணக் கூட்டினை விட சற்று உள் அடக்குமானம் பெற்று விளங்குகிறது. கர்ணக்கூட்டிலிருந்து வரும் வியாழவரியே பஞ்சரத்திற்கும் உபபீடமாகவும், அவ்வாறே தொடரும் இரண்டு கம்புகளுக்கிடையேயான பாதம் பெற்ற கண்டம், வேதிகை, பட்டிகை என தாங்குபகுதி அமைகிறது. தொடர்ந்து

அரைத்தூண்களுக்கு இடையில் இறை யுருவங்கள் உள்ளன. அரைத் தூண்கள் பாதம், கட்டு கலசம், காடி, பலகை வீரகண்டம் இவற்றோடு தரங்கப்போதிகைப் பெற்று உத்தரத்தில் இணைகிறது. கூரைப்பகுதி கபோதத்தில் சந்திர மண்டலத்தைக் கொண்டுள்ளது. மேலும் கோட்டங்களின் மேலே கீர்த்திமுகம் அணித் தோரணமாக பிரஸ்தரத்தில் உள்ளது.



சாலா

சாலாப் பகுதியானது இக்கோயில் விமானத்தில் இரண்டாக அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு கலசங்கள் அமைந்துள்ள நிலையில் இதைக் கூறமுடியும். வியாழவரியை பீடத்தில் கொண்டு தொடங்கும் அரைத்தூண்களுடன் அமையப்பெற்ற மையக் கோட்டத்தில் இறையுருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. வியாழவரியுடன் கூடிய பீடமானது இங்கு உபானமாக உள்ளது. உபானத்தைத் தொடர்ந்து பாதத்துடன் கூடிய கண்டப்பகுதி, கம்பு, வேதிகை, பட்டிகை என தாங்குதளம் அமைகிறது. அடுத்துவரும் சுவர்ப் பகுதியில் இருபுறமும் இரண்டு மனிதர்கள் தங்கள் தோள்களில் சாலை விமானத்தைத் தாங்கிக் கொண்டு விமானந் தாங்கிகளாக நிற்கின்றனர். சாலையின் இருபுறமும் முகப்புப்பகுதியில் வில்வண்டியின் பின்புறம் போன்று வளைக்கப்பட்ட நிலையில் கொடிக்கருக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.




கோட்டத்தின் மேற்கூரைப் பகுதியானது கீர்த்திமுகம் போன்று கொடிக்கருக்கு மலர்த் தோரணங்களால் அணி செய்யப்பட்டுள்ளது.

கிரீவம்

கிரீவத்தின் நான்கு திசைகளின் முனைகளிலும் அமர்நிலையில் இரண்டிரண்டு நந்திகளாக எட்டு நந்திகள் உள்ளன. இவை கல்லாலான சோழர்கால நந்திகளாகும்.


சிகரம்

சதுரவடிவமாக அமைந்த நாகரபாணி சிகரம் ஆகும். தற்காலத்தில் செங்கல், சுதையால் அமைக்கபட்ட சிகரமாக காட்சி யளிக்கிறது. நான்கு புறங்களிலும் மகாநாசிகை அமைய இடையில் சிறு நாசிகைகள் காட்டப் பட்டுள்ளன.



கருவறை

சதுர வடிவ கருவறையின் மையப்பகுதியில் இலிங்கவடிவாய் இறைவன் காட்சியளிக்கிறார். நீண்ட கருங்கல் பலகைகளைக் கொண்டு கருவறையின் கூரை மூடப்பட்டுள்ளது. நாகர விமானத்தின் பாணிக்கேற்ப கருவறை அமைந்துள்ளது. கருவறையின் நுழைவானது அலங்காரம் ஏதுமற்ற நீண்ட செவ்வகவடிவ நிலையுடன் உள்ளது.




கருவறையைத் தொடர்ந்து அதனோடு இணைப்பாக அந்தராளம் அமைந்துள்ளது. அந்தராளம் கருவறையையும்,

அர்த்தமண்டபத்தையும் இணைக்கும் இடைநாழியாகும். அந்தராளம் அரைத்தூண்களுடன் கூடிய நுழைவாயிலோடு பூதவரியோடு முகப்பினைப் பெற்று விளங்குகிறது. அரைத்தூண்கள் சுவரோடு இணைந்து பாதம், கால், இடைக்கட்டு, மாலாஸ்தானம், பத்மகட்டு, கலசம், காடி, கண்டம், பலகை, வெட்டுப்போதிகை என்ற வர்க்கங்களைப் பெற்று உத்தரத்தோடு இணைகிறது. இந்த சிறிய இடைநாழியானது முற்காலச் சோழர்கலைப்பாணியாகும். இப்பகுதியில் நின்று பிராமணர்கள் வேதம் ஓதினர்.[8]

அர்த்தமண்டபம்


பொதுவாக கருவறை, அந்தராளம், அர்த்தமண்டபம் மூன்று ஓரே பகுதியாகக் கொள்ளப்படும். ஏனெனில் அர்த்தமண்டபத்தின் நுழைவுவாயிலில் தான் இருபுறமும் வாயிற்காவலர்களும், அலங்கார முகப்பும் அமைக்கப்படும். அர்த்தமண்டபம் என்பது பொதுவாக கோயில்களில் மண்டபங்கள் அமைக்கப்படும் அளவில் பாதியளவில்தான் இருக்கும். இம்மண்டபம் கருவறையோடு இணைந்த பகுதியாகும். அர்த்த என்பதே ஒரு பாதி எனப்பொருள் படும். அர்த்த மண்டபம் பொதுவாக அதிகத் தூண்களைப் பெற்றிருப்பதில்லை. இங்கு நான்கு சோழர்கால முழுத் தூண்களும், சுவர்ப்பகுதியோடு இணைந்த நான்கு அரைத் தூண்களும் உள்ளன. நுழைவாயிலின் இருபுறமும் வாயிற்காவலர்கள் உள்ளனர். இவர்களுக்குப் பின்னால் இருபுறமும் சுவரோடு இணைந்த கோட்டப்பஞ்சரம் அமைக்கப்பட்டுள்ளது. இவை வாயிற்காவலர்களுக்கு உரியதாகத் தெரியவில்லை. ஏனெனில் இவற்றின் உயரத்தைவிட வாயிற் காவலர்களின் உருவம் உயரமாக அமைந்துள்ளது. இம்மண்டப நுழைவு நிலை





வாயிலானது அலங்கரிக்கப் பட்ட கொடிக்கருக்கு முகப்பினையும், மேற் சட்டத்தில் நந்தி, சிம்மம் ஆகிய சிற்றுருவங் களையும் பெற்று விளங்கு கின்றது. மேலும் இதன் உத்தரப்பகுதியில் நாற் புறமும் பூதவரிகள் காணப் படுகின்றன. மேற் கூரைப் பகுதியானது தென்வடலாக நீண்ட கருங்கல் மூடு பலகையை சிறிய சதுரங்களாக வெட்டப்பட்ட அமைப்பினைக் கொண்டுள்ளது. இம்மண்டபம் 14.3 அடி அகலமும், 20.3 அடி நீளமும் கொண்டுள்ளது.

அர்த்தமண்டபத் தூண்



நான்கு முழுத்தூண்கள் இம் மண்டபத்தில் உள்ளன. சதுரம், கட்டுப்பகுதி பதினாறு பட்டைகளுடனும், இடைக்கட்டு தொங்குமாலையுடனும், பத்மகட்டு, கலசம், கண்டம், பலகை இவற்றுடன் மேற்பகுதியில் தரங்கப் போதிகை பெற்று உத்தரத்துடன் இணை கின்றது. மாலாஸ்தானம் பகுதியில் நாட்டியமாடும் பெண் சிற்பங்கள் தொங்கும் மாலை போன்ற அமைப்பில் காட்டப்பட்டுள்ளனர். மேலும் இசைக் கலைஞர்களும் உள்ளனர். தூண்களுக் கிடையில் உள்ள தூரம் 4.11 அடியாகும்.


மகாமண்டபம்

இது பிற்கால அமைப்பாகும். அர்த்த மண்டபத்திற்கும், முகமண்டபத்திற்கும் இடையில் அமைந்துள்ள அளவில் சற்றுப் பெரிய மண்டபமாக இது உள்ளது. கிழக்கு மேற்காக இம்மண்டபம் நீண்டுள்ளது. இதன் நீளம் 30 அடி ஆகும். அகலம் 19.9 அடி ஆகும். இம் மண்டபத்தில் ஆறு தூண்கள் வரிசை கொண்டுள்ளன. தூண்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்ட அமைப்பைக் கொண்டன வாக உள்ளன.



மகாமண்டபத் தூண்கள்


இங்குள்ள தூண்கள் மூன்று வகை வடிவுடையானவாக உள்ளன. இத்தூண்களின் உயரம் 8 அடியாகும். தூண்கள் அளவிலும் சற்று மாறுபட்டவையாக உள்ளன. முதல் வகைத் தூண் சதுரம், ஆறுபட்டை கட்டு, சதுரம், நான்கு பட்டை கட்டு முதலியன வோடு வெட்டுப்போதிகைப் பெற்று உத்தரத்தில் இணைகின்றது. இந்தத் தூண் எவ்வித வேலைப்பாடுமின்றி சாதாரணப் பட்டைத்தூண் கள் உள்ளன. இரண்டாம் வகைத் தூண் முதல் வகை போன்றல்லாமல் சதுரம், கட்டுப்பகுதி மூன்று இடைக் கட்டுகளுடனும், அடுத்து வரும் சதுரப் பகுதியில் நாற்புறமும் தாமரைப் பதக்கங்களைப் பெற்றும்,




மீண்டும் மூன்று இடைக்கட்டுப்பகுதியும், அடுத்து தாமரைச் சதுரமும் கலசம், சிறுபத்மகட்டு, பலகை பெற்று மேற்பகுதியில் வெட்டுப்போதிகையோடு உத்தரம் சேர்கிறது. மூன்றாம் வகைத்தூண் இரண்டாம் வகைத்தூண் போன்று விளங்கினாலும் இரண்டாம் சதுரத்தில் அதாவது கால்பகுதியில வரும் சதுரத்தில் உருவங்களைப் பெற்று வருகிறது. அளவிலும் சற்று வேறுபட்டுள்ளது.

முகமண்டபம்

இரண்டு வரிசையில் ஐந்து ஐந்தாக பத்துத் தூண்களுடன் விளங்குகின்றது. கிழக்கு மேற்காக நீண்டுள்ள இம்மண்டபத்தின் நடுவில் பிற்கால சிறிய நந்தி சிலை உள்ளது. மண்டப நுழைவின் தென்புறம் சிறிய அறை ஒன்று உள்ளது. இது பயன்பாட்டில் இல்லை. மேலும் இதன் வாயில்இரும்புக் கதவுகளைப் பெற்று விளங்குகிறது. இம்மண்டபம் மகா மண்டபத்தின் அளவினை உடையதாக உள்ளது. நவக்கிரக சிற்பங்கள் மண்டபத்தின் வடக்கில் உள்ளன. மண்டபத்தின் தெற்கில் சித்தி விநாயகருக்கு சிறிய சன்னிதியும், அச் சுவரின் தென்புற ஓரத்தில் நால்வர் சிலைகளும் காணப்படுகின்றன. இதனோடு இணைந்த பிரகாரமண்டபமும் பிற்கால அமைப்பாகும். இங்கு நான்குத் தூண்கள் உள்ளன. இவையும் முகமண்டபத் தூண்களின் அமைப்பையே பெற்றுள்ளன. இத்தூண்கள் யாவும் ஒரே நேர்க்கோட்டில் இருவரிசையாக அமைக்கப்பட்டுள்ளன.



முகமண்டபம் / பிரகாரமண்டபத் தூண்



இவ்விரு மண்டபங்களிலும் உள்ள மொத்தம் 14 தூண்களும் பட்டைடத் தூண்களாகும். இவை எவ்வித அலங்கார வேலைப்பாடின்றி உத்தரத்தைத் தாங்குவனவாக உள்ளன. சதுரம், கட்டு நாற்பட்டையாகவும், சதுரம், நாற்பட்டைக் கட்டு, வெட்டுப்போதிகை பெற்று விளங்குகின்றன.

நடராசர் கருவறை / விமானம்

முகமண்டபத்தின் வடக்குப்பக்கம் தென்புறம் நோக்கிய வாயிலை உடையதாக உள்ளது. தற்போது நடராசர் கருவறையாக இது இல்லை. நீண்ட சாலை போன்ற அமைப்புடையதாக கிழக்கு மேற்காக நீண்டு செவ்வக வடிவ அறையாக உள்ளது.

விநாயகர் கருவறை / விமானம்

முகமண்டபத்தின் தென் கிழக்கு மூலையில் விநாயகருக்கு சிறு சந்நிதி அமைந்துள்ளது. இது கன்னிமூலை கணபதி போன்று அமைக்கப் பட்டுள்ளது. ஏகதளத்தைக் கொண்ட சிறு சதுரவடிவ விமானத்தைக் கொண்டுள்ளது.



சண்டேசர் சந்நிதி


திருச்சுற்றின் வடக்குப் புறத்தில் பிரநாளத்திற்கு முன்பாக தெற்கு நோக்கி சண்டேசர் சந்நிதி வட்டவடிவ விமானத்துடன் ஏகதளமாக அமைந்துள்ளது. இது பிற்கால கட்டட அமைப்பாகும்.




கருவறை சிறிய சதுர வடிவ அறை யாக உள்ளது. செங்கல், சுண்ணாம்பினால் கட்டப்பட்டுள்ள இக்கருவறையின் நடுவே சண்டேசர் சிற்பம் உள்ளது.

அம்மன் கருவறை விமானம்

ஏகதளத்தினைக் கொண்ட பிற்காலக் கட்டட அமைப் பாகும். கருங்கற்களை அடுக்கிக் கட்டப்பட்டுள்ள சுவர்ப் பகுதியை தாங்கும் அதிட்டானம் பீடம், ஜகதி பெற்றுள்ளது. சுவர்ப் பகுதியில் வேலைப்பாடற்ற அரைத் தூண்கள் உள்ளன. கூரைப் பகுதியில் வலபி, கம்பு, பூதவரி, கூடுமுகங்களுடன் கூடிய கபோதம் மற்றும் அதற்கு மேலே யாளிவரி என கற்றளி அமைப்பினைப் பெற்றுள்ளது. சிகரமானது செங்கல், சுண்ணாம்பு இவற்றால் ஆனது. வெற்றுக் கிரீவக் கோட்டங்களும், மகாநாசிகளும், சிறுநாசிகளும் அவ்வாறே சுதையால் அமைக்கப்பட்டதாகும் உலோகத்திலான கலசம் காணப்படுகிறது.



அம்மன் சந்நிதி




தெற்கு நோக்கியுள்ள கருவறை சதுர வடிவ மானது. மேற்கூரை கற்பலகைகளால் மூடப் பட்டுள்ளது. தொடர்ந்து சிறு அர்த்த மண்டபம் ஒன்று உள்ளது. வெளி வாயிலானது தற்கால

வளைவு முகப்பினைக் கொண்டு ரிஷப வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கோபுரம்

கோயிலின் கிழக்கு நோக்கி அமைந்த கோபுரம் தற்காலத்தில் அமைக்கப்பட்டதாகும். மூன்று நிலைகளை உடைய இக்கோபுரத்தில் கோயில் கட்டட அணி வர்க்கங்கள் ஏதும் இல்லை. பிரஸ்தர பகுதியில் உத்தரம், கம்பு, கபோதகம், வியாழவரி முதலியன இடம் பெறுகின்றன. சாலை வடிவ சிகரத்தின் உச்சியில் உலோகத்திலான ஐந்து கலசங்கள் உள்ளன. முழுவதும் வண்ணந் தீட்டப்பட்ட நிலையில் காணப்படுகிறது. மூன்று நிலைகளிலும் சாலையில் அமைந்த கோட்டங்களில் வாயிற் காவலர்கள் நிற்கின்றனர். இரண்டாம் நிலையில் கோட்டங்களில் அடியவர்களின் சுதைச் சிற்பங்கள் வணங்கிய நிலையில் அமைக்கப்பட்டுள்ளன. கிரீவப்பகுதியில் நந்தி சுதைச் சிற்பங்கள் உள்ளன. நுழைவு வாயிலில் மரக்கதவு அமைக்கப்பட்டுள்ளது.



அடிக்குறிப்புகள்

1. வாணி செங்குட்டுவன், கோயிற்கலை ஆர்வலர், மதுரை.
2. சந்திரமூர்த்தி, மா. தமிழ்நாட்டுச் சிவாலயங்கள்-2, பக். 271-272
3. மேலது. பக். 272
4. மேலது. பக். 272
5. ஆய்வாளர் நேரில் கண்டது.
6. வாணி செங்குட்டுவன், கோயிற்கலை ஆர்வலர், மதுரை.
7. மேலது.
8. அருணவசந்தன், பூசை.ச. சிவமஞ்சரி, பக். 822

8. சிற்பக்கலை

புள்ளமங்கை கோயில் சிற்பக்கலையின் உன்னத கலைப்பாணியை உடையதாக திகழ்கிறது. இக்கோயிலில் சிற்றுருவங்களாகவும், பேரமைப்பினைக் கொண்டதாகவும் சிற்பங்கள் எண்ணிக்கையில் மிகுந்துள்ளன. முற்காலச் சோழர்கால சிற்பக்கலைக்கு புள்ளமங்கை கோயில் சிறந்த சான்றாண்மையாகும். இக்கோயிலின்கண் உள்ள சிற்பங்களை 1. விமானம் தளச்சிற்பங்கள் 2. விமானம் சுவர்ச் சிற்பங்கள் 3. அர்த்தமண்டப சிற்பங்கள் 4. அர்த்தமண்டப சுவர் சிற்பங்கள் 5. அதிட்டானச் சிற்பங்கள் 6. அதிட்டான வேதிகைச் சிற்பங்கள் 7. தேவகோட்ட சிற்பங்கள் 8. பிற சிற்பங்கள் 9. பூதவரிச் சிற்பங்கள் 10. நாட்டிய சிற்பங்கள் என வகைப்படுத்திக் காணலாம்.


விமானம் தளம் - சுவர்ச் சிற்பங்கள்

விமானம் - முதல் தளம்

அ. தெற்குப் பகுதி

(1) இடதுபுறமுள்ள கர்ணக்கூடுவில் ஒரு பெண் நின்ற நிலை.

(2) பஞ்சரத்தில் கங்காளர் நிற்கிறார். இச்சிற்பம் காஞ்சி கைலாசநாதர் கோயிலில் கருவறைக் கோட்டத்தில் உள்ள கங்காளரைப் போன்ற உருவமைதியில் உள்ளது. கால்களில் பெரிய செருப்புகளுடன் நடக்கும் நிலையில் திரும்பிப்




பார்ப்பது போல அதன் அழகு உள்ளது. அரையாடை அணிந்துள்ளார். வலதுகையில் வலது தோளில் சாத்திய நீண்ட சூலம் உள்ளது. இடது கை அடையாளங் காணவியலா ஒன்றின் மேல் ஊன்றியுள்ளார். கைகளில் வளைகள் காட்டப்பட்டுள்ளன. வயிற்றில் உதரபந்தம் பட்டையாக உள்ளது. மார்பில் அணிகள் உள்ளன. தோள்வரை தொங்கும் நீள்காதுகளில் குண்டலங்கள் அணிந்து, விடைத்த மூக்கும், புன்னகை முகமுமாய், சடைமுடியுடன் காணப்படுகிறார்.

(3) பஞ்சரத்தில் நின்ற நிலை சிற்பம் ஒன்று உள்ளது. கணுக்கால் வரை உடையணிந்து, மார்பில் முப்புரிநூல், கழுத்தணிகள், கையணிகள் விளங்க, தலையை சற்று சாய்த்தவாறு, இருகைகளும் அபிநயித்தவாறு, காதுகளில் வளையங்கள் தொங்க, சற்று சாய்ந்த கோணத்தில் கரண்டமகுடம், நெற்றிப்பட்டை முதலிய தலையணி கொண்டு விளங்குகிறது.

(3) சாலாவில் பிச்சாடனர் நின்ற நிலையில் உள்ளார். இருபுறமும் விமானந்தாங்கிகள் தோளில் விமானத்தைத் தாங்கியவாறு உள்ளனர்.

பிச்சாடனர் நடுவில் முகப்பும், நெற்றிப் பட்டையும் கூடிய ஜடாமகுடராய், நீள்காது களில் மகரகுண்டலம், பனையோலைச் சுருள் விளங்க, கழுத்தணிகள் அழகு செய்ய, கையில் வளைகள் அணிந்த வராய், வயிற்றில் உதர பந்தம், மார்பில் பிரம்ம முடிச் சுடன் கூடிய



யக்ஞோபவீதம் துலங்க, ஆடையின்றி இடுப்பில் நாகத்தை சுற்றி வளைத்துக் கட்டியவராய், கால்களில் செருப்பு அணிந்து கொண்டு, இடதுகாலை நன்கு ஊன்றி, வலதுகாலை சற்று முன்னோக்கி வைத்து, நடக்கும் பாவனையில் நான்கு

திருக்கைகளுடன் விளங்குகிறார். மூன்று கைகள் சிதைந்துள்ளன. முன் வலக்கையால் மானுக்கு உணவூட்டலாம். இடதுபுறம் பூதகணம் ஒன்று அவரோடு நடக்கிறது. பூதகணம் அரையாடை அணிந்து, நெற்றிப்பட்டையுடன் கூடிய மகுடம் தரித்துள்ளது. மேலும் காதுகளில் வளையங்கள், கை, கால்களில் அணிகள் கொண்டிருக்கிறது.

(4) சாலாவை அடுத்துள்ள பஞ்சரத்தில் பெண் ஒருவர் நின்ற நிலையில் உள்ளார். பெரிய கொண்டையுடன் கூடிய தலையலங்காரத்தைக் கொண்டுள்ள இம்மங்கை நெற்றிப்பட்டையுடன், காதுகளில் பெரிய வளையங்களை அணிந்துள்ளார். மேலும் கழுத்தில் வடம் ஒன்றை அணிந்து, மார்பில் கச்சையோடு, கணுக்கால் வரை நீண்ட பட்டாடை அணிந்துள்ளார். ஆடையின் முடிச்சு வலப்புறம் உள்ளது. தோள்வளை, கேயூரம், முன்வளை அணிந்த இருகைகளும் விரித்த நிலையில் இறைவனைக் காட்டுவதாக உள்ளது. தலையை இடப்புறம் சாய்த்த நங்கையார் சிரித்த முகத்துடன் காணப்படுகிறார்.


(5) வலப்புறமுள்ள கர்ணக்கூடுவில் உள்ள ஆடவர் நின்ற நிலை சிற்பமானது, மேற்குநோக்கி சாலாவை பார்க்கிறது. கரண்டமகுடம், நெற்றிப்பட்டை ஆகிய தலையணி கொண்டும், சரப்பளி, கண்டி கழுத்தணி விளங்க, காதுகளில் குண்டலங்கள் அணிந்தும், கைகளில் தோள்வளை, கேயூரம், முன்வளை அணிந்தும், கணுக்கால் வரை நீண்ட பட்டாடை உடுத்தியும், வயிற்றில் உதரபந்தம், பிரம்மமுடிச்சுடன் கூடிய யக்ஞோபவீதம் விளங்க, இடதுகையை இடது தொடையில் வைத்து, வலது கையை சாலாவில் உள்ள இறைவனை நோக்கி விரித்துள்ளார்.

ஆ. மேற்குப் பகுதி

(1) கர்ணக்கூட்டில் உள்ள சிற்பம் தொடைக்குக் கீழே சிதைந்துள்ளது. ஆண் உருவம் எனத் தெரிகிறது. இருகைகளிலும் மலர் ஏந்தியது போன்று உள்ளது.

(2) அடுத்தடுத்து உள்ள இரண்டு பஞ்சரத்திலும் இரு நின்ற நிலை ஆண் சிற்பங்கள் உள்ளன. நான்கு வடிவமைக்கப்பட்ட உருவங்கள் அவை. அவ்விருவரும் இடதுகையை ஊருஹஸ்தத்திலும், வலது கையை முன்னவர் அபயம் அல்லது சின்முத்திரை போன்றும், அடுத்துள்ளவர் மார்புக்கு மையமாக வைத்து விஸ்மயம் போன்றும் வைத்துள்ளனர்.

(3) சாலாவில் இரண்டு விமானந் தாங்கிகளுக்கு நடுவில் உள்ள கோட்டத்தில் விஷ்ணு, பீடம் போன்று அமைந்த ஆதிசேஷன் மேல் அமர்ந்த நிலையில் உள்ளார். ஐந்து தலையை யுடைய ஆதிசேஷன் அவரின் தலைக்கு குடை யாக நிற்க, அதற்கு மேலே இரு சாமரம் ஏந்திய கந்தர்வர்கள் உள்ளனர்.



விஷ்ணு உத்குடிகாசனத்தில் உள்ளார். நான்கு திருக்கைகளில் மேலிருகைகளில் வலதில் பிரயோகச் சக்கரமும், இடதில் சங்கும் தாங்கியுள்ளார். வலது முன்கையை ஊன்றியபடியும், இடது முன்கை மடக்கிய இடதுமுழங்காலில் வைத்துள்ளார். இக்கையின் நிலை பாதி சிதைந்துள்ளது. கீரிடமகுடராய், தோள்வரை நீண்டு தொங்கும் காதுகளில் வளையங்கள் அணிந்தும், கணுக்கால் வரை நீண்ட பட்டாடை அணிந்தும், கழுத்தில் அணிகள் விளங்க, கைகளில் தோள்வளை, கேயூரம், முன்வளைகள் அணி செய்ய, மார்பில் யக்ஞோபவீதம், வயிற்றில் உதரபந்தம் இவற்றுடன் சர்வலங்கார பூசிதராய் விளங்குகிறார்.

(4) சாலாவை அடுத்துள்ள இரண்டு பஞ்சரங்களிலும் இரண்டு நின்ற நிலை ஆண் சிற்பங்கள் உள்ளன. முதல் பஞ்சர ஆண் சிற்பம் கைகளை கூப்பிய நிலையில் உள்ளது. நீண்ட பட்டாடைகளுடன் சமபாதத்தில் இருவரும்

நிற்கின்றனர். ஆனால் தலையை சாய்த்து நிற்கின்றனர். இருவரும் ஒருவருக்கொருவர் அணியில் வேறுபட்டுள்ளனர்.


(5) கர்ணக்கூட்டில் ஒரு ஆண் நின்ற நிலை சிற்பம் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பம் சாலாவை நோக்கி நிற்கிறது. முன்னவர்களைப் போன்ற உருவமைதியைப் பெற்று விளங்குகிறது.

இ. வடக்குப் பகுதி

(1) கர்ணக்கூட்டில் நின்ற நிலையில் ஆண் உருவம் உள்ளது.

(2) இரண்டு பஞ்சரங்களிலும் உள்ள சிற்பங்கள் கையில் மலர் ஏந்திய நிலையில் நிற்கின்றன. அனைத்துவித ஆடையணிகளுடன் விளங்குகின்றன.

(3) சாலாவில் இரு புறமும் விமானத்தைத் தாங்கும் இரு சிற்பங்கள் உள்ளன. நடுவில் உள்ள கோட்டத்தில் அமர்ந்த நிலையில் பிரம்மனாயிருக்கலாம். இடதுகாலை மடக்கி, வலதுகாலை தொங்கவிட்டவாறும், இடது கையை தொடையில் வைத்துள்ளது. வலது கை அபய முத்திரை அல்லது மலர் கொண்டிருக்கலாம்.



(4) அடுத்து வரும் பஞ்சரம் ஒன்றில் பெண் ஒன்று நின்ற நிலையில் உள்ளது. வலது கை வலத்தொடையில் ஊருஹஸ்தத்தில் வைத்தபடியும், இடது கையில் மலராயிருக்கலாம். நீண்ட காதுகளில் அணி தெரிகின்றது. தலையில் கொண்டையலங்காரம் பெரிதாக உள்ளது.

(5) இரண்டாவது பஞ்சரத்தில் ஆண் சிற்பம் உள்ளது. ஒருக்களித்து நிற்கும் இச்சிற்பம் நீள் காதுகளில் குண்டலங்களையும், நன்கு அலங்காரம் செய்யப்பட்ட தலையணியையும்

பெற்று, இரண்டு கைகளையும் ஏதோ அபிநயத்தில் வைத்துள்ளது.

(6) அடுத்துள்ள கர்ணக்கூட்டில் உள்ள ஆண் சிற்பமானது முந்தைய ஆண் உருவத்தைப் போன்றே அணி செய்யப்பட்டு கிழக்கு நோக்கியவாறு நிற்கிறது.

விமானத் தளத்தின் வர்க்க உறுப்புகளான கர்ணக்கூடு, பஞ்சரம், சாலா ஆகியவற்றில் உள்ள அனைத்துக் கோட்டத்தில் உள்ள நின்றநிலை சிற்பங்களும் மிகவும் எழிலார்ந்த தன்மையுடன் உடலமைப்பும், அணியும் கொண்டவையாக அமைக்கப்பட்டுள்ளன.

விமானம் - இரண்டாம் தளம்

அ. வடக்குப் பகுதி

(1) கர்ணக்கூடுவில் பெண் சிற்பம் ஒயிலாக நின்ற நிலையில் உள்ளது. வலதுகை தொடையில் வைத்தபடியும், இடது கை அபயமுத்திரை அல்லது மலர் பிடித்தபடி இருக்கலாம். நெற்றிப்பட்டையுடன் கூடிய தலையலங்காரம் செய்யப்பட்டுள்ளது. நீண்காதுகளில் அணிகள் தொங்குகின்றன. கணுக்கால் வரை ஆடை நீண்டுள்ளது.

(2) அடுத்து ஒரு பஞ்சரம் மட்டுமே உள்ளது. இப்பஞ்சரக் கோட்டத்திலும் கர்ணக்கூடுவில் உள்ள பெண் சிற்பத்தின் உருவமைதி போன்றே உள்ள ஒரு பெண் நின்ற நிலையில் உள்ளது.

(3) சாலாவில் இரண்டு விமானந்தாங்கிகளுக்கு நடுவில் உள்ள கோட்டத்தில் நின்ற நிலையில் திரிபுராந்தகர் உள்ளார். கையில் வில் அம்புடன், அரையாடை அணிந்து, வலது காலை ஊன்றி, இடது காலை சற்று முன்வைத்து



நிற்கிறார். மார்பணிகள், வயிற்றில் உதரபந்தம், மார்பின் குறுக்காகச் செல்லும் முப்புரிநூல் நன்கு தெரிகின்றன. நீள் காதுகளில் பெரிய வளைகள் காட்டப்பட்டுள்ளன. நெற்றிப்பட்டையுடன் கூடிய சடைமகுடம் உள்ளது.

(4) அடுத்து வரும் பஞ்சரத்தில் ஒரு பெண் சிற்பம் நின்ற நிலையில் உள்ளது. இடதுகையை தொடையில் வைத்தபடியும், வலது கை அபயமுத்திரை அல்லது மலர் பிடித்தபடி இருக்கலாம். நெற்றிப்பட்டையுடன் கூடிய தலையலங்காரம் செய்யப்பட்டுள்ளது. நீள் காதுகளில் அணிகள் தொங்குகின்றன. கணுக்கால் வரை ஆடை நீண்டுள்ளது.

(5) கர்ணக்கூடுவில் அமர்ந்த நிலையில் பெண் சிற்பம் உள்ளது. இடதுகாலை தொங்கவிட்டு, வலது காலை மடக்கிக் கொண்டு வலக்கை வலத்தொடையிலும், இடதுகையில் ஏதோ பிடித்தவாறும் காணப்படுகிறது.

ஆ. மேற்குப் பகுதி

(1) கர்ணக்கூடுவில் அரைத்தூண்களுக்கு இடையேயான கோட்டத்தில் உத்குடிகாசனத்தில் அமர்நிலையில் ஆடவர் ஒருவர் உள்ளார். அவர் கையில் வலது கை விஸ்மய முத்திரை போன்று உள்ளது. இடது கை தொடைமீது உள்ளது. முதல் தளத்திலுள்ள ஆடவர்களைப் போலவே உடையிலும், தலையணியிலும் காட்டப்பட்டுள்ளார். அவர் விமானத்தில் சாலாப் பகுதியை நோக்காது எதிர்ப்புறத்தில் திரும்பி நின்றுள்ளார்.

(2) பஞ்சரத்தில் பெண் சிற்பமாக இருக்கலாம். உடலை ஒருக்களித்தும், முகத்தை நேராக நோக்கியும் நின்றநிலையில் உள்ள இச்சிற்பத்தின் வலது கை எழிலாக வலத்தொடையிலிருக்க, இடது கை உயர்த்தியவாறு உள்ளது.

(3) சாலாவில் இரண்டு விமானந்தாங்கிகள் இருபுறமும் உள்ளனர். நடுவில் உள்ள கோட்டத்தின் பீடத்தில் நரசிம்மர் அமர்ந்த நிலையில் பிரகலாதனை அணைத்தபடி உள்ளார். வலது காலை ஊன்றிக் கொண்டு இடது காலால் பிரகலாதனை



வளைத்து இறுக்கியபடி, இரண்டு கைகளாலும் அவனைத் தழுவி, மார்போடு அணைத்துள்ளார். நரசிம்மரின் மார்போடு பொருந்திய சிறுவன் அவர் முகத்தை அண்ணாந்து நோக்குகிறான். சிங்க முகரின் கால்களுக்கு இடையே அவன் ஏகபாதத்தில் அவர் மடியில் அமரும் நிலையில் நிற்கிறான்.

சிங்கர் பிடரிமயிர் தோள்களின் இருபுறமும் முன்விழ, தலையில் உச்சிக் கொண்டை போன்று உள்ளது. வாயைப் பிளந்த நிலையில், சாந்தபாவனையோடு கழுத்தணி, கையணிகளோடும், முடிச்சோடு கூடிய அரையாடை உடுத்தியுள்ளார். சிறுவன் பிரகலாதன் பிரமித்து, திகைத்த பாவனையில் சிங்கரை நிமிர்ந்து, தலையை உயர்த்தி அண்ணாந்து பார்க்கிறான். அவன் நீள்காதுகளில் அணிந்துள்ள வளையங்கள் தோளைத் தொடுகிறது. அரையாடை அணிந்துள்ளான். உடலில் அணிகள் காட்டப்பட்டுள்ளன.

(4) பஞ்சரத்தில் ஒரு பெண் சிற்பம் தலையை சாய்த்த வாறு நின்ற நிலையில் உள்ளது.


(5) கர்ணக்கூடுவில் வலதுகாலை மடக்கி, இடது காலை தொங்கவிட்டவாறு பீடத்தில் அமர்நிலையில் உள்ள ஆடவர் சிற்பம் உடலை சாலாவின் மையப்பகுதியை நோக்கியும், தலையை கிழக்கு நோக்கியும் திருப்பியுள்ளது. இடது கை மார்பின் அருகே தெரிகிறது. நீள்காதுகளில் மகரகுண்டலமும், பெரியவளையமும் உள்ளன.

இ. தெற்குப்பகுதி

(1) கர்ணக்கூடுவில் நின்ற நிலையில் பெண்உள்ளார். நடுவில் உள்ள சாலையை நோக்கித் திரும்பியுள்ளார். வலது கை எடுப்பாக வலத்தொடையில் உள்ளது.

(2) பஞ்சரக்கோட்டத்தில் உள்ளவர் ஆடவராய் இருக்கலாம். அவர் கர்ணக்கூட்டை நோக்கி நிற்கிறார். நெற்றிப்பட்டையுடன் கூடிய தலையலங்காரமும், காதுகளில் பெரிய வளையங்களும், கைகளில் கேயூரம், முன்வளை, ஆகியன கொண்டு. அரையாடை அணிந்துள்ளார். கைகள் மார்பின் நடுவே ஏதோ முத்திரையில் உள்ளன.

(3) இரு விமானந்தாங்கிகள் சாலாவின் விமானத்தைத் தாங்கியுள்ளனர். நடுவில் உள்ள அரைத்தூண்களுக் கிடையேயான கோட்டத்தில் ரிஷபாந்திகர் உள்ளார். பின்னால் நந்தி காட்டப்பட்டுள்ளது. வலதுகாலை நேராக ஊன்றி, இடது காலை சற்று முன்னோக்கி வளைவாக வைத்த ஸ்தானகத்தில் நின்றுள்ளார். வலது கையை ஊருஹஸ்தமாக தொடையின் மீது வைத்தும், இடது முன்கை நந்தியின் மேல் சாய்மான மாக வைத்துமுள்ளார். அரையாடை, முகப்புடன் கூடிய இடுப்புப் பட்டை, முன்னோக்கி விழுந் துள்ள இடுப்பாடையின் வரிகள், வயிற்றில் உதர பந்தம், மார்பில் முப்புரி நூல், கைகளில் தோள்வளை, கேயூரம், முன்வளை, கழுத்தில் சரப்பளி, கண்டி, அட்டிகை முதலியனவும், நீள்காதுகளில் மகரகுண்டலமும், பனையோலைச் சுருளும், நெற்றிப் பட்டையுடன் கூடிய ஜடாமகுடம் முதலியன அணிகளாக அமைய நேர்நோக்கிய பார்வையைக் கொண்டு ரிஷபாரூடர் விளங்குகிறார்.



(4) அடுத்து வரும் பஞ்சரத்தில் உள்ள சிற்பமானது விரித்த சடைக் கற்றைகளுடன் சாலாவை நோக்கி மேற்கு முகமாக நிற்கிறது. இளஞ் சிறுவனைப் போன்ற தோற்றம் தெரிகிறது. கையணிகள், அரையாடை விளங்குகின்றன.

(5) கர்ணக்கூடுவில் உள்ள சிற்பம் நன்கு தெரியவில்லை.

விமான சிற்பங்கள்

1. விமானம் தெற்குப் பகுதி

பத்ர பகுதியில் பூதகணம் ஒன்று ஆடுகிறது. அடுகில் இரண்டு கணங்கள் மேலே தூக்கியவாறு காணப்படுகின்றன.

2. தெற்குச் சுவர்

(1) கர்ணப்பகுதியில் அரைத்தூணில் ஆடல் மகளிர்களும், பலகையின் மேல் இருமுனையில் இரு பெண்கள் நிற்கின்றனர்.

(2) உப பத்ராவில் சாலபாஞ்சிகாவில் ஒரு பெண் திரிபங்க நிலையில் நிற்கிறாள். உமையாய் இருக்கலாம். அவளின் வலது கையின் கீழ் ஒரு பெண் உள்ளாள்.

2. மேற்குச் சுவர்

கர்ணா பகுதியில் சிங்கத்தை வதம் செய்யும் கணம் ஒன்று உள்ளது. இரண்டு கைகளால் சிங்கத்தின் வாயைப் பிடிக்கிறது. ஒரு காலால் சிங்கத்தை மிதித்துக் கொண்டும், மற்றொரு காலை பின்புறம் ஊன்றிக் கொண்டும் அந்தக் காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

3. வடக்குச் சுவர்

(1) பத்ரத்தில் பூதகணம் ஒன்று நடனம் ஆடுகிறது. அதன் காலின் கீழ் மற்றொரு உருவத்தின் தலைக் காட்டப்பட்டுள்ளது.

(2) வடக்குக் கர்ணப்பகுதியில் அழகிய கொடிக்கருக்கின் நடுவில் மனித உருவம் காணப்படுகிறது.

(3) தன்னைக் கொல்ல வந்த அரக்கி பூதகியிடம் பால் குடிக்கும் குழந்தை கிருஷ்ணன் காட்டப்பட்டுள்ளார். அரக்கியின் கை விஸ்மயமுத்திரையில் உள்ளது.

அர்த்தமண்டப வெளிப்புற சிற்பங்கள்

1. வடக்குப் பகுதி

(1) உப பத்ராவில் ஒரு பெண் நடனமாடுகிறார். கீழே இருவரும், மேலே இருவருமாக நால்வர் இந்த நடனத்தைப் பார்க்கின்றனர்.


(2) உப பத்ராவில் ஆறு யாளிகள் வரிசையாகக் காட்டப்பட்டுள்ளன. அதற்கு மேலே உள்ள பாதத்தில் வேகமாக ஓடும் யானையின் மேல் வீரன் ஒருவன் அமர்ந்து செல்லும் காட்சி.

(3) பத்ரப்பகுதியில் ஒருவன் வலதுகையில் தலையை பிடித்து ஓடுவது போன்று சிற்பம் உள்ளது.

2. மேற்கு கர்ணப் பகுதி

அரக்கனை வதம் செய்யும் சிற்பத்தின் உடம்பில் நகம் போன்று உள்ளது. இடதுபக்கம் உள்ள ஒரு மனித உருவத்தின் கால்கள் அரக்கனை மிதிப்பது போல காணப்படுகிறது.

3. வடக்குப் பகுதி



(1) வேதிகையின் கர்ணத்தில் நாதஸ்வரம், மத்தளம் இசைக் கருவிகள் வாசிக்கும் சிற்பங்கள் உள்ளன.

(2) தேரில் நான்கு பெண்கள் செல்கின்றனர்.


(3) கும்பத்தினை ஏழுமகளிர் மலர்த்தூவி வணங்குகின்றனர்.

இவை மூன்றுத் தொகுதி களையும் நோக்குங்கால் இது ஒரு திருமணக்காட்சியாக இருக்கலாம்.

அர்த்தமண்டப சுவர்ச் சிற்பங்கள்

அ. தெற்குச் சுவர்ப்பகுதி

(1) கர்ணப் பகுதியில் உள்ள அரைத்தூணில் உள்ள பலகையின் மேல் ஒரு பெண் ஸ்வஸ்திகாசனத்தில் நிற்கின் றாள். ஒரு பெண் ஆடு கின்றாள். மற்றொரு பெண் மத்தளம் வாசிக்கின்றாள்.



(2) உப பத்ர பகுதி பஞ்சரத்தில் ஒருவர் நின்ற நிலை சிற்பம் காணப்படுகிறது.

ஆ. வடக்குச் சுவர்ப்பகுதி

(1) பத்ராவில் சாலாபாஞ்சிகா சிற்பம் உள்ளது. அரைத்தூண் பலகையின் மேல் ஆடவர் ஒருவர் மத்தளம் வாசிக்கிறார்.

(2) உப பத்ராவில் இராமர் அம்பு வில்லுடன் நிற்கிறார்.

(3)சாலாபகுதியில் இருபுறமும் உள்ள விமானந் தாங்கிகளுக்கிடையில் ரிஷபாந்திகர் நிற்கிறார்.

(4) உப பத்ராவில் பெண் நின்ற நிலை சிற்பம் காணப்படுகிறது.

(5) அடுத்த உப பத்ராவில் ஆடவர் நின்ற நிலையில் உள்ளார்.

(6) கர்ணப்பகுதியில் இருபெண்கள் ஸ்வஸ்திகாஸ் தானத்தில் நிற்கின்றனர். கைகள் அபயமுத்திரையில் உள்ளன. அரைத்தூணில் எட்டு ஆடல் மகளிர் உள்ளனர்.

இ. மேற்குச் சுவர்ப் பகுதி

(1) இடதுபுற கர்ணப்பகுதி அரைத்தூணின் சுவர்ப்பகுதியில் ஸ்வஸ்திகாசனத்தில் நின்ற நிலையில் பெண் மத்தளம் வாசிக்கிறாள்.

(2) உப பத்ரா பஞ்சரத்தில் ஒரு பெண் நின்ற நிலையில் உள்ளாள். அருகில் இருபுறமும் யாளி வாயைத் திறந்த நிலையில் நின்றுள்ளன.

(3) பஞ்சரத்தின் மேல் ஒரு பெண் கையை ஊன்றியவாறு, காலை மடக்கி அமர்ந்துள்ளாள். பஞ்சரத்தின் கீழே ஒரு ஆண் நின்றவாறு உள்ளார்.

(4) வலதுபுற கர்ணப்பகுதி அரைத்தூணின் பலகையின் மேல் ஒரு பெண் ஸ்வஸ்திகத்தில் நிற்கவும், வலது கை அபயஹஸ்தத்திலும். இடது கையை தொங்கவிட்டவாறும் உள்ளது.


விமானம்-அதிட்டான கண்டப்படைச் சிற்பங்கள்

அ. தெற்குப்பகுதி

1. கொடிக்கருக்கு வேலைப்பாடு
2. கொடிக்கருக்கு வேலைப்பாடு
3. போர்க்காட்சி (இராமாயணம்)
4. விஷ்ணு
5. ரிஷபாந்திகர்
6. நரசிம்மர் இரண்யனை வதம் செய்யும் காட்சி
7. கொடிக்கருக்கு வேலைப்பாடு
8. நிசும்பசூதனி அரக்கனை அழித்தல்
9. சிவ நடனக்காட்சி
10. பிச்சாடனர்
11. கொடிக்கருக்கு வேலைப்பாடு
12. பூதகணம்
13. உமாமகேசுவரர் நின்ற நிலை காட்சி
14. கொடிக்கருக்கு வேலைப்பாடு







15. நிசும்பசூதனி
16. கஜசம்ஹாரமூர்த்தி

ஆ. மேற்குப்பகுதி

1. போர்க்காட்சி
2. விஷ்ணுவும் சிவனும்
3. கொடிக்கருக்கு வேலைப்பாடு
4. உமாசகிதர்
5. கொடிக்கருக்கு வேலைப்பாடு
6. கொடிக்கருக்கு வேலைப்பாடு
7. சண்டேசனுக்கிரக மூர்த்தி
8. கொடிக்கருக்கு வேலைப்பாடு
9. சிதைந்துள்ள சிற்பம்
10. தென்முகக் கடவுள்
11. அர்த்தநாரீஸ்வரர்


இ. வடக்குப்பகுதி

1. சயனக்கோலம்
2. பூவராகர்
3. மகிசாசுரமர்த்தினி
4. நடன மாதர்
5. சிவ நடனம்
6. பூதகணம்
7. பூதகணம்
8. திரிபுராந்தகர்
9. சிவ நடனம்
10. கொடிக்கருக்கு நடுவில் மனித உருவம்
11. சிதைவுற்ற சிற்பம்
12. மகிசாசுரமர்த்தினி











13. பூதகியுடன் கிருஷ்ணன்
14. கொடிக்கருக்கு வேலைப்பாடு
15. திரிவிக்கிரமர்
16. போர்க்காட்சி
17. யானை குதிரை வீரர்களுடன் செல்வது
18. கொடிக்கருக்கு வேலைப்பாடு
19. நடனமாதர் சிற்பம்





விமானம் - அதிட்டான வேதிகைச் சிற்பங்கள்


விமானம் - அதிட்டான வேதிகையில் காணப்படும் இராமாயணச் சிற்பங்கள் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இராமாயணக் கதைச் சிற்பங்கள் கதையமைப்பில் வரிசைப்படுத்தப்படாமல் உள்ளன. இச்சிற்பங்களில் பெரும்பாலானவை கம்பஇராமாயணத்தின் பாடல் வரிகளுக்கேற்ப வடிவமைக்கப் பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

1. திருமாலுடன் ஆலோசனை
2. தசரதன் புத்திரப்பேறு வேள்வி
3. சிம்மாசனத்தில் தசரதன் அமர்ந்திருத்தல் மூன்று மனைவிகளும் நிற்றல்
4. இசைக்கருவிகளை வாசிக்கும் சிற்பம்
5. தேரில் ஐந்துபேர் செல்லுதல்
6. குதிரையேற்றம் படைப்பயிற்சி
7. இராமன் வில்வித்தைப் பயிற்சி காட்சி
8. இராமன் வில் வளைத்தல் அருகில் லட்சுமணன், விசுவாமித்திரர்
9. இராமன் திருமணம்
10. வேதியர் தீ வளர்த்தல் - திருமண வேள்வி
11. வேதியர் வேள்வி - திருமணம்

12. இராமன் வில்வளைப்பு
13. இடப்புறம் ஒருவர் அமர்ந்திருக்க, எதிரே மூவர் அமர்வு. கீழே ஒருவர் அமர்வு
14. சீதை கும்பிட எதிரில் இராம இலக்குவனர்
15. காட்டிற்கு இராமன், சீதை, இலக்குவன் செல்லுதல்
16. இராமன் அரக்கரை அழித்தல்
17. இராமன் அம்புதொடுத்தல், தலைக்கு மேல் ஒரு மிருகம் ஓடுகிறது.
18. இராமன் இலக்குவன் அம்பெய்தல்.
19. இராமன் சீதை அமர்ந்திருக்க, குகன் தன் குழுவோடு சந்தித்து வணங்குதல்
20. இராமன் இலக்குவன் அம்பெய்தல் மூன்று பெண்கள் நிற்றல்
21. இராமன் இலக்குவனோடு மூன்று பெண்கள் நிற்க, மூன்று பெண்கள் கீழிருக்க
22. சிற்பம் சிதைந்துள்ளது.
23. பாம்பணைமேல் உறங்கும் திருமால்
24. ஊடல் தீர்த்த இறைவன்
25. கானகம் செல்லும் காட்சி
26. சிற்பம் சிதைந்துள்ளது.
27. கரண்வதை
28. சிற்பம் சிதைந்துள்ளது.
29. சடாயுவை இராம இலக்குவனர் காணல்
30. சடாயு வதம்
31. சீதையை இராவணன் தேரில் கவர்ந்து செல்லல்
32. மாரீசன் வதம்
33. சிற்பம் சிதைந்துள்ளது.
34. நான்குகைகளுடன் சிற்பம்
35. சூர்ப்பனகை வருதல்
36. சூர்ப்பனகை மூக்கறுப்பு

37. சூர்ப்பனகை முறையீடு
38. விராதன் வதம்
39. போர்க்காட்சி
40. இராம இலக்குவன், சீதை மற்றும் எதிரில் ஒருவர்
41. படகு போன்ற அமைப்பில் மூவர் அமர்ந்திருத்தல்
42. இராம இலக்குவனர் போர்க்காட்சி
43. அசோகவன சீதை
44. அனுமன், இராமன், இலக்குவன், சீதை
45. அனுமன், இராமன், இலக்குவன்

கம்ப இராமாயணத்தின் பாடல் வரிகள் இங்கு சிற்பக் காட்சிகளாக அதிட்டானத்தின் வேதிகைப்பகுதியில் காணப்படுகின்றன. அவற்றில் சிலவற்றை பாடல்களோடு தொடர்புபடுத்திக் காணலாம்.



அதிட்டான வேதிகையின் வடக்கில் ஏழாவது புடைப்புச் சிற்பம் தசரத மைந்தர்களின் படைப் பயிற்சியாகும். இக்காட்சி, யானையும், இரதமும், இவுளியும், முதலா ஏனைய பிறவும், அவ் இயல்பினில் அடையுற்று ஊன் உறு படை பல சிலையொடு பயிலா, வானவர் தனிமுதல், கிளையொடு வளர. 'கிளையொடு வளர' என இராமன் தன் தம்பியரோடு வில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளதைக் காட்டுகிறது.

-பாலகாண்டம் 304. திருஅவதாரப்படலம். 125


விசுவாமித்திரர் வேள்விகாக்க இராமனைத் தன்னுடன் அனுப்புமாறு தசரதனை சந்தித்து கேட்கும் காட்சி அடுத்து காட்டப்பட்டுள்ளது.

தரு வனத்துள் யான் இயற்றும் தகை வேள்விக்கு
இடையூறா, தவம் செய்வோர்கள்,
வெருவரச் சென்று அடைகாம வெகுளி என
நிருதர் இடைவிலக்கா
வண்ணம்,
செருமுகத்துக் காத்தி என,
நின் சிறுவர்,
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத் தந்திடுதி, என,
உயிர் இரக்கும்
கொடுங்கூற்றின், உளையச்
சொன்னான்.

-பாலகாண்டம் 324. கையடைப்படலம். 11



விசுவாமித்திரருடன் கானகம் சென்ற இராமன் தாடகையை வதம் செய்த காட்சி அடுத்தடுத்து சிற்பங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தாடகை இராமன் மேல் ஏவிய சூலப்படையை அவன் அழித்தல் என்னும் தாடகை வதைபடலம் பாடல் வரிகள் இச்சிற்ப அமைவினை காட்சியாக்குகிறது.



கங்கைத்தீம் புனல் நாடன் கருத்தை, அம்
மங்கைத் தீ அனையாளும் மனக்கொளா
செங்கைச் சூல வெந்தீயினை, தீய தன்
வெங் கண் தீயொடு மேற்செல வீசினாள்.

- பாலகாண்டம் 384. தாடகை வதைபடலம். 46

இராமன் தாடகையை கொல்லும் காட்சி அடுத்துள்ளது.

சொல்ஒக்கும் கடியவேகச்சுடுசரம், கரியசெம்மல்
அல்ஒக்கும் நிறுத்தினாள்மேல் விடுதலும், வயிரக்குன்றக்
கல்ஒக்கும் நெஞ்சில் தங்காது, அப்புறம்கழன்று, கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்னபொருள்என, போயிற்றுஅன்றே.

-பாலகாண்டம் 388. தாடகை வதைபடலம். 50

அதிட்டான வேதிகைப்பகுதியின் வடக்கிலிருந்து பதினேழாவது புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது இராம, இலக்குவனன் விசுவாமித்திரருடன் கானகத்தில் முனிவர்களின் வேள்விகளைக் காக்கும் பொருட்டு அரக்கர் களை அழிக்க தன் வில்லின் நாணை காதளவும் இழுத்து நிறுத்துவதை 'செவித்தலம் நிறுத்தினன், சிலையின் நாண்' என கம்பராமாயணத்தில் இக் காட்சியினை அப்படியே பிரதி




பலிக்கும் போர்க் காட்சியாகும். மாரீசன் எனும் மான் வடிவினான அரக்கனைக் கொன்று கடலில் சேர்த்த காட்சியும் இச்சிற்பத்தொகுதியில் காட்டப்பட்டுள்ளது.

கவித்தனன் கரதலம், கலங்கலீர் என,
செவித்தலம் நிறுத்தினன், சிலையின் தெய்வ நாண்,
புவித்தலம் குருதியின் புணரி அக்கினன்,
குவித்தனன், அரக்கர்தம் சிரத்தின் குன்றமே.


-பாலகாண்டம் வேள்விப்படலம் -443

இராமன் சீதையுடன் அவள் கரம் பற்றி தீவலம் வரும் சிற்பத்திலுள்ள திருமணக்காட்சி கீழ்க்கண்ட பாடல்களால் காட்டப்படுகிறது.



நீத்த அருங்கடல் என, நிறைந்த வேதியர்
தோய்ந்த நூல் மார்பினர், கற்ற, தொல் நெறி
வாய்ந்த நல் வேள்விக்கு, வசிட்டன், மை அற
ஏய்ந்தன கலப்பையோடு இனிதின் எய்தினான்.

-பாலகாண்டம் -1242. கடிமணப்படலம் -83



வெய்ய கனல்தலை வீரனும், அந் நாள்,
மை அறு மந்திரம் மும்மை வழங்கா
நெய் அமை ஆவுதி யாவையும் நேர்ந்தே
தையல் தளிர்க் கை தடக் கை பிடித்தான்.

-பாலகாண்டம் -1248. கடிமணப்படலம் -85

இராமன் சீதை திருமணத்திற்குப் பின் தசரதன் தன் மகன்களோடு அயோத்திக்கு பயணமாகும் காட்சியும், பயணத்தின் தொடக்கத்தில் பறவைச் சகுனத் தடையால் தசரதன் தயங்கி நிற்பதுவும், நிமித்திகனை வினவுதலும் காட்சியாக்கப்பட்டுள்ளது.

முன்னே நெடு முடிமன்னவன் முறையில்செல, மிதிலை நன்மாநகர் உறைவார் மனம் நனிபின்செல, நடுவே, தன் ஏர்புரை தரு தம்பியர் தழுவிச்செல, மழைவாய் மின்னே புரை இடையாளொடும், இனிது ஏகினன் வீரன்.

-பாலகாண்டம் -1266. பரசுராமப்படலம் -4



ஏகும் அளவையின் வந்தன,
வலமும் மயில், இடமும்
காகம் முதலிய, முந்திய
தடைசெய்வன, கண்டான்
நாகம் அனன், இடைஇங்கு
உளது இடையூறு எனநடவான்
மாகம் மணி அணிதேரோடு
நின்றான், நெறிவந்தான்.

-பாலகாண்டம் -1267. பரசுராமப்படலம் -5




அயோத்தி சென்ற இராமன் கைகேயின் வரத்தால் பதினான்கு ஆண்டுகள் கானகம் செல்ல நேரிட்டபோது, தன்னுடன் வருவதாக கூறிய சீதைக்கு, இராமன் கானகத்தின் வெம்மையை உன் கால்கள் தாங்காது என மறுமொழி கூறும் காட்சியும், அதற்கு சீதை, நின் பிரிவினும் கடமோ, பெருங்காடு என்று கூறலும் கீழ்க்கண்ட பாடல்கள் வரிகளைப் போன்று சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.

வல் அரக்கரின் மால்வரை போய் விழுந்து
அல் அரக்கின் உருக்கு அழல் காட்டு அதர்க்
கல் அரக்கும் கடுமைய அல்ல - நின்
சில் அரக்குடை சேவடிப் போது என்றான்.
-அயோத்தியா காண்டம்.1826 நகர்நீங்கு படலம்.221

பரிவு இகந்த மனத்து ஒருபற்று இலாது
ஒருவுகின்றனை, ஊழி அருக்கனும்
எரியும் என்பது யாண்டையது? ஈண்டு, நின்
பிரிவினும் சுடுமோ, பெருங் காடு? என்றாள்.
-அயோத்தியா காண்டம்.1827 நகர்நீங்கு படலம்.222

கானகம் செல்லும் வழியிலுள்ள காட்சிகளைக் கண்டு, இராமன், சீதை, இலக்குவன் மூவரும் மகிழ்ந்து செல்கின்றனர். இராமன் சீதையோடும், இலக்குவனோடும் வழிநடக்கும் கங்கைக் கரைக்காட்சி சிற்பமாய் உள்ளது.



வெய்யோன் ஒளிதன் மேனியின் விரி
சோதியின் மறைய,
பொய்யோ எனும் இடையாளொடும்,
இளையானொடும் போனான்
மையோ, மரகதமோ, மறிகடலோ, மழை
முகிலோ,
ஐயோ, இவன் வடிவு என்பது ஓர்
அழியஅழகு உடையான்.
-அயோத்தியா காண்டம்.1926 கங்கைப்
படலம்.1


ஆரண்யத்தில் இராம இலக்குவர் விராதன் தோள்மேல் ஏறி வெட்டி வீழ்த்தும் காட்சி கம்ப இராமாயணத்தில் ஆரண்யகாண்டத்தில் விராதன் வதைப்படலத்தில் உள்ள பாடல் வரிகளை நினைவூட்டுகின்றது.



மெய்வரத்தினன், மிடல் படை விடப்
படுகிலன்
செய்யும் மற்றும் இகல் என்று,
சினவாள் உருவி வன்
கை துணித்தும் என, முந்து கடுகி,
படர் புயத்து
எய்வுஇல் மல் பொருவு தோள்
இருவர் ஏற, நிருதன்.

-ஆரண்ய காண்டம்.2550 விராதன்வதைப் படலம்.34


இராமாயணத்தின் ஆரண்ய காண்டத்தில் சடாயு காண் படலத்தில் இராமனும், இலக்குவனும் சடாயுவைக் காண்கின்றனர். இராமன் தசரதனின் மைந்தன் என சடாயு அறிந்து மகிழ்தலும், தசரதனின் மறைவுகேட்டு சடாயு அரற்றலும், சீதையைப் பற்றி இராமனிடம் வினவுதலும், இலக்குவன் தாம் காடு புக நேர்ந்த கதையைக் கூறலுமான பல பாடல்காட்சிகளை உள்ளடக்கிய ஒரு சிற்பம் இங்குள்ளது.



நடந்தனர் காவதம் பலவும், நல
நதி
கிடந்தன நின்றன, கிரிகள்
கேண்மையின்
தொடர்ந்தன துவன்றின் சூழல்
யாவையும்
கடந்தனர் கண்டனர் கழுகின்
வேந்தையே.

-ஆரண்ய காண்டம்.2690 சடாயு காண் படலம்.1


சடாயுவின் வழிகாட்டலில் பஞ்சவடியில் தங்கியிருந்த இராம இலக்குவனை சூர்ப்பனகை சந்திக்கிறாள். இராமனின் அழகை வியந்து, காமுற்று, அவனை வணங்கி நாணுற்று நிற்கிறாள்.



அவ்வயின், அவ்ஆசை தன்
அகத்துடைய அன்னாள்
செவ்வி முகம்முன்னி, அடி
செங்கையின் இறைஞ்சா
வெவ்விய நெடுங்கண் அயில்
வீசி, அயல் பாரா
நவ்வியின் ஒதுங்கி, இறை
நாணி, அயல்நின்றான்.

-ஆரண்ய காண்டம்.2768 சூர்ப்பனகைப் படலம்.37

சூர்ப்பனகை சீதையைக் கண்டு பல தீய எண்ணங்களைக் கொண்டு அவளை அரக்கியென்று இராமனிடம் கூறலும், இராமன் அவளைக் கடிதலும், முடிவில் சூர்ப்பனகை சீதையைத் தூக்கிச்செல்ல முயலும் போது இலக்குவன் அவளின் மூக்கறுத்துவிடும் காட்சியும், பெண் என்பதால் அவளைக் கொல்லாமல் இராமனைத் தடுக்கும் சீதையும் என இக்காட்சி பாடல்வரிகளைப் போன்றே சிற்பமாக சித்தரிக்கப்பட்டுள்ளது.



நில்அடீஇ என, கடுகினன்,
பெண்என நினைத்தான்
வில்எடாது அவள்வயங்கு
எரிஆம் என விரிந்த
சில்வல்ஓதியைச் செங்கையில்
திருகுறப் பற்றி
ஒல்லை ஈர்த்து, உதைத்து,
ஒளிகிளர்சுற்றுவாள் உருவி.

-ஆரண்ய காண்டம்.2824 சூர்ப்பனகைப் படலம்.93

ஊக்கித் தாங்கி, விண்படர்வென், என்று உருத்து எழுவாளை நூக்கி, நொய்தினில், வெய்துஇழையேல் என நுவலா மூக்கும்,காதும்,வெம்முரண் முலைக் கண்களும், முறையால் போக்கி, போக்கிய சினத்தொடும், புரி குழல் விட்டான்.

-ஆரண்ய காண்டம்.2825 சூர்ப்பனகைப் படலம்.94

பஞ்சவடியில் இருந்தபோது மாயமானைக் கண்டு சீதை மயங்கி இராமனிடம் கேட்க, அதனைத் துரத்திச் சென்ற இராமன் அது மாய அரக்கன் மாரீசன் எனத் துணிந்து அதனை வதம் செய்வதும், குடிலுக்குள் வீற்றிருக்கும் சீதைக்கு காவலாக இலக்குவன் நிற்பதுவுமான காட்சியை பாடல் நமக்கு கீழ்கண்ட வரிகளால் காட்டுகின்றது.

ஆசை நீளத்து அரற்றினன்
வீழ்ந்த அந்
நீசன் மேனியை நின்று உற
நோக்கினான்
மாசுஇல் மாதவன்
வேள்வியில் வந்த மா-
ரீசனே இவன் என்பதும்
தேறினான்.



-ஆரண்ய காண்டம்.3315 மாரீசன்வதைப் படலம்.79

குற்றம் வீந்த குணத்தின் எம் கோமகன்
மற்று அவ்வாள் அரக்கன் புரி மாயையால்,
இற்று வீழ்ந்தனன் என்னவும், என் அயல்
நிற்றியோ, இளையோய்! ஒரு நீ? என்றாள்.

-ஆரண்ய காண்டம்.3322 இராவணன் சூழ்ச்சிப் படலம்.4

மாரீசனின் மாய அலறலால் ஐயுற்ற சீதை இலக்குவனை சினந்து, இராமனைக் காப்பாற்ற அனுப்பிவிட, இராவணன் சூழ்ச்சியாய் தனியாயிருந்த சீதையை தேரில் கவர்ந்து செல்கிறான். சீதை அழுதரற்றி, அலறித் துயரால் அழுகிறாள்.



கொண்டான் உயர் தேர்மிசை, கோல் வளையாள்
கண்டாள், தனது ஆர் உயிர் கண்டிலாள்
மண் தான் உறும் மின்னின் மயங்கினளால்
விண் தான் வழியா எழுவான் விரைவான்.

விடுதேர் என, வெங்கனல் வெந்து அழியும்
கொடிபோல் புள்வாள், குலைவாள், அயர்வாள்
துடியா எழுவாள், துயரால் அழுவாள்
கடிதா, அறனே! இது கா எனுமால்.

-ஆரண்ய காண்டம்.3391, 3392 இராவணன் சூழ்ச்சிப் படலம்.73, 74

இராவணன் சீதையைக் கவர்ந்து செல்வதைக் கண்ட சடாயு அவனை எதிர்க்கிறது. இராவணன் எறிந்த தெய்வ வாளால் சடாயு வீழ்கிறது.

வலியின்தலை தோற்றிலன், மாற்ற
அருந் தெய்வ வாளால்
நலியும் தலை என்றது அன்றியும்,
வாழ்க்கை நாளும்
மெலியும் கடைசென்றுளது,
ஆகலின் விண்ணின்வேந்தன்
குலிசம் எறியச்சிறை அகற்றது
ஓர்குன்றின், வீழ்ந்தான்.



-ஆரண்ய காண்டம்.3444 சடாயு உயிர்நீத்தப்படலம்.42


இராம இலக்குவனர் சுக்ரீவனிடம் வானரப்படைஉதவி பெறும் பொருட்டு, வாலியை இராமன் வீழ்த்துகின்றான். பலம் பொருந்திய வாலியின் வதமானது வானரங்களின் வானளாவிய துயரத்தினைக் காட்டுகின்றது. வானரப்பெண்களும், தாரையும் வாலியின் இறப்பினைக் கண்டு அலறி, புலம்பி, கண்ணீர் வடிக்கின்ற காட்சி சிற்பமாக படைக்கப்பட்டுள்ளது.



வாலியும் ஏக, யார்க்கும் வரம்பு
இலாஉலகில் இன்பம்
பாலியா, முன்னர்நின்ற பரிதிசேய்
செங்கை பற்றி,
ஆல்இலைப் பள்ளியானும்,
அங்கதனோடும், போனான்
வேல்விழித் தாரைக் கேட்டாள்,
வந்து அவன்மேனி
வீழ்ந்தாள்.

-கிட்கிந்தா காண்டம்.4095 அரசியற் படலம்.161


படை அளவு பற்றி இராமனும் சுக்ரீவனும் கலந்து உரையாடுகின்றனர். அனுமன் இராமனுக்கு கீழே அமர்ந்துள்ளான்.



வகையும் மானமும், மாறு
எதிர்ந்து ஆற்றுறும்
பகையும் இன்றி, நிரைந்து, பரந்து
எழும்
தகைவுஇல் சேனைக்கு, அலகு
சமைந்தது ஓர்
தொகையும் உண்டுகொலோ?
எனச் சொல்லினான்.

-கிட்கிந்தா காண்டம்.4447 நட்டவிட்ட படலம்.1

அனுமன் கடலைத் தாண்டி, இலங்கைக்குச் சென்று, அசோக வனத்தில் சீதை அரக்கியரிடையே துயரநிலையில் இருந்ததைக் காண்கிறான். அசோகவனத்தில் சீதை சோகத்துடன் அமர்ந்திருந்த காட்சியும், அவளின் நினைவுகளும் இங்கு சிற்பமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.



வன்மருங்குல்வாள் அரக்கியர் நெருக்க, அங்குஇருந்தாள்
கல்மருங்கு, எழுந்து என்றும் ஓர்துளி வரக்காணா
நல் மருந்துபோல், நலன் உற உணங்கிய நங்கை
மென்மருங்குல்போல், வேறுஉள அங்கமும் மெலிந்தாள்.

-சுந்தர காண்டம்.5071 காட்சிப்படலம்.3

இராம இராவண யுத்தம் தொடங்குகிறது. இராவணனின் படைகள் அணிவகுத்து செல்கின்றன.


கடகரி,புரவிஆள்தேர்,கமலத்தோன்
உலகுக்கு இப்பால்
புடைஉளபொருது, கொண்டு,
போர்பெறாப் பொங்குகின்ற
இடைஇடைமிடைந்த சேனை
இருநூறு வெள்ளம்கொண்டு
வடதிசை வாயில்காப்பேன் யான்
என வகுத்து விட்டான்.



- யுத்த காண்டம்.6967 அணிவகுப்புப் படலம்.22

இராவணனை யுத்தத்தில் இராமன் கொன்றபின் சீதை யுடன், இளவலுடன் அயோத்தி திரும்பினான். அங்கு வசிட்டர் இராமனுக்கு முடி சூட்டுகிறார். இராமாயண பட்டாபிஷேகக் காட்சியை கம்பர் தன் இலக்கியத்தில் படம்பிடிக்கிறார். சோழச் சிற்பி அதனை சிற்பமாக்கியுள்ளான்.

அரியணை அனுமன் தாங்க,
அங்கதன் உடை வாள்ஏந்த
பரதன் வெண் குடை கவிக்க,
இருவரும் கவரி பற்ற,
விரை செறி குழலி ஓங்க,
வெண்ணெயூர்ச்சடையன்தங்கள்
மரபுளோர் கொடுக்கவாங்கி,
வசிட்டனேபுனைந்தான், மௌலி.



- யுத்தகாண்டம்.10327 திருமுடிசூட்டுப் படலம்.38

தேவகோட்டச் சிற்பங்கள்

அ. தென்முகக் கடவுள்




விமானத்தின் சுவர்ப்பகுதி தென் புறக் கோட்டத்தில் தட்சிணாமூர்த்தியின் பிற்கால சிற்பம் உள்ளது. இச்சிற்பத்திற்கு பின்னே சிதைந்த நிலையில் சோழர்கால ஆலமர் கடவுள் உள்ளார். அரைத்தூண்களுக்கிடையே அமைக்கப்பட்ட கோட்டத்தின் வீராசன நிலையில் அமர்ந்துள்ள சோழர் கால ஆலமர்ச்செல்வன் ஜடாபாரத்துடன், தலையை சற்று சாய்த்துள்ளார். நான்கு கைகளில் பின்கைகளில் உள்ளவை தெரியவில்லை. முன்னிருகைகளில் வலது சின்முத்திரையும், இடது புத்தகமும் கொண்டுள்ளன. கழுத்தில் கண்டி, அட்டிகை முதலிய அணிகளும், காதுகளில் வளையமும், மார்பில் யக்ஞோபவீதம் தெரிகின்றன. முகம் சற்று சிதைந்துள்ளது. பரந்து விரிந்த கிளைகளுடன், இலைகளுடன் கூடிய ஆலமரம் உள்ளது. மரக்கிளைகளில் குரங்கு, பறவைகள் அமர்ந்துள்ளன. அரைத்தூண்களுக்கிடையே கோட்டத்தின் வெளியே இருபுறமும் முதலில் நின்ற நிலையில் வேதியர்களும், இடப்புறம் அமர்நிலையில் கணங்களும், இரண்டாவது வரிசையில் வலப்புறம் பாயும் நிலையில் சிங்கமும், இடப்புறம் இருபுலிகளும், அதற்கு கீழே மூன்றாவது வரிசையில் இருபுறமும் சன, சனகாதி முனிவர்களும் அமர்ந்துள்ளனர். இந்த உயிர்க்குலங்கள் யாவும் தென்முகக் கடவுளின் அறவுரையைக் உற்றுக் கேட்பதாக உள்ளன.

பிற்காலப் படைப்பான தட்சிணாமூர்த்தி சிற்பத்தின் காலின் கீழ் முயலகன் காட்டப்பட்டுள்ளது. வீராசனத்தில் அமர்ந்துள்ள இச்சிற்பத்தின் ஆடையணிகளும்,

உருவமைதியும் சற்று மிகைப்படுத்தப்பட்டதாகவே தெரிகின்றன. விடைத்த மூக்கு, விரைப்பாக அமர்ந்த நிலை முதலியன பிற்கால படைப்பிது என படம் பிடித்துக் காட்டுகின்றன.

ஆ. இலிங்கோத்பவர் சிற்பத் தொகுதி

விமானத்தின் சுவர்ப் பகுதியில் மேற்குப்புற தேவக்கோட்டத்தில் இலிங்கோத்பவர் சிற்பத் தொகுதி அமைந்துள்ளது. இலிங்கோத்பவர் சிற்பத் தொகுதி வேறொங்கும் காணவியலாத நிலையில் எழிலுடன் வடிக்கப்பட்டுள்ளது.



லிங்கத்தின் நடுவே நிற்கும் அண்ணாமலையாரின் இருபுறமும் நான்முகனும் திருமாலும் நின்றநிலையில் காட்சித் தருகின்றனர். முற்கால சோழர்களின் சிற்பக் கலைக்கு.ச் சிற்பத் தொகுதி மிகச் சிறந்த சான்றாக விளங்குகிறது.

அண்ணாமலையார்

இரு அரைத்தூண்களுக்கு நடுவே அமைந்த கோட்டத்தில்அடிபருத்தும், நுனி சிறுத்தும் உள்ளதுமான இலிங்கத்தின் நடுவே தீ வடிவிலான உட்குழிவில் அண்ணாமலையார் நின்ற நிலையில் உள்ளார். இலிங்கோத்பவரின் தலைமுதல் கணுக்கால் வரை இலிங்கத்தின் நடுவில் காட்டப்பட்டுள்ளது.

இலிங்கோத்பவராக சிவன் சமபாதத்தில் நேராக நின்ற நிலையில் உள்ளார். முகம் சிதைந்துள்ளது. ஜடாமகுடராய், நெற்றிப்பட்டை, கழுத்தணிகள், தோள்வரை நீண்ட காதுகளில் மகரகுண்டலமும், பனைச்சுருளும் விளங்க, நான்கு திருக்கைகளில் மேற்கைகளில் மான்,மழுவேந்தியவராய், கீழ்க் கைகள் இடது கடிஹஸ்தமாகவும், வலது அபயஹஸ்தமாகவும்

கொண்டவராய், தோள்வளை, கேயூரம், முன்வளைகள் கையணிகளாய் பெற்றவராய் உள்ளார். அரையாடை அணிந்து, ஆடையின் முடிச்சுக்கள் இடையின் இருபுறமும் தெரிகின்றன. முகப்புடன் கூடிய இடைவார்ப் பட்டை அணந்துள்ளார். நடுமார்பில் அமைந்த பிரம்மமுடிச்சுடன் கூடிய யக்ஞோபவீதம் இடமார்பின் வழிசென்று இடது தோளில் சரிந்துள்ளது. தீயின் வடிவாய், அடிமுடி காணவியலா அண்ணாமலையாய் நிற்கிறார்.

இலிங்கத்தின் மேற்புறம் நான்குமுகம் மற்றும் நான்கு திருக்கைகளுடன் பிரம்மன் கந்தர்வரைப் போன்று பறந்த நிலையில் காட்டப்பட்டுள்ளார். மேலிருகைகளில் அக்கமாலையும், கெண்டியும் உள்ளன. கீழிருகைகளில் வலது இலிங்கோத்பவரை காட்டுவதுபோலவும், இடது விஸ்மய முத்திரை போன்றும் உள்ளது. முழுநீள ஆடை, அணிகலன்களுடன், கீரிட மகுடம் தரித்த பிரம்மன் அண்ணலின் முடியினைக் காண முனைகிறார்.



இலிங்கத்தின் அடிப்பகுதியில் விஷ்ணு வராகராய் இரண்டு கைகளாலும், முகக் கொம்பினாலும் நிலத்தைத் தோண்ட முனைபவராய் காணப்படுகிறார். குப்புற படுத்த நிலையில் கேழலாய் அண்ணலின் அடிகாணச் செல்பவராய் உள்ள விஷ்ணுவின் அரையாடை தெரிகிறது. ஆனால் அணிகலன்கள் தெரியவில்லை.

நான்முகன்

இலிங்கோத்பவரின் வலதுபுறம் நான்முகன் நின்ற நிலையில் முழு உருவச் சிற்பமாகக் காட்டப்படுகிறார். இடதுகாலை நன்கு ஊன்றி, வலதுகாலை சற்று முன்னோக்கி வைத்து, உடலை பின்புறம் சாய்த்தவாறு, திரிபங்க

நிலையில் உள்ள நான்முகனின் உயரமானது இலிங்கோத்பவருக்கு சமமாக உள்ளது. ஜடாமகுடம், நீள்காதுகளில் குண்டலம், கழுத்தில் சரப்பளி, கைகளில் கேயூரம், மூன்று முன்வளைகள், உதரபந்தம் இவைகளோடு மார்பின் குறுக்காகச் செல்லும் உத்தரியம் இரண்டாக மடிக்கப்பட்டு பிரம்மமுடிச்சு பின்புறம் செல்கிறது. மேற்கைகளின் விரல்களுக்கிடையில் இலகுவாக அக்கமாலை, கெண்டி ஏந்தி, கீழ்க்கைகளில் வலது ஊருமுத்திரையும், இடதில் புத்தகமும் கொண்டு, கணுக்கால் வரை நீண்ட பட்டாடை உடுத்தி, காலில் சதங்கை அணிந்துள்ளார். ஆடையின் முடிச்சுகள் இருபுறமும் இடைக்குக் கீழே விரிந்து கணுக்கால் வரை தொங்குகிறது. இடையில் முத்தாலான அணி தென்படுகிறது. முகப்போடு உள்ள இடைவார் நடுவில் முடிச்சுடன் காணப்படுகிறது. நான்முகனின் எழிலான மூன்றுமுகம் தெரியுமாறு உள்ளது. மூடிய விழிகளுடன், கூரிய நாசி, செதுக்கிய உதடுகள் என எழிலார்ந்த, சாந்தமான முகத்தைக் கொண்டு இளம் ஆடவரின் உடற்கட்டையும், வனப்பையும் பெற்றுள்ளார்.




விஷ்ணு

இலிங்கோத்பவரின் இடதுபுறம் விஷ்ணு நின்றநிலையில் நடுவில் உள்ள இலிங்கோத்பவரை நோக்கி, வலதுகாலை ஊன்றி, இடதுகாலை சற்று முன்னோக்கி வைத்தவாறு பரந்தமார்பினராய் உள்ளார். கிரீடமகுடராய், நான்கு திருக்கைகளில் மேற்கைகளின் விரல்களுக்கிடையே சக்கரம், சங்கு கொண்டவராய், கீழிரு கைகள் இடது கடிஹஸ்தம், வலது உள்ளங்கையில் மலர் போன்ற ஒன்றையும் கொண்டவராய்

இருக்கிறார். காதுகளிலும், கைகளிலும் பிரம்மனைப் போன்றே அணிகள் உள்ளன. கழுத்தில் கண்டி, அட்டிகை அணிந்துள்ளார். இடதுமார்பின் அருகே பிரம்மமுடிச்சு உள்ளது. வயிற்றில் உதரபந்தம், இடையணி, கணுக்கால் வரை நீண்ட பட்டாடையின் முடிச்சுகள் பின்புறமாக இடையின் இருபுறம் கட்டப்பட்டு நீண்டு தொங்குகிறது. கால்களில் சதங்கைகள் உள்ளன. புன்னகை பூக்கும் அழகு முகத்தினராய் திருமால் திறந்த விழிகளோடு, சற்று விடைத்த மூக்கோடு, அழகிய சிறிய பவளச் செவ்வாய் இதழ்கள் கொண்டு இளமையான தோற்றப்பொலிவினைப் பெற்று விளங்குகிறார்.

பிரம்மன்

வடக்குப்புறம் மகரத்தோரண முகப்பின் நடுவே சிறுகுழந்தை ஒன்று படுத்தநிலையில் உள்ள தேவகோட்டத்தில் பிரம்மன் தாமரைப் பீடத்தின் மேல் சமபாதத்தில் நேராக நின்றநிலையில் உள்ளார். மூன்று முகங்கள் மூடிய விழிகளோடு தெரிகின்றன. ஜடாமகுடம், நீள்காதுகளில் வளையங்கள், கழுத்தில் வேலைப்பாடுள்ள இரு அணிகள், கைகளில் கேயூரம், முன்வளைகள், நடுமார்பில் பிரம்ம முடிச்சுடன் கூடிய முப்புரி நூல், உதரபந்தம், நடுவிரல் தவிர எல்லாவிரல்களிலும் வளையங்கள், இருபுறமும் முடிச்சுகளோடு கணுக்கால் வரை நீண்டு தொங்கும் பட்டாடை, கால்களில் சதங்கை என ஆடையணிகளைக் கொண்டு விளங்கு



கிறார். நான்கு திருக்கைகளில் மேலிருகைகள் அக்க மாலையும், கெண்டியும் விரல்களில் உள்ளன. கீழிரு கைகளில் இடது கை கடிஹஸ்தமாகவும், வலதுகை அபயஹஸ்தமாகவும் உள்ளன. பிரம்மனின் தலைக்கு மேல் குடை காட்டப்பட்டுள்ளது.

பிரம்மனின் இருபுறமும் இரு ஆடவர் சிற்பங்கள் உள்ளன. அவை இளவயது வேதியர்கள் போன்ற தோற்றத்தைப் பெற்றுள்ளனர். ஒரு காலை மடக்கி முழங்கால் நிலத்தில் படுமாறும், மற்றொரு காலை மடக்கி மேலே உயர்த்தியவாறும் அமர்ந்த நிலையில் இருவரும் உள்ளனர். இருவரும் நடுவிலுள்ள இறைவனைப் போற்றுவதாக கைகளை முத்திரையில் வைத்துள்ளனர். ஜடாபாரம், நீள்காதுகளில் குண்டலங்கள், கழுத்தில் கண்டி, அட்டிகை, இடதுதோளில் மடிந்து தொங்கும் உத்தரீயம், கை வளைகள், இடையில் முடிச்சுகளோடு கூடிய ஆடை என இருவருக்கும் ஒன்று போலே ஆடையணிகள் அமைந்துள்ளன.

அர்த்தமண்டப கோட்டச் சிற்பங்கள்

கணபதி

தென்புற அர்த்த மண்டப வெளிச்சுவர்க் கோட்டத்தில் கணபதி சிற்பம் அமைந்துள்ளது. அரைத் தூண்களுக்கிடையேயான இத்தேவகோட்டத்தின் மேற் பகுதியானது மகரத்தோரணத் தால் அணி செய்யப் பட்டுள்ளது. மகரத்தோரண மானது ஒன்றின் கீழ் ஒன்றாக இரண்டு தோரண வளைவு களைப் பெற்றுள்ளது. மேல் வளைவானது யாளி வரிசை உடையதாகவும், நடுவில் அமைந்த முகப்பில்



நடராசரும், கீழ்வளைவானது கணவரிசையைக் கொண்டு, நடு முகப்பில் சண்டேச அனுக்கிரஹமூர்த்தி இருக்கவும் அமைக்கப்பட்டுள்ளது.

தேவகோட்டத்தில் மேலே இருகந்தர்வர்கள் துதிபாட, முத்துத்தாமக்குடையின் கீழ் கணபதி பின்புறம் அமைக்கப்பட்டுள்ள சந்திரபிரபையுடன் தாமரைப் பீடத்தின் மேல் தனக்கேயுரிய ललிதாசனத்தில் அமர்ந்துள்ளார். கரண்டமகுடம் தரித்து, பூரிமம் விளங்க, அகன்ற நெற்றிப்பட்டையுடன், முறச்செவியராய், நீண்ட துதிக்கையில் அமிர்தகலசம் கொண்டுள்ளார். இடதுபுற தந்தம் வெளியே நீண்டு தெரிகிறது. நான்கு திருக்கைகளில் மேலிருகைகளில் மலர்த்தோகை போன்ற ஒன்றைப் பிடித்துள்ளார். கீழ்க்கைகளில் இடது கை தொடைமீது வைக்கப்பட்டுள்ளது. வலது அங்கையில் கனி ஒன்றை ஏந்தியுள்ளார். அது மாதுளை அல்லது மாங்கனியாய் இருக்கலாம். கணபதி இங்கு விவசாயக்கடவுள் போன்று காட்டப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. நாகபந்தக் கேயூரம், முன்வளைகள் கையணிகளாகவும், கழுத்தில் சரப்பளியும் அணிந்துள்ளார். மார்பில் முப்புரிநூல் துலங்க, வயிற்றில் பட்டையான உதரபந்தம் உள்ளது. அரையாடையின் முடிச்சுகள் பின்பக்கம் இருபுறமும் தெரிகின்றன.


கணங்களின் தலைவனுக்கு இருபுறமும் பக்கத்திற்கு நான்காக எட்டு கணங்கள் அமர்ந்த நிலையில் உள்ளனர். மேலே முதலாக அமர்ந்துள்ள கணம் கைகளை தாளமிட்டுக் கொண்டும், அதற்கு நேராக அமர்ந்துள்ள கணம் கணபதியின் எலியை தன்னருகே வைத்துக்கொண்டு அவரை நோக்கிப் போகுமாறு அதற்குச் சொல்வது போலும் உள்ளன. இரண்டாவது நிலையில் அமர்ந்துள்ள வலப்புற கணம் பதிக்கு சாமரம் வீசுகிறது. அதன் இடது கை மேல்நோக்கி வாழ்த்து முத்திரையை அபிநயிக்கிறது. அதற்கு நேராக உள்ள இடதுபுற கணம் இடக்கையில் வைத்துள்ள மலர்க்கூடையிலிருந்து மலர்களைத் தூவிக் கொண்டுள்ளது. மூன்றாவது நிலையில் இருபுறமும் இரண்டிரண்டு கணங்கள் அமர்ந்துள்ளன. அதில்

ஒன்று வயதிலும், உருவமைப்பிலும் பெரியதாக ஆண் கணமாகவும், அதன் அருகே அமர்ந்துள்ள பெண் கணம் இளவயதாகவும், சிறிய உருவத்தினையும் பெற்று விளங்குகின்றன. இவை தம்பதியர்களாய் கணபதியை வணங்க வந்தவைகளாகக் காட்சியளிக்கின்றன. இருபுறமுள்ள இணை கணங்கள் நான்கும் கைகளில் பழங்களை ஏந்தியுள்ளன. வலப்புறம் உள்ள ஆண் கணம் பலாப்பழத்தை உரிப்பது போன்று உள்ளது.

வரிசையாக அரைத்தூண்களுக்கு இடையே அமைக்கப்பட்டுள்ள இந்த கணங்கள் எட்டும் தங்களுக்குள் முற்றிலும் மாறுபட்ட தலையலங்காரங் களையும், மற்ற அணிகளையும் கொண்டு விளங்குகின்றன. அரையாடை மட்டும் பொதுவாக உள்ளது.

மகிஷமர்த்தினி

அர்த்தமண்டப வடக்கு வெளிச்சுவர்க் கோட்டத்தில் அரைத் தூண்களுக்கு நடுவில், பீடத்தின் மேலே இருபுறம் விரிந்த பெரிய கொம்பு களையும், விடைத்த காதுமடல்களையும் கொண்ட எருமைத் தலையின் மேல் திரிபங்க நிலையில் எழிலாக மகிஷமர்த்தினி நிற்கிறாள். இளமைத் தோற்றப்பொலி வுடன், வீர நங்கையாக நின்றிருக்கும் அன்னையின் எட்டுத் திருக்கைகளில் முறையே சக்கரம், சங்கு, வாள், கேடயம், வில், அம்பு



போன்ற ஆயுதங்கள் விளங்க, வலது முன்கை அபயமுத்திரையையும், இடது முன்கை ஊருஹஸ்தமாக தொடையருகேயும் காட்டப்பட்டுள்ளன.

முத்துக்குடையின் கீழ் அழகுற அமைக்கப்பட்ட அன்னை கரண்டமகுடராய், நெற்றியில் கண்ணிமாலை சூட்டியுள்ளார். மார்பில் கச்சைக் காட்டப்பட்டுள்ளது. கழுத்தை ஒட்டிய முத்துமாலையும், கண்டியும், மார்புவரை நீண்ட முத்துவடமும், மணிமாலையும், கைகளில் தோள்வளை, கேயூரம், முன்வளைகள், விரலணிகள் மற்றும் கால்களில் வீரக்கழல்களும், சதங்கையும் விளங்க, அரையாடை அணிந்துள்ளார். ஆடையின் முடிச்சுகள் இருபுறமும் கணுக்கால் வரை நீண்டு தொங்குகின்றன. வயிற்றில் உதரபந்தம், இடமார்பின் வழியே செல்லும் யக்ஞோபவீதம், இடையில் மேகலை அழகுற விளங்கும் அன்னையின் முகம் சாந்தபாவனையில் மூடிய விழிகளுடன், சற்றே மலர்ந்த உதடுகளோடு பொலிவு பெற்றுள்ளது.

மகிஷமர்த்தினியின் இருபுறமும் அவள் வாகனங்களும், தலைப்பலிக் கொடுக்கும் வீரர்கள் உருவங்களும் காட்டப்பட்டுள்ளன. வலப்புறத்தின் மேலே சிம்மம் ஒன்று வாளைப் பிளந்த நிலையில், வால் சுருண்டு, பிடரிமயிர் முன்பக்கம் தொங்குமாறு நிற்கிறது. அதற்கு நேராக இடதுபுறம் கணம் ஒன்றும், சுருண்டு நீண்ட கொம்புகளையுடைய கலைமானும் உள்ளன. மானுக்கு கழுத்திலும், உடலிலும் அணிகள் காட்டப்பட்டுள்ளன. நிற்கும் அந்த கணம் அன்னைக்கு வாழ்த்தொலிக்கிறது. இந்த சிற்றுருவங்கள் இருபுறமும் அமைக்கப்பட்ட சிறுசிறு கற்பலகைத் தாங்கியின் மேல் அமைந்துள்ளன. இவை புடைப்புச் சிற்பங்களாகும்.

வாகனங்களின் கீழே அமைக்கப்பட்டுள்ள நவகண்ட வீரர்களில் வலப்புறமுள்ளவர் இடதுகையால் தன் முடியைப் பிடித்துக்கொண்டு வலக்கையில் உள்ள வாளால் தலையை

அறுத்துக் கொண்டிருக்கிறார். வலது முழங்காலை நிலத்தில் ஊன்றி, இடது காலை அர்த்த ஆசனத்தில் நிறுத்தி அமர்நிலையில் உள்ள இவ்வீரரின் செயல் பிரமிக்க வைக்கிறது. தலைப்பலிக் கொடுக்கும் போது முகத்தில் சாந்தம் தவழ பொலிவுடன் விளங்குகிறார். அரையாடை அணிந்துள்ள இவ்வீரர் கழுத்தணிகளும், கைகளில் காப்புகளும், கால்களில் வீரக்கழல்களும் பெற்றுள்ளார்.

இடதுபுறம் அமைந்துள்ள நவகண்ட வீரர் தலைப்பலிக் கொடுக்கத் தயாராக தனது குறுவாளை உறையிலிருந்து உருவுகிறார். முன்னவரைப் போன்றே அரையாடையும், தோற்றப் பொலிவும் பெற்று விளங்குகிறார். நீள்காதுகளில் மகரகுண்டலம், கழுத்தில் முத்தாலான அணியும் கைகளில் வீரக்காப்புகளும், கால்களில் வீரக்கழலும் அணிந்துள்ளார். வீரரின் பின்புறம் நீண்டவாள் தெரிகிறது. அமர்வுநிலையும் வலப்புற வீரரைப் போன்றே அமைந்துள்ளது.

அன்னை நின்றுள்ள தேவகோட்டத்தின் மேலே அமைக்கப்பட்டுள்ள மகரதோரணத்தின்மேல் முகப்பில் பெண் கணம் ஒன்றும், கீழே உள்ள முகப்பில் உமாமகேசுவரரும் உள்ளனர். பீடத்தின் மேல் அமர்ந்துள்ள உமாபதியின் இருபுறமும் வணங்கிய நிலையில் இருஉருவங்கள் காட்டப்பட்டுள்ளன.

பிற சிற்பங்கள்


அ. பைரவர்

சுற்றுப்பிரகார மண்டபத்தில் அம்மன் சந்நிதிக்கு இடதுபுறம் உள்ள சிறு தளத்தில் மேற்கு நோக்கி பைரவர் சிற்பம் வைக்கப்பட்டுள்ளது. மேல்நோக்கி விரிந்து பரந்த தீச்சுடர் முடிக்கற்றைகளுடன், நான்கு திருக்கைகளில் உடுக்கை, நாகம், சூலம், கபாலம் ஏந்தியவராய், வெளியே நீட்டியுள்ள கோரைப்பற்களுடன், ஆடையின்றி நின்ற நிலையில் பைரவர் உள்ளார். சடைக்கற்றைகளில் நாகங்கள்



காட்டப்பட்டுள்ளன. காதுகளில் வளையமும், குண்டலமும் விளங்க, கழுத்தணிகளாக கண்டி, அட்டிகை, சரப்பளியும், கைகளில் கேயூரம், முன்வளைகளும், உடலைச் சுற்றி கணுக்கால் வரை செல்லும் வீரச்சங்கிலி, வயிற்றில் உதரபந்தம், மார்பில் யக்ஞோபவீதம் மற்றும் கால்களில் வீரக்கழல்களும், சதங்கையும் அணிந்துள்ளார். நேராக சமபாதத்தில் நிற்கும் பைரவரின் பின்புறம் நாய் காட்டப்பட்டுள்ளது. நெரித்த புருவமும், உருட்டிய விழிகளும், விடைத்த மூக்கும், கோரப்பற்கள் வெளியே நீண்டு, சற்று பிளந்த உதடுகளுமாய் உக்ரதேவதையாய் பைரவர் காட்சியளிக்கின்றார்.

ஆ. சண்டேசர்



பீடத்தின் மேல் சுகாசனத்தில் அமர்ந்துள்ள சண்டேசர் ஜடாபாரம் தரித்து, நெற்றியில் விளங்கும் கண்ணி மாலையுடன், இடதுகையை தொடையில் வைத்தபடி, வலதுகையில் மழுவேந்தியவராய், சரப்பளி, யக்ஞோபவீதம், வீரக்கழல், காற்சதங்கை அணிந்து காணப்படுகிறார். அரையாடை உடுத்தி, வட்டமுகமும், தடித்தஉதடுகள், பெரியமூக்குமாய், விரிந்த மார்புடன் சண்டேசரின் உருவமைதி வடிக்கப் பட்டுள்ளது.

இ. பாலதண்டாயுதபாணி

அர்த்தமண்டப நுழைவு வாயிலின் வலப்புறம் உள்ள நின்ற நிலை ஆடவர் சிற்பம் தண்டாயுதபாணி ஆகலாம்.



சதுரவடிவ பீடத்தின் மேல் வலது கையில் தண்டு கொண்டு நிற்கும் இச்சிற்பம் பிற்காலக் கலைப்பாணி போன்று தெரிகின்றது. தலையில் உச்சிக்கொண்டையும், நெற்றியில் உருத்திராக்க மாலையும், இடையில் கோவண ஆடையுமாக விளங்கும் இச்சிற்பத்தின் இலக்கணம் தண்டாயுத பாணிக்கு உரியதாகும். விரிந்த சடைக்கற்றைகள் இருபுறமும் தொங்குகின்றன. இடது கையை தொடைமீது வைத்து, கால்களில் வீரக்கழல்களும், சதங்கையும் அணிந்துள்ள தண்டாயுத பாணி கழுத்தில் நீண்ட ஆரமும், முத்துவடமும், பதக்கச் சங்கிலியும், கைகளில் வளைகளும், மார்பில் முப்புரிநூலும் பெற்று விளங்குகின்றார்.

ஈ. சூரியன்



தாமரைப்பீடத்தின் மேல் சமபாதத்தில் நின்றவராய், இரு கைகளில் தாமரை மலரை ஏந்தியவராய், தலையின் பின்புறம் ஒளிவட்டம் திகழ, கரண்டமகுடம், மேற்காதுகளில் கொப்பு, மகர குண்டலங்கள் அணிந்து காணப்படுகிறார். கழுத்தில் மணிமாலையும், பதக்கமும் உள்ளன. யக்ஞோபவீதம், உதரபந்தம் உடலணிகளாகக் காட்டப்பட்டுள்ளன. பாதம் வரை இருபுறமும் நீண்டு தொங்கும் முடிச்சுகளுடன் கூடிய பட்டாடையை கணுக்கால் வரை அணிந்துள்ளார். கை மற்றும் கால் விரல்களில் அணிகளும், காலில்

கழலும், சதங்கையும் உள்ளன. விடைத்த மூக்கும், நீள்புருவமும், மூடிய விழிகளும் இச்சிற்பம் பிற்கால பாண்டியர், விசயநகர, நாயக்கர் கலைப்பாணியை நினைவுபடுத்துவதாய் உள்ளது. எனினும் இக்கோயிலில் அன்னாரது கலைப்பணிகள் எதுவும் இருந்ததற்கான கல்வெட்டு சான்றுகள் இல்லை.

உ. துவாரபாலகர்கள்

அர்த்தமண்டப நுழைவு வாயிலின் இருபுறமும் துவார பாலகர் சிற்பங்கள் காணப்படு கின்றன. இரு சிற்பமும் ஒன்றுக் கொன்று தம்முள் வேறுபட்ட உருவமைதியில் காட்சியளிக் கின்றன. இடதுபுறம் உள்ள துவாரபாலகர் உருவம் நீண்ட கிரீடமகுடமுடன் முகப்புடன் உள்ள நெற்றிப்பட்டை அணிந் துள்ளார். அர்த்தஸ்வஸ்திகாசனத் தில் நிற்கும் இந்த வாயிற்காவலர் இடதுகையை தண்டு ஒன்றின் மேல் தாங்கியாக வைத்துள்ளார். வலதுகை சூசி முத்திரையில் உள்ளது. நீள்காதுகளில் பெரிய வளையங்களும், கழுத்தில் கண்டி, அட்டிகை, கைகளில் தோள்வளை, கேயூரம், முன்வளைகள், வயிற்றில் உதரபந்தம் போன்ற அணிகள் காணப்படுகின்றன. யக்ஞோப வீதம் இடைவரை சென்று உடலின் பின்புறம் செல்கிறது. அது சங்கிலி போன்ற அமைப்பில் உள்ளது. வாயின் இருபுறமும் நீட்டிக் கொண்டிருக்கும் கோரப்பற் களுடன் இருந்தாலும் முகத்தில்



சாந்தம் தவழ்கிறது. அரையாடை அணிந்துள்ள இவரின் ஆடைகள் உடலின் முன்புறம் விழுந்துள்ளது. நீள்வட்ட முகத்தோற்றம் உடையவராய், மூடிய விழிகளுடன், நெற்றியில் கண்ணுடன் காட்சியளிக்கிறார்.

வலதுபுறம் உள்ள துவாரபாலகர் உடலைத் தெற்கு நோக்கித் திருப்பி தலையை கிழக்குபுறம் நோக்கியுள்ளார். வலதுகாலை நன்கு ஊன்றி, இடதுகாலை குறுக்காக மடித்து உருள்தடியின் கீழ்ப்புறம் வைத்துள்ளார். இடதுகையை கால்போன்றே உடலின் குறுக்கே வைத்து உருள்தடியின் மேலே தாங்கியுள்ளார். வலது கை விஸ்மய முத்திரையைக் காட்டுகிறது. நெடிய கரண்ட மகுடராய், நெற்றியில் முகப்புடன் கூடிய பட்டை அணிந்து, நீள்காதுகளில் பெரிய வளையங்களைக் கொண்டுள்ளார். நெற்றியில் கண் உள்ளது. அரையாடை அணிந்துள்ள இந்த வாயிற்காவலரின் கழுத்தணிகளும், கையணிகளும் முன்னவரைப் போன்றல்லாமல் வேறுபட்டுள்ளது. முகத்தில் மீசை போன்று தெரிகிறது. நீள்வட்ட முகத்தில் விழிகள் மூடியுள்ளன.

ஊ. விநாயகர்

முகமண்டபத்தின் தென்மேற்கு மூலையில் உள்ள சிறிய சந்நிதியில் உள்ள விநாயகர் சிற்பம் பீடத்தின் மேல் லலிதாசனத்தில் அமர்ந்துள்ளது. இச்சிற்பம் பிற்கால படைப்பாகும். நான்கு திருக்கைகளில் மேலிருகைகள் அங்குசமும், பாசமும், கீழ்க்கைகளில் உடைத்தக் கொம்பும், மோதகமும் பெற்றுள்ளன. யானைமுகன் முறச்செவிகளுடன் இடையில் உதரபந்தம், மார்பணிகளோடு விளங்குகிறார்.

எ. நால்வர்

முகமண்டபத்தின் தென்புறம் வடக்கு நோக்கி பீடத்தின் மேல் நின்ற நிலையில் நால்வர் சிற்பங்கள் உள்ளன. மாணிக்கவாசகர், அப்பர், சம்பந்தர், சுந்தரர் என அவை அமைந்துள்ளன. அடியவர்களில் சம்பந்தரின் வலது கை சிதைந்துள்ளது. கழுத்தில் உருத்திராக்கமாலை அணிந்துள்ளனர். அப்பர் வணங்கிய நிலையில் இருக்கிறார். சுமார் 1 அடி உயரமுள்ள இவை பிற்காலச் சிற்பங்களாகும்.

ஏ. நவக்கிரகங்கள்

நடுவில் சூரியன் நிற்க, சுற்றிலும் நாற்புறமும் மற்ற கிரகங்களான குரு, சந்திரன், வெள்ளி, புதன், இராகு, கேது, செவ்வாய், சனி முதலிய சிற்பங்களும் நின்ற நிலையில் பீடத்தில் மீதுள்ளன. இராகு, கேது தவிர மற்ற சிற்பங்கள் நான்குகைகளைப் பெற்று, அவற்றில் அவற்றிற்குரிய ஆயுதங்களைத் தாங்கியுள்ளன. இவை யாவும் பிற்காலப் படைப்புகளாக உள்ளன. இச்சிற்பங்கள் 1.5 அடி உயர முள்ளவையாக உள்ளன.

ஐ. கன்னிமூலை கணபதி

தற்காலத்தில் கட்டப்பட்டுள்ள மண்டபத்துடன் கூடிய சிறு சந்நிதியில் கன்னிமூலையில் அமைந்துள்ள கணபதி இங்கு நர்த்தன விநாயகராக உள்ளார். கரண்டமகுடத்துடன், துதிக்கையுடன் யானைமுகர் நடனகோலத்தில் பீடத்தின் மீது காட்டப்பட்டுள்ளார். நான்கு திருக்கைகளில் மேலது அங்குசம், பாசம், கீழதில் தந்தமும், துதிக்கையால் எடுக்கப்படும் பூரணமும் காணப்படுகின்றன. விரிந்த, பெரிய முறச்செவிகளுடன், ஆடையணிகளுடன் நர்த்தன கணபதி உள்ளார். இச்சிற்பம் சுமார் 2.5 உயரம் இருக்கலாம். இச்சிற்பம் பிற்காலக் கலைப்பாணியாக உள்ளது.

ஒ. சுப்ரமண்யர்

கன்னிமூலை கணபதியைப் போன்றே மிகவும் நவீன கட்டட அமைப்பில், நீள மேடையொன்றில் சுப்ரமண்யர் வள்ளி தெய்வானையுடன் காட்டப்பட்டுள்ளார். பீடத்தின் மேல் நின்ற நிலையில் இச்சிற்பங்கள் உள்ளன. சுப்ரமண்யர் சமபாதத்தில் நின்று, நான்குகைகளில் வச்சிரமும், சூலமும், அபயம், ஊரு முத்திரைகளும் பெற்றுள்ளார். மூவரும் கரண்ட மகுடராய் உள்ளனர். பெண்கள் இருவரும் இருகைகளைப் பெற்று, ஒன்று டோலஹஸ்தமாகவும், மற்றொன்றில் மலரையும் பிடித்தபடி உள்ளனர். இணைகளை விட சுப்ரமண்யர் சிற்பம் உயரமாக உள்ளது. பெண்கள் தலையைச் சற்று சாய்த்துள்ளனர். மூவரும் நன்கு ஆடையணிகளுடன் காட்டப்பட்டுள்ளனர். இச்சிற்பங்களும் பிற்காலப் படைப்புகளாகவே உள்ளன.

ஓ. நந்தி

சுற்றுப்பிரகாரத்தில் பைரவர் சிற்பத்திற்கு அருகில் நந்தி சிற்பம் ஒன்று உள்ளது. கால்களை மடக்கி நேரான பார்வையுடன், அமர்வுடன் உள்ள நந்தி பெரிய திமிலைப் பெற்றுள்ளது. கழுத்தில் மணிகள் தொங்குகின்றன. நெறித்த புருவமும், விடைத்த சிறிய காதுகளும் உள்ளன. இது சோழர்காலப் படைப்பாக இருக்கலாம்.

ஔ. சப்தமாதர் சிற்பங்கள்

திருச்சுற்றின் தென்புறம் வடக்குநோக்கி சப்தமாதர் சிற்பத்தொகுதியில் இருந்து பிரிந்த சிற்பங்களாக மகேசுவரி, வராகி, யோகி சிவன், பிராம்மி, வைஷ்ணவி ஆகிய சிற்பங்கள் பீடத்துடன் கூடிய புடைப்புச் சிற்பங்களாக உள்ளன. இந்த ஐந்து சிற்பங்களும் இக்கோயிலைச் சேர்ந்தவையாகவும் இருக்கலாம். அன்னையர் நால்வரும் இடக்காலை மடக்கி, வலதுகாலை தொங்கவிட்டபடி, நான்கு திருக்கைகளில் அவரவர்க்குரிய ஆயுதங்களையும், கீழிருகைகளில் இடது கை தொடையிலும், வலது கை அபயமுத்திரையையும் கொண்டுள்ளனர். நால்வரும் மார்பில் குஜபந்தத்துடன், ஆடையணிகளுடன், நெற்றிப்பட்டமுடன், தலையில் வைஷ்ணவி கிரீடமகுடமும், மற்ற மூவரும் கரண்ட மகுடமும் பெற்றவராய் விளங்குகின்றனர். நடுவில் உள்ள யோக சிவனார் யோகபட்டத்தில் அமர்ந்துள்ளார். ஜடாபாரம், நான்கு கைகளில் கீழ்க்கைகள் யோக நிலையிலும், மேற்கைகளில் மான், மழுவையும் தாங்கியுள்ளார்.

நாட்டிய சிற்பங்கள்

புள்ளமங்கை கோயில் விமானத்தில் உள்ள நடனமகளிர் சிற்பங்கள் எழில் வாய்ந்தவை. இந்த ஆடல் சிற்பங்களில் அதிட்டானத்தில் உள்ள சிவனின் இரண்டு நடனக் காட்சிகளைத் தவிர மற்றவைகள் யாவும் மங்கையரால் அபிநயிக்கப்பட்டவையாகவே உள்ளன. முதலாம் பராந்தகன் நடனக்கலைக்குக் கொடுத்திருந்த முக்கியத்துவத்தை இச்சிற்பங்களின் மூலம் அறியக்கூடும். அக்கலையின் உயர்வையும், பெருமையையும், அதன் முக்கியத்துவத்தையும்

வெளிப்படுத்தும் வகையில் நடன மகளிரின் சிற்பங்கள் போதிகையில் தாங்குசிற்பமாக விமானத்தில் வடிக்கப்பட்டுள்ளதும் இங்கு நோக்கத்தக்கது.

ஆடல்வல்லான் ஆலந்துறை மகாதேவராக அமர்ந்த இத்திருபுள்ளமங்கை கோயில் வளமையின் சின்னமாக, வாழ்வின் வெற்றி நினைவாக பராந்தகனால் கருதப்பட்டிருக்கக் கூடும். ஆடல்மகளிர் வளத்தையும், மங்கலத்தையும் குறிப்பவராக பண்டு சமூகத்தில் கருதப்பட்டனர். மேலும் ஆடல் என்பது கலையென கொள்வதற்கு முன் அஃது வாழ்வின் நடப்பாகும். அத்தகு மனமும், உடலும் ஒரு புள்ளியில் நிலைபெற்று இயக்கம் பெறும்போதுதான் வாழ்வானது நெறிப்பட்டுச் செல்கிறது. அவ்வாறே ஆடற்கலையும் நிலை பெறுவதால் அக்கலை இறைவனோடு தொடர்புபடுத்திக் கூறப்படுகிறது. இங்ஙனம் மனமும், உடலும் ஒருங்கு கூடும் நிலையானது வாழ்வில் உயர்வைத்தரும். வெற்றியைத் தரும். இதனை ஒரு குறியீடாகக் கொண்டு இக்கோயில் ஆடல்மகளிர் சிற்பங்கள் விளங்குகின்றன.

இங்குள்ள சில ஆடல் சிற்பங்களில் ஆடல்பெண்டிர் இசைக்கருவிகளை முழக்குவதையும் காணலாம். இசையும் ஆடலும் சமுதாயத்தில் பெற்றிருந்த நிலையும், மகளிர் அக்கலைகளில் சிறந்து விளங்கியதையும் இதனால் அறியக்கூடும்.

மேலும் இங்குள்ள ஆடல்மகளிர் அனைவரும் ஸ்வஸ்திகத்தில் கால்களை வைத்தவாறு உள்ளனர். ஸ்வஸ்திகம் ஒரு மங்கலச் சின்னமாகும். சமணர்கள் அதனை குறியீடாகக் கொண்டுள்ளனர். ஆடல்வல்லானின் 108 கரணங்களில் இக்கரணம் குறிப்பிடத்தக்கதாகும்.




1. அதிட்டானத்தில் உள்ள இந்த புடைப்புச் சிற்பத்தில் ஒரு பெண் ஆடுகிறாள். மற்றொரு பெண் இசைக்கருவி முழக்குகிறாள்.




2. அர்த்தமண்டபத் தூண் ஒன்றில் தொங்கும் மாலாஸ்தானம் பகுதியில் இந்த ஆடல் மகளிர் சிற்பங்கள் அழகுற வடிக்கப்பட்டுள்ளன.

3. கர்ணப்பகுதியில் அரைத்தூண்களின் மேற்பகுதியில் பலகை மீது இரு தரங்கப்போதிகைகளுக்கு இடையே நின்ற வண்ணம் பல ஆடல் மகளிர் சிற்பங்கள் இங்குள்ளன. கால்களின் நிலை அனைத்தும் சுவஸ்திகமாகவும், கைகளின் நிலை மட்டும் சிற்பங்களில் வேறுபட்டு காணப்படுகிறது. ஒன்றில் இடது கையை தொங்க விட்டு. வலது கை அபய முத்திரை காட்டுகிறது. மற்றொரு ஆடல் பெண் சிற்பம் இடது கையை மார்புக்கு குறுக்கே வலப்பக்கம் நீட்டியுள்ளார். வலது கை அபயம் காட்டுகிறது.









4. வனப்புமிக்க இந்த ஆடல்பெண் பெரிய கொண்டையை தலையலங்காரமாய்க் கொண்டுள்ளனர். மார்பில் ஆடை இல்லை. காதுகளில் வளையங்கள் உள்ளன. மார்புக்கு நடுவே தொங்கும் நீண்ட அணி ஒன்று தெரிகின்றது. இடையில் உடுத்தியுள்ள ஆடையின் மடிப்புகள் முன்புறம் தொடைவரை நீண்டு தொங்குகிறது. கைகளில் முன்வளை, கேயூரம் அணிந்துள்ளனர்.

பூதவரிச் சிற்பங்கள்


சிவன்கோயில்களின் உத்தரத்தில் தாங்குவரிமானமாகக் காட்டப்படும் இந்த பூதவரிச் சிற்பங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. பூதகணங்களின் தலைவனாகக் கருதப்படும்



சிவபெருமானின் கோயில் கூரையை இக்கணங்களே தாங்குவதாகவும், மேலும் அவை கலைகளின் தலைவனான சிவனின் படைகளாக இருப்பதால் ஆடல் பாடலில் எப் பொழுதும் ஈடுபட்டிருக் கின்றன. கோயில்களில் அமைக்கப்படும் இந்த கணங்களின் சிற்பங்கள் வளமைக் குறியீடுகளாகும்.







புள்ளமங்கை கோயிலில் அளவில் சற்றுப் பெரிய கணங்கள் விமானத்தின் கொடுங்கைக்குக் கீழே வரிமானமாகக் காட்டப் பட்டுள்ளது. அனைத்துக் கணங்களும் ஏதோவொரு செயலில் ஈடுபட்டுள்ள தாகவே உள்ளன. அவற்றின் அங்கசேஷ்டைகள் மகிழ்ந்து இன்புறத்தக்கன.




1. விமானத்தின் தெற்குப்பகுதியில் அரைத் தூணின் பலகை மேல் அமர்ந்துள்ள ஒரு கணம் மற்றொரு கணத்தின் கன்னத்தில் முத்தமிடுகிறது.

2. கையில் பாம்பைப் பிடித்தவாறு ஒரு கணம் உள்ளது.



3. ஒரு கணம் இரு கையினால் வாயைப் பெரிதுபடுத்திக் காட்டுகிறது.

4. கணம் ஒன்று கையில் பறவை ஒன்றைப் பிடித்துள்ளது.



5. இரு கணங்களுக்கிடையே கணங்களின் தலைவனான கணபதி யானைமுகர் உள்ளார்.

6. அரைத் தூண் பலகையின் அமர்ந்துள்ள குரங்கு முகம் கொண்ட கணம் மற்றொரு குரங்கு கணத்திற்கு தலையில் பேன் பார்க்கிறது.



7. கணங்கள் வரிசையாக நின்று ஆடுகின்றன. சில தாளமிடுகின்றன. எதையோ ஒன்றை உற்று நோக்குவது போல ஒரே திசையை நோக்குகின்றன.

8. கைகளை உயர்த்தியபடியும், கால்களை ஆடுவதாக தூக்கியபடியும் நின்ற நிலையாகவும், அமர்ந்த நிலையாகவும் வரிசையாக உள்ளன.

9. இக்கணவரிசை அர்த்தமண்டப நுழைவுவாயிலின் உத்தரக்கம்பிலும், கருவறை நுழைவின் முகப்பின் மேற்பகுதியிலும் உள்ளன.

10. அர்த்தமண்டபத்தின் மேற்கூரையின் நாற்புறமும் இக்கணவரிசை அமைக்கப்பட்டுள்ளன.

11. அர்த்தமண்டப வெளிப்புற கூரைப்பகுதியின் மேலே தெற்கிலும், வடக்கிலும் இரண்டிரண்டாக நான்கு அளவில் பெரிய கணங்கள் அமர்ந்துள்ளன.

அடிக்குறிப்புகள்

1. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், தமிழ்நாடு அரசு வெளியீடு
2. ஜெயதேவன், வ. அணிகலன்கள் அகராதி, சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு
3. சுப்ரமணியன், ச.வே. கம்பராமாயணம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
4. தேவி. கோ. புள்ளமங்கை அதிட்டானச் சிற்பங்கள் ஓர் ஆய்வு - தமிழ்பல்கலைக்கழகம்

9. கல்வெட்டுச் செய்திகள்

கிழார்க் கூற்றத்துப் பிரமதேயமான புள்ளமங்கலம் என்னும் ஊரில் திருவாலந்துறை மகாதேவர் கோயில் முதலாம் பராந்தகச் சோழனால் அவனது மூன்றாம் ஆட்சியாண்டின் போது கட்டப்பட்டது. இக்கோயிலில் கிடைக்கும் காலத்தால் முந்தைய கல்வெட்டு பராந்தகனுடைய 3-ம் ஆட்சியாண்டு கல்வெட்டேயாதலால் அவனே இக்கோயிலை எடுப்பித்தவன் என்ற முடிவுக்கு வரலாம். புள்ளமங்கலத்தில் மொத்தம் 21 கல்வெட்டுகள் உள்ளன. ஆனால் 18 கல்வெட்டுகள் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறையால் வெளியிடப்பெற்றுள்ளன.[1] இக்கோயில் கல்வெட்டுகள் நம் வரலாற்றையும், சமூக வரலாற்றையும் ஆய்வு செய்வதற்குச் சிறந்த சான்றுகளை அளிக்கின்றன.

'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்ற அவ்வையின் மொழி பொருள் பொதிந்தது. கல்லின் மேல் எழுதப்பெற்ற வாசகம் காலத்திற்கும் நீடித்து நிற்பதைப் போல இளமையில் கற்பது வாழ்நாள் முழுவதும் நிலைத்து நிற்கும் என்பது இதன் பொருள். பொதுவாகக் கல்வெட்டுகள் காலத்தின் கண்ணாடி என்று கொள்ளலாம். கல்வெட்டுகள் ஒவ்வொரு வட்டாரத்தின் வட்டாரத் தன்மையை வெளிப்படுத்தி நிற்பன. வட்டாரமொழி, பழக்க வழக்கம், நிருவாகம், பொருளியல் ஆகியவற்றினை அறிந்து கொள்ள துணை நிற்பன. பல்லவநாட்டின் கிழக்குப் பகுதியில் பிரமதேயங்கள் செழித்து நின்றன. ஆனால் மேற்குப் பகுதியில் மாடுபிடி சண்டையில் ஈடுபட்ட மக்கள் வாழ்க்கையே மேலோங்கி நின்றது. இந்த இருவேறு நிலையைக் கல்வெட்டுகள் தான் சுட்டி நிற்கின்றன.[2] அதனால்

கல்வெட்டுச் செய்திகள் இலக்கியச் செய்திகளை விடப் போற்றப்பெறுகின்றன. இந்தப் பின்னணியில் புள்ளமங்கலம் கல்வெட்டுகளை அணுகவேண்டும்.

பராந்தகன் காலந்தொடங்கி மூன்றாம் குலோத்துங்கன் காலம் வரையில் கல்வெட்டுகள் புள்ளமங்கை கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன.[3] அதற்குப் பின் கல்வெட்டுகள் கிடைக்கவில்லை. பெரும்பாலான கல்வெட்டுகள் விளக்குக் கொடையைப் பற்றியேப் பேசுகின்றன.[4] இரண்டு கல்வெட்டுகள் தொடக்கத்திலேயே நின்று விடுகின்றன. முதலாம் இராசராசன் கல்வெட்டுகள் சாமவேதிகளுக்கும், இருக்குவேதிகளுக்கும் நிலக்கொடை அளித்த செய்தி கூறப் பெறுகின்றது.

விளக்கு கொடைகள்

புள்ளமங்கலம் ஆலந்துறை மகாதேவர்க்கு அளிக்கப்பெற்ற நிலக்கொடைகள் அனைத்தும் விளக்கு கொடைகளே. பல்லவர் காலம் முழுவதும் காசுக் கொடை மிகுந்து, நிலக்கொடை குறைந்து நிற்பதைக் காணலாம்.[5] ஆனால் கி.பி.10-ஆம் நூற்றாண்டிலிருந்து சோழர் காலம் முழுவதும் நிலக்கொடை மிகுந்து வருவதைக் காணலாம். திரு. டி. என். ஜா அவர்கள் சோழர் காலம் முழுவதும் நிலக்கொடை மிகுதி ஆகி கோயில்கள் நிலவுடைமை நிறுவனமாக எழுச்சிப் பெற்று வருவதை எடுத்துக்காட்டியுள்ளார்.[6] இந்த பின்னணியில் புள்ளமங்கலம் விளக்குக் கொடைகளை அணுக வேண்டும். திருநாவுக்கரசர் பல கோயில்களில் விளக்கெரிக்க வகை செய்தார்.[7] அவரைப் பின்பற்றியே மக்களும் விளக்குக் கொடை அளித்தனர்.

புள்ளமங்கலத்து முதல் கல்வெட்டு விளக்குக் கொடையைப் பற்றிப் பேசுகின்றது. "அஞ்சு நொந்தா விளக்குக்கு எண்ணை நிசதிம் ஐவுழக்கினால் ஆடை விட்டன் கலநெல்லுக்கு....வும் இந்நெல்லால் அஞ்சு நொந்தாவிளக்கு சந்திராதித்தவரை எரிப்பதாகவும் இப்பரிசு பணித்துக் குடுத்தோம் புள்ளமங்கலத்து மஹாஸபையோம்"[8] இக்கல்வெட்டில் சபையாரே விளக்கு எரிக்க ஏற்பாடு செய்தமை குறிக்கப் பெறுகின்றது.

இரண்டாவது கல்வெட்டு வாச்சியன் நாரிநயன் காடன் என்பவன் உழக்கு நெய்யால் ஒரு நொந்தா விளக்கு எரிக்க ஸ்ரீகண்டமங்கலத்தில் கீழ்குளத்தில் இரண்டு மா நிலம் வெள்ள வாக்கால் கரையில் (மூன்)றாகவும் ஆக நிலம் 200 பார்த்தி அளிக்கப்பெற்ற செய்தியைக் கூறுகின்றது.

மற்றொரு கல்வெட்டில் வார்க்கியன் மாதவன் இராமதேவபட்டன் என்பவன் நொந்தா விளக்கெரிக்க மூன்று மா நிலம் அளித்த செய்தி கூறப்பெறுகின்றது.[9]

பரகேசரி வருமன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டொன்று ஆரிதன் மாறனாராயன் என்பவன் பொன் கொடுத்து ஒரு மாவரை நிலம் வாங்கி விளக்குப் புறமாக அளித்துள்ளான்.[10] இந்த நிலம் சபையார் அதிகாரத்தின் கீழிருந்தது. நிலத்தின் பெயர் பன்றிக்குழிசேனை குளம் என்பதாகும்.[11]

கணக்குக் காட்டாமல் விட்ட குற்றம்

புள்ளமங்கலம் மகாசபை அதிகாரத்தின் கீழ் ஸ்ரீகண்டமங்கலம் நடுவிற்சேரி என்ற பகுதியும் செயல்பட்டுக் கொண்டிருந்தது. அங்கு வாழ்ந்த மத்தியஸ்தன் திருவெண்காட்டடிகள் ஆன எழுநூற்று ஐம்பத்து நால்வனும், அவன் தம்பிமாரும் காவிதிக்காணியாய்ப் பெற்றிருந்த நிலம் அரசு அதிகாரியான சுந்தரசோழமுத்தரையர் கணக்கு கேட்ட போது கணக்கு தர மறுத்து விட்டனர். அந்தச் செய்தியை கல்வெட்டில் தெளிவாகக் கூறியுள்ளனர்.

"இவ்வூர் எழுநூற்று ஐம்பத்து நால்வன் இதன் முன்னை... இவ்வூர் கணக்குச் செய்வதாக...சுந்தரசோழமுத்தரையராந பிராந்தகமுத்தரையர்க்கு .....னுக்கல நெல்லு இவ்வூர் மேலடுத்து வரும் னெல்லில் ஆயிரத்திருநூற்றைம்பதிக் கல நெல்லுக்கு ஸபையோம் பணித்தக் குடுத்தவரயும் மற்றும் ஊரில் வெள்ளாளரையும் பிராமணரையும் ஆங்கே வரக்காட்டி இடுவிச்சு காசும் பயறும் இப்பயறும் நெல்லும் காசும் முதலே சிலவு காட்டுகவென்று தன்னை அழைப்பித்து செலவு காட்ட தான் வந்து கணக்குகாட்டா விட்ட குற்றத்தாலும் தம்பிமார்

முன்னின்று பணிசெய்யாவிட்ட குற்றத்தாலும் ....செய்யும் 25 ஈழக் காசும் கீழுமிறையிலி ஆக விற்றுக் குடுத்தோம் மஹாஸபையோம்"[12]

இந்த நிகழ்வு பெரும்பாலும் ஆதித்தகரிகாலன் காலத்திலோ அல்லது உத்தமசோழன் காலத்திலோ நிகழ்ந்திருக்க வேண்டும். நிலம் காளாபிடாரியாருக்கு விற்றுப் பெற்றாலும் நடுவிற்சேரி கணத்தார் (சபையார்) விலை கொடுத்து வாங்கியுள்ளனர்.

சாமவேதிகளும் இருக்குவேதிகளும்

சோழர் காலத்தில் நால்வகை வேதங்களை ஓதுவதற்கென்று சதுர்வேதி மங்கலங்கள் அளிக்கப்பெற்றன. பல்லவர் காலத்திலும் சில பிரமதேயங்கள் அளிக்கப்பெற்ற செய்தி பட்டத்தாள் மங்கலச் செப்பேடுகளாலும், தண்டந் தோட்டச் செப்பேடுகளாலும் அறியமுடிகின்றது.[13] தேவாரப் பாடல் சிறப்புற்றிருந்த காலத்திலேயே வேதம் ஓதும் பிராமணர்கள் புள்ளமங்கலத்தில் வாழ்ந்தார்கள். சங்க காலத்திலேயே பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் வேதவேள்வியில் சிறப்புற்றிருந்த தன்மை புலப்படும்.[14] பூஞ்சாற்றூர் என்பது 'பாபநாசம்' என்ற ஊரின் பழைய பெயராகும். சங்ககாலம் முதல் பிற்காலச் சோழர் காலம் வரை வேதம் ஓதும் பிராமணர்கள் சிறப்புற்றிருந்தார்கள். இதற்கு அண்மையில் கிடைத்த இந்தளூர் செப்பேடுகளே சிறந்த சான்றாகும்.[15] அந்த வகையில் புள்ளமங்கலத்தில் கிடைக்கும் முதலாம் இராசராசன் கல்வெட்டுகள் இரண்டு சாமவேதிகளுக்கும், இருக்கு வேதிகளுக்கும் நிலம் அளித்த செய்தி கூறப்பெறுகின்றது.

"மஹாஸபை கூடி இருந்து இவ்வூர் நின்றோதும் சட்டர்கள் ஸாமவேதிகளுக்கும் இருக்குவேதிகளுக்கும் ஆகச் சட்டபோகம் ஆய் நின்றோது சட்டர்களுக்கு குடுத்த நிலம் ஆவது இவ்வூர்ப்பால் ப்ரம்ஹதேய நிலமங்கலமொழிய ஒந்தன்வாய் நிலம் உடைய அலைக்குன்றியூர் வார்க்கியன் நக்கன்காளி பெருமாளார் கடவதாய் கழிஞ்சிதிற் பின்பு பெருமாள் ஸ்ரீ முகம் ஸபையோமுக்கு இந்த நக்கன் காளி

நிலமும் இவன் உடன்பிறந்தார் நிலமும் இவன் மக்கள்நிலமும் இவன் பிராமணிமார் பேர்க்கீழ் கிடந்த நிலமும் விற்று பாண்டிகுலாசனி மாராயர் தண்டல் நிலத்து இடுக என்று ஸ்ரீமுகம் வர இந்நக்கன் காளி பேர்க்கீழ்கிடந்த நிலம் இவ்வூர் இவன் நிலம் இவ்வூர்ப்பால் ப்ரஹ்மதேயம் நீலமங்கலத்து"[16]

இக்கல்வெட்டு வாசகத்தில் காளிபெருமானார் என்பவருக்கு அளிக்கப்பெற்ற சட்டபோகம் பற்றிக் கூறும்போது அவன் உடன்பிறந்தார் நிலம், அவன் மக்கள் நிலம், அவன் பிராமணிமார் (மனைவி) நிலம் என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. இந்தச் சட்டர் தன்பணியை ஒழுங்காக செய்யாமையால் அரசாணை பிறப்பிக்கப் பெற்றதா அல்லது முதுமை காரணமாகப் பிறப்பிக்கப் பெற்றதா என்பது புலப்படவில்லை. அவனுடன் சேர்ந்தவர் நிலம் பறிமுதல் செய்யப்பெற்றதற்குக் காரணம் என்ன? இந்தக் கேள்விகளுக்கு விடைசொல்லும் அளவிற்கு கல்வெட்டில் விளக்கம் இல்லை. "நிலமும் விற்று பாண்டிகுலாசனி மாராயர் தண்டல் நிலத்து இடுக என்று ஸ்ரீமுகம் வர" என்ற வாசகம் அரசன் சட்டபோக நிலங்களை பாண்டிகுலாசனி மாராயர் நிலத்துடன் சேர்த்துவிடுக என்ற பொருளில் அமைந்துள்ளது. இந்த வாசகம் பிரமதேயத்திற்குட்பட்ட நிலங்கள் அனைத்தும் பிரமதேயத்திற்குரியதல்ல என்பதை சுட்டி நிற்கின்றது. அரசன் அந்த நிலங்களை பிறருக்கு மாற்றியளிக்கும் அதிகாரத்தைத் தன்னிடம் வைத்திருந்தான் எனலாம்.

மகாசபையாரே நிலத்தை விலைகொடுத்து வாங்கியமை குறிப்பிடத்தக்கது. தனிநபர் யாரிடமும் நிலத்தை விலைகொடுத்து வாங்கும் அளவிற்கு பொருள் வைத்திருக்கவில்லை போலும். அதுவும் பாண்டிகுலாசனி மாராயர் கோச்செய்ய (ஆணையிட) மகாஸபையாரே விலைகொடுத்து வாங்கினர்.

"நிலங்களுக்கு வரி ஒதுக்குத்திந வரிசையய் கீழ் இந்நில கலிக்கும் வரிசை வட்ட காசு 80 இத்தோட்டத்துக்கு வரிசையிட்ட காசு 10 ஆக தொண்ணூறு காசு பாண்டி குலாசனி

மாராயர் தண்டதலாத்து வைத்த இப்பரிசு எம்மூர் ஸபையோமிடையய் சேந்த இந்நிலம் .... ஸபையோம் உடைய வரிசையய்"[17]

இந்தக் கல்வெட்டு வாசகம் மறுபடியும் இறையிலியாக அளித்தபோது இறைத்திரவியமாய் காசுகட்டிய பின்பே சட்டபோகமாய் மறுபடியும் அளிக்கப் பெற்றுள்ளது என்பதைக் காட்டுகிறது.

இதே ஊரைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டும் சட்டபோகம் பற்றியே அமைந்துள்ளது. வேதம் ஓதும் சட்டர்கள் இல்லாமையால் சட்டபோக இறையிலியாக நின்ற நிலத்தை இறை கொள்ளும் நிலமாக மாற்றி விடுக என்று இராசராசன் ஆணை பிறப்பித்துள்ளான்.

"இ நீலமங்கலத்து ஸபையோம் தான ஒன்றே நான்கு நிலத்தையும் இவ்வூர் சமடற் நின்று ஓதுவார்க்கு இறை இலியாகப் பணித்து இறைகொள்ளுவது பெறாரிந் நிலத்தா லென்று திருவாணை கூறி கல்லில் வெட்டி கிடந்த நிலம் நின்றோது சட்டராய் ஓதுவாருமின்றி இறைஇலியாக நிலங்கள் இறை ஏற்றி கொள்க வென்று நம்மை உடைய சக்ரவர்த்தி ஸ்ரீராஜராஜ தேவர் யாண்டு உயிகவது திருவாய் மொழிந்தருளினமையில் இந்நிலமும் இறை கொள்வதாக திருவாணை . . . . ஸபையோமேய் . . . இறை கொள்வதாக பணித்தோம்"[18]

மேற்கண்ட கல்வெட்டு குறிப்பிடத்தக்க சிறப்புடையது. சட்டபோகமாய் இறையிலியாகக் கிடந்த நிலத்தை இறையிறுக்கும் நிலமாக மாற்றியமைக்க ஆணையிட்ட செய்தியை இக்கல்வெட்டு தருகின்றது. பிரமதேயமாக இருந்தாலும் அரசுக்கு வரவேண்டிய வருவாய் தடைபடக்கூடாது என்பதில் கருத்தூன்றி நின்ற உண்மை புலப்படுகின்றது. இறையிலி என்பதும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் அடங்கும் என்பதுவும் அது சந்திராதித்த வரை செல்வதல்ல என்பதுவும் இதனால் புலப்படும்.

புள்ளமங்கலத்துப் பிரமதேயம் முதலாம் இராச ராசனுக்குப் பின் செல்வாக்கிழந்து வந்ததோ எனக் கருத இடமுண்டு. முதலாம் இராசராசனுக்குப் பின் முதலாம் விக்கிரமச்சோழன் கல்வெட்டு பொறிக்கப்பெற்றுள்ளது. இடைப்பட்ட நூற்றாண்டுகளில் கல்வெட்டுப் பொறிக்கப்படவில்லை. இதனை நோக்குங்கால் அக்காலக் கட்டங்களில் பிரமதேயம் செயல்படவில்லையோ என்று கருத வேண்டியுள்ளது. மேலும் முதலாம் இராசராசனின் 21-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு சாமவேதம் ஓதுவாரின்றி இறையிலியாக நின்ற நிலத்தை இறைநிலமாக மாற்றும்படி ஆணை பிறப்பித்த செய்தியைக் கூறுகின்றது. அதனால் முதலாம் இராசராசன் காலத்திலேயே புள்ளமங்கலத்து பிரமதேயம் செல்வாக்கு இழந்து வருவது தெரிகின்றது. காலவோட்டத்தில் இந்தப் பிரமதேயம் வரலாற்றுத் திரையிலிருந்து மறைந்தே போயிற்று.

பொதுவாக கி.பி.12-ம் நூற்றாண்டிலிருந்து பிரமதேயம் செல்வாக்கிழந்து தேவதானம் மேலோங்கி வருவதை பர்ட்டன் ஸ்டீன் அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளார். கி.பி. 1133-இல் வடிக்கப்பெற்ற கல்வெட்டு உத்தரமேரூர் மகாசபை கோயிலுக்கு செலுத்தவேண்டிய கடனையும், அக்கடனுக்கு ஆண்டுதோறும் வட்டி செலுத்த வேண்டியதையும் சேர்த்து மகாசபை கடனைத் திருப்பிக் கட்டமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்தக் கல்வெட்டு பல அரிய செய்திகளைக் கொண்டுள்ளது. மண்டலத்தின் புகழ்மிக்க தனியூராக விளங்கிய உத்தரமேரூர் கோயிலுக்குச் செலுத்த வேண்டிய கடனைக் கட்ட முடியாத தள்ளப்பட்ட நிலையை நோக்கும்போது பிரமதேயங்களின் செல்வாக்கு இழப்பை எடுத்துக்காட்டுகின்றது என்று பர்ட்டன் ஸ்டீன் கூறுகிறார்.[19]

இந்த நிலைதான் புள்ளமங்கலத்துப் பிரமதேயத்திற்கும் உருவாகியிருக்க வேண்டும். புள்ளமங்கலம் தனியூர் என்று கூறும் அளவிற்கு மகாசபையைப் பெற்றிருந்தது. பல பிரமதேயங்களை உள்ளடக்கிய மகாபிரமதேயமாக விளங்கியது. கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து அல்லது

உறுதியாக கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து வேதம் ஓதும் பிராமணர்கள் வாழ்ந்த ஊராக எழுச்சிப் பெற்றிருந்தது என்பதை திருஞானசம்பந்தர் தேவாரத்தால் அறிகிறோம்.[20] ஐந்நூறு ஆண்டுகளில் அது வீழ்ச்சியடையும் நிலைக்குத் தள்ளப்பெற்றது. எத்தனையோ காரணங்கள் இருந்தாலும் சோழர் தலைநகர் தஞ்சாவூரிலிருந்து கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாற்றியதனை ஒரு தலையாயக் காரணமாகக் கொள்ளலாம். சோழப்பேரரசர்கள் புள்ளமங்கலத்துப் பிரமதேயத்தின் மேல் அளவற்ற பற்று வைத்திருந்தனர்.

கல்வெட்டில் பெயர்கள்

பொதுவாக கல்வெட்டுகள் கொடையளித்தோரைப் பற்றியும். கொடை பெற்றோரைப் பற்றியும் பேசும். மகாசபை தொடர்பான பெயர்கள் பிராமணர் பெயர்களாய் உள்ளன.[21] காப்பியன் என்ற பெயர் பெரும்பாலும் காப்பிய கோத்திரத்தைக் குறிக்கும். சாவந்தி என்ற பெயர் சவண்டி பிராமணரைக் குறிக்கலாம். அல்லது கோத்திரமாகவும் இருக்கலாம். ஆரிதன் என்ற பெயர் கோத்திரப் பெயரே ஆகும்.

மகாசபையைச் சேர்ந்தவர்கள் பெயர்களனைத்தும் பிராமணர்கள் பெயர்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. பிரமதேயத்தில் பிராமணர்கள் தவிர பிறமக்கள் தனித்தனியே வைக்கப்பெற்றிருந்தனர். அவர்கள் வழிபட்ட கடவுளும் தனியே வைத்துப் போற்றப் பெற்றன. ஆதித்தகரிகாலன் கல்வெட்டொன்று காளாபிடாரிக்கு அளிக்கப்பெற்ற கொடையைப் பற்றிக் கூறுகின்றது.[22] அத்தெய்வம் வைக்கப்பட்டிருந்த இடம் திருமணி மண்டபம் ஆகும். அத்தெய்வத்திற்கு கொடை அளித்தவர் பட்டியல் நீண்டதாக உள்ளது. கொடையளித்தவர்கள் அனைவரும் பிராமணரல்லாதவர்கள். கொடை விபரம் குறிக்கப்பெற வில்லை. கொடையளித்தோர் பட்டியலைப் பார்க்கும்போது காளாபிடாரி என்ற அந்த உள்ளூர்த் தாய்த்தெய்வம் எந்த அளவிற்கு பெருமையும் பழமையும் பெற்றதாக விளங்கியிருக்க வேண்டும் என்பது நன்கு புலப்படுகின்றது.

ஊரார் இத்தாய்த் தெய்வத்தை தனிக்கடவுளாக வழிபட்டுள்ளனர். சிவன் கோயிலில் காமக் கோட்ட நாச்சியாராக மாற்றப்பெறவில்லை. ஊர்க்குடிகள் வழிபட்ட பெண்தெய்வமாக எழுச்சி பெற்றநிலையே புள்ளமங்கலத்தில் நிலைபெற்றிருந்தது. இத்தெய்வம் பெரும்பாலும் ஊரகப் பெண் தெய்வமாகவே நிலைபெற்றிருக்க வேண்டும்.

காளாபிடாரிக்குக் கொடை அளித்தவர் பெயர்களின் முன்னொட்டு ஒலோச்சன் என்ற பெயர் பயின்று வருகிறது. இது பெரும்பாலும உவச்சன் என்பதன் திரிபாகலாம். சங்ககால புலவர் உலோச்சனார் பெயரோடு தொடர்புடையதாகவும் கொள்ளலாம். உலோச்சனார் என்ற பெயர் சமணத்தோடு தொடர்புடைய பெயராகவும் இருக்கலாம்.[23] காடனூற்றுவன், காடன் மல்லன், கூத்தானிகாடன், வாணப்பேரையன், மாறன் தந்தன் மல்லையன், சொல்லேற்றிக்குருந்தன், காடந்தைகள் ஆகிய பெயர்கள் காடவர்களோடு தொடர்புடையதாக வருகிறது. நக்கன் கேசுவன், செல்லூர் கேசுவன் சடையன், கண்ணங்கோயில் நம்பன், கேசுவன் நக்கனாயிரவன், பாண்டங்கோயில் நாரணனாச்சன் ஆகிய பெயர்களில் நக்கன் என்ற பெயர் பயின்று வருகின்றது. நக்கன் என்ற பெயர் சிவனைக் குறிக்கும். நீலகண்டன், வைகுந்தன் நக்கன், காடன் நாரணமூர்த்தி ஆழியாந் சேந்தன் ஊரன் கேசுவன் என்ற பெயர் மிக நீண்டு நிற்கின்றது. ஆழியாந் சேந்தன் என்ற பெயரில் ஆழியான் தந்தை பெயராக இருக்கலாம். சேந்தன் மகன் பெயராக இருக்கலாம். கண்ணன் பிராந்தகன் என்ற பெயரில் பிராந்தகன் சுந்தரசோழனின் இயற்பெயரான பராந்தகன் என்ற பெயரை நினைவுபடுத்துகின்றது.[24] அரசன் பெயரை பணியாளர்கள் வைத்துக்கொள்வது பண்டைய மரபு.

சந்திரகிரஹணம்

முதலாம் இராசராசனின் 12-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டில் சந்திரகிரஹணத்தன்று சபை கூடியது பற்றிக் குறிக்கப் பெறுகின்றது.[25] சூரிய

கிரஹணம், சந்திரகிரஹணம் இந்திய வரலாற்றில் கல்வெட்டுகளில் பல இடங்களில் குறிக்கப் பெறுகின்றது.[26] கொழுமம் கல்வெட்டு ஒன்று வீரசோழனின் பிறந்த நட்சத்திரமும், சூரியகிரஹணமும் ஒரே நேரத்தில் வந்தமை பற்றிக் கூறுகின்றது.[27] சந்திர கிரஹணம் பற்றிய குறிப்பு வரலாற்றாண்டைக் கணிப்பதற்கு உதவியாக உள்ளது.

அம்பலம்

புள்ளமங்கலத்தில் அம்பலம் ஒன்று கட்டப்பெற்றது. அம்பலம் என்பது நீதிமன்றத்தையும், கோயிலையும் குறித்து வந்தது.[28] பெரும்பாலும் நீதிமன்றத்தைக் குறிப்பதாகவே கல்வெட்டுகளில் பயின்று வருகின்றது. காவேரிப்பாக்கம் கல்வெட்டு ஒன்று அம்பலத்தே ஸ்திரீகளைக் கொண்டு செல்லக் கூடாது. அதுவும் உவாநாளிலும், சங்கிராந்தி நாளிலும் ஸ்திரீகளை அம்பலத்திற்குக் கொண்டு செல்லக் கூடாது என்று முதலாம் இராசராசன் ஆணை பிறப்பித்துள்ளான்.[29] இங்கு அம்பலம் என்பது நீதிமன்றத்தைக் குறித்து நின்றது. சில அறிஞர்கள் அம்பலம் என்பதற்கு கோயில் என்று பொருள் கொண்டுள்ளனர்.[30] புள்ளமங்கை கல்வெட்டில் பயின்றுவரும் அம்பலம் என்பதும் பிரமதேயத்திலிருந்த நீதிமன்றத்தையே குறிக்கிறது. ஊர்ச்சபை கூடுமிடம் என்று தமிழ்ப் பேரகராதி கூறும்.[31] மலையாளத்தில் அம்பலம் என்பதற்குக் கோயில் என்றும் பொருள்.[32] அம்பலப்புறம் பற்றிய புள்ளமங்கை கல்வெட்டு ஒன்று கீழே தரப்பெறுகின்றது.

"இவ்வூர் ஆரிதன் மன்றன் சுவரனுக்கு நாங்கள் அம்பலப்புறமாக விற்றுக்குடுத்த பார்த்தி . . . . புள்ளமங்கலத்து மஹாஸபை கூடி இருக்க ஆரிதன் மன்றன் சுவரன் முன் சுட்டப்பட்ட நாலெல்லையில் திருமண்டகத்தே . . . . செய்து புள்ளமங்கலத்தும் ஸபை கூட்டங்குறைவற கூடி இ ஆரிதன் மன்றன் சுவரன் முன் சுட்டப்பட்ட நாலெல்லைக்கும் நடுவுபட்ட பாத்தி 800 (எண்ணூறும்) முன் எடுப்பிச்ச அம்பலத்தும் சுற்றுக் கல்லூரிக்கும் தொட்டிக்கும் கிணற்றில் நீர் இறைப்பானுக்கும் அம்பலம்

தம் முருவார்நுக்கும் அம்பலம் அழிவு செலவும் புதுக்கவும் தண்ணீராட்டவும் இப்பாத்தி எண்ணூறும் ஸபையோம் முன்பே அம்பலப்புறமாக நீரோடு அட்டி இப்பாத்தி எண்ணூறும் இறைஇழிச்சி தரவேண்டுமென்று ஸபையோமுக்கு . . . . இறையிழிச்சிக்குடுத்தோம்"[33]

இக்கல்வெட்டு வாசகம் பல செய்திகளைத் தருகின்றது. அம்பலம் தனிநபர் எடுக்கும் நிலையும், அம்பலப்புறமாக இறையிலி செய்யும் உரிமையும் மகாஸபையாரிடம் இருந்த நிலையும், இறையிலி செய்யும் போது மொத்தமாக இறைக்காசை கட்டிய பின்பே இறையிலி செய்த நிலையும் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளது. சுற்றுக்கல்லூரி என்ற சொற்றொடர் குறிப்பிடத்தக்கது. இலக்கிய வழக்கில் கல்லூரி என்பது கல்வி பயிலும் இடம் என்று பொருள் கொண்டாலும்,[34] கல்வெட்டில் கல்லூரி என்பது கல்மேடை என்ற பொருளில் வழங்கப்பெற்றுள்ளது.[35] அம்பலம் அழிவுபட்டால் அதனைப் புதுப்பிப்பதற்கும் இக்கொடை பயன்படுத்தப் பெற்றது.

கொலையும் தண்டனையும்

புள்ளமங்கலத்து மகாதேவர் கோயிலில் காவல் பணியிலிருந்த பள்ளி பொன்னி நாடாழ்வானும், வாணராய போயனும் தங்களுக்குள் பகையேற்பட்டுச் சண்டையிட்டுக் கொண்டனர். அந்தச் சண்டையில் வாணராய போயன் எய்திய அம்புபட்டு பொன்னி நாடாழ்வான் மகன் குப்பை பெருமாள் இறந்துபட்டான். கொலைக்குற்றம் செய்த வாணராய போயனுக்கு 3/4 நுந்தா விளக்கு எரிக்க சபையார் ஆணையிட்டனர். வாணராயபோயனும் 72 ஆடுகளை சிவப்பிராமணர் வசம் ஒப்படைத்து நொந்தா விளக்கெரிக்க ஏற்பாடு செய்தான். இந்த விளக்கு குப்பைப் பெருமாளைச் சார்த்தி (நினைவாக) வைக்கப்பெற்றது.[36]

கல்வெட்டில் ஊர்ப்பிரிவுகள்

புள்ளமங்கலம் கல்வெட்டுகளில் நாட்டுப் பிரிவுகளும், ஊர்களும் குறைவாகவே பேசப்பெறுகின்றன. நித்தவிநோத வளநாடு, கிழார்க் கூற்றம் ஆகியவை குறிப்பிடப் படுகின்றன.[37] மேலும் மிறைக்கூற்றம், நல்லூர்நாடு ஆகிய

நாட்டுப்பிரிவுகள் கூறப் பெறுகின்றன. இந்த நித்தவிநோத வளநாட்டுப் பிரிவு முதலாம் இராசராசன் காலத்தில் ஏற்பட்டதாகும். இராசராசனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று 'நித்தவிநோதன்' என்பதாகும். நல்லூர்ச்சேரி, கீரன்குடி என்ற ஊர்ப்பெயர்களும் பயின்று வருகின்றன. பழந்தேவதானம் என்ற ஒரு சொல் கல்வெட்டில் வருகிறது. இது நடுவிற்சேரியைக் குறிக்கலாம்.

நித்தவிநோத வளநாடு

புள்ளமங்கலம் கல்வெட்டுகளில் நித்தவிநோத வளநாடு, சிராரா, ஆகிய வளநாடுகள் மட்டும் குறிக்கப்படுகின்றன. வளநாடு என்ற பிரிவு முதலாம் இராசராசன் காலத்தில் உருவாக்கப்பெற்றது.[38] வளநாடு என்ற சொல் வளமான பகுதியைக் குறிக்கும் சொல்லாக பாண்டியநாட்டில் குறிக்கப்பட்டது.[39] கி.பி. 9-ஆம் நூற்றாண்டுப் பாண்டியர் கல்வெட்டுகளில் இச்சொல் பயின்று வருகின்றது. ஆனால் முதலாம் இராசராசன் வருவாயை மிகுதியாக்க மண்டலம் என்ற பெரும்பிரிவிற்கும், நாடு என்ற சிறுபிரிவிற்கும் இடையில் நிற்கும் பிரிவாக வளநாட்டினை கொண்டுவந்தான். ஒரு வளநாட்டிற்குள் இரண்டு அல்லது மூன்று நாடுகள் அடக்கி வைக்கப்பெற்றன. தொண்டைநாட்டில் கோட்டமே வளநாட்டிற்குச் சமமாக வைத்துப் பேசப்பெற்றது. அரசன் விருதுப்பெயராலோ, அரசிப் பெயராலோ வழங்கப்பெற்றது. வளநாடு என்ற பிரிவு நாடு முழுவதும் நிலஅளவு செய்தபோது உருவாக்கப் பட்டுள்ளது. பெரும்பாலும் வளநாட்டுப்பிரிவு நிலவருவாய் சீர்திருத்தத்துடன் தொடர்புடையதாகத் தெரிகின்றது.

கல்வெட்டில் குறிக்கப்படும் மன்னர்கள்

முதலாம் பராந்தகச் சோழன்

1. கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு அஞ்சாவது..... – 546/1921

2. மதிரை கொண்ட கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்...-
3. கோப்பரகேசரி பன்ம்ம(ர்)க்கு யா(ண்)டு எட்டாவது...- 551/1921
4. கோப்பரகேசரி பன்ம்ம(ர்)க்கு யா(ண்)டு மூன்றாவதின் எதிரா - 549/1921
5. கோப்பரகேசரி பன்ம்ம(ர்)க்கு யா(ண்)டு ஆறாவது...- 559/1921
6. மதிரை கொண்ட கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு 31 ஆவது-558/1921
7. மதிரை கொண்ட கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு 18 ஆவது- 555/1921

முதலாம் இராசராச சோழன்

1. கோ விராசகேசரி வன்மற்கு (யாண்டு15-ஆவது - 548/1921
2. சாலை கலமறுத்த கோவிராஜராஜ கேசரி வன்மர்க்கு யாண்டு 12-வது - 553/1921
3. யாண்டே செழியரைத் தேசு கொள் ஸ்ரீகோவிராஜராஜ கேஸரி பன்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு 21-ஆவது
4. சாலை கலமறுத்த கோவிராஜராஜ கேசரி வன்மர்க்கு யாண்டு 12-வது - 557/1921

முன்றாம் குலோத்துங்கச் சோழன்

1. மதுரை திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரை கொண்டு (பாண்டி)யன் முடித்தலையும் கொண்டருளிய ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவற்கு.....- 552/1921

ஆதித்த கரிகாலன்

1. பாண்டியனை தலைகொண்ட
2. கோப்பரகேஸரி பற்மற்கு யாண்டு 5-ஆவது -56/1921

விக்கிரம சோழன்

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு 9-ஆவது - 554/1924

கல்வெட்டில் குறிக்கப்படும் அளவைகள்

குழி, முக்காணி, மாவரை, அரைக்காணி, பார்த்தி முதலிய நில அளவைகள் குறிப்பிடப்படுகின்றன.

கல்வெட்டில் சபையோர்கள்

அர்த்தமண்டப வடபுறக் குமுதத்தில் உள்ள கல்வெட்டில் புள்ளமங்கலச் சபையோர்கள் பெயர்கள் காணப்படுகின்றன. சாவாந்தி பரமேஸ்வரன் அக்கிபிரான் பட்டன், சாவாந்தி பட்டன் நாராயணன் தாயச்சோமாசியார், சாவாந்தி சிவபட்டாலகன் கேசுவன், சாவாந்தி வாஸுதேவன் தாயன், வாக்கியன் கேஸவன் பாண்டன், வார்க்கியன் நாராயணன் ஜாதவேதன், வாக்கியன் த(த்)தன் திவாகரன், காப்பியன் பட்டன் சொத்தன் பாடன், வாச்சியன் தாயன் ரூப சோமாசியார், சாட்டியன் துருத்தி தாயன் என்பன போன்ற பிராமணச் சமூகப் பெயர்கள் சபையோர்கள் வரிசையில் காணப்படுகின்றன.

கல்வெட்டில் இறைவன் பெயர்

இக்கோயிலில் குடிகொண்டுள்ள இறையனார் புள்ளமங்கலத்து திருவாலந்துறை மகாதேவர் என்று இங்குள்ள அனைத்துக் கல்வெட்டுக்களிலும் குறிக்கப்படுகிறார். இக்கோயிலில் காமக்கோட்டம் பண்டு அமைக்கப்பட வில்லை. காளாபிடாரி என்னும் பெண்தெய்வம் திருமணிமண்டபத்தில் எழுந்தருளியிருப்பதாகக் கல்வெட்டுச் செய்திக் குறிப்பிடுகின்றது.

கல்வெட்டு குறிப்பிடும் வரிப்பெயர்கள்

புன்பயிற்கடமை, படுகைகுறைக் கடமை, தறிஇறை, செக்கிறை, தட்டொளி, தட்டாரப்பாட்டம், ஆயவற்கம், சாரடை, குளவடை, பாசிப்பாட்டம் முதலிய வரிகள் புள்ளமங்கலம் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகின்றன.[40] இவற்றில் இறை என்பது முதலாம் இராசராசன் கல்வெட்டில் குறிக்கப் பட்டுள்ளது. கடமை என்பது புள்ளமங்கலம் கல்வெட்டில் இல்லை. முதலாம் இராசராசனின் பதினைந்தாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு ஒன்று 'இறைக்கட்டின காணிக்கடன்'

என்ற வாசகத்தைக் குறிப்பிடுகின்றது. தொண்டைநாடு, பாண்டிய நாடு ஆகியவற்றில் அதுவரையில் இறைக்கட்டின காணிக்கடனை வசூல் செய்யவேண்டும் என்று அக்கல்வெட்டு கூறுகின்றது. இறைக்கட்டின என்பது வரியாக செலுத்தவேண்டிய என்று பொருள்படும். காணிக்கடன் என்பது உழுவதற்கான உரிமைக்குச் செலுத்திய வரி என்று பொருள்.[41]

தறி இறை என்பது தறிகளை வைத்துக்கொண்டு நெசவுத் தொழில் செய்பவர் செலுத்தும் வரியாகும்.[42] பொன்வேலை செய்வோர் செலுத்திய வரி தட்டார் பாட்டம் என்பதாகும்.[43] பாசிப்பாட்டம் வரி எனப்படுவது ஏரியில் படிந்திருக்கும் பாசியையும், வண்டல் மண்ணையும் எடுத்துக்கொள்வதற்குச் செலுத்தப்படுவதாகும்.[44] ஆற்றங்கரை மேல் உள்ள நிலத்தின் பெயரில் வாங்கும் வரியானது படுகைக்குறைக் கடமையாகும்.[45] இது பெரும்பாலும் அதிக அளவு வரியாக இருக்கலாம். தட்டொளி என்பதற்கு பொருள் விளங்கவில்லை.

கங்கமன்னனின் கொடைக் கல்வெட்டு

புள்ளமங்கை கோயிலின் கருவறை தென்புறச் சுவரில் உள்ள பராந்தகனின் 6-ஆம் ஆட்சியாண்டு (கி.பி.913) கல்வெட்டு ஒன்று செம்பியன் மாவலி வாணராயன் என்பவன் ஸ்ரீகண்டமங்கலத்தில் நிலம் விலைக்கு வாங்கி சந்திப்புறமாகக் இக்கோயிலுக்குக் கொடையளித்தான் என்று கூறுகிறது.[46] இவன் யாரெனில் கங்கமன்னன் இரண்டாம் பிருதிவிபதி என்பவனாவான். இவன் வல்லம் போரில் பராந்தகனுக்கு துணை நின்று வாணகப்பாடி நாட்டை வெல்ல உதவி புரிந்தவன். பராந்தகன் இவனது வெற்றிச் சிறப்பைப் பாராட்டி 'செம்பியன் மாவலி வாணராயன்' என்று பட்டம் கொடுத்துச் சிறப்பித்ததோடு வாணகப்பாடி நாட்டையும் கொடுத்தான் என உதயேந்திரச் செப்பேடுகள் கூறுகின்றன. அம்மன்னனே தன் வெற்றியின் நினைவாக பராந்தகனின் புள்ளமங்கைக் கோயிலுக்கு நிலம் கொடையளித்துள்ளான்.

இசைக்கலைஞர்களுக்கு நிலக்கொடை

கி.பி. 933-இல் பராந்தகனின் 31-வது ஆட்சியாண்டில் புள்ளமங்கை ஆலந்துறை மகாதேவர் கோயிலில் திமிலை என்னும் வாத்தியக் கருவி இசைக்கும் இசைக் கலைஞர்களுக்கு இவ்வூர் சபையார் ஸ்ரீகண்டமங்கலத்து கிழார் என்னுமிடத்தில் உள்ள நிலத்தினைக் கொடையாக அளித்த செய்தியை இக்கோயில் அர்த்தமண்டபத் தென்புறக் குமுதத்தில் உள்ள கல்வெட்டொன்று கூறுகிறது.[47]

குடிநீக்கிய தேவதானம்

கி.பி. 925-இல் பராந்தகனது 18-ஆம் ஆட்சியாண்டில் கிழார்க்கூற்றத்து புள்ளமங்கலத்து இறைவன் திருவாலந்துறை மகாதேவர்க்குக் குடிநீக்கிய தேவதானமாக ஐந்தேகாலே அரைமா அரைக்காணி நிலம் வழங்கி, அதன் மூலம் ஐந்நூற்றுக் கலநெல்லும், ஐங்கழஞ்சு பொன்னும் ஆண்டொன்றுக்குக் கோயிலுக்கு வருமானம் வர வகைசெய்யப்பட்டச் செய்தியை அர்த்தமண்டபத் தென்புறச் சுவர் கல்வெட்டு தெரிவிக்கின்றது. குடிநீக்கிய தேவதானமாவது கொடுக்கப்பட்ட தேவதானத்தில் ஏற்கெனவே உள்ள குடிகளின் உரிமையை நீக்கி புதிய உரிமையாக வழங்குவது அல்லது அந்த குடிகளின் உரிமையை நீக்கி புதிய குடிகளுக்கு உரிமையாக வழங்குவது என்ற பொருள்படும்.

மகாசபை கூடும் நாளும் முறையும்

இவாட்டை மகரநாயற்று திங்கட்கிழமை பெற்ற பூசத்தின் ஞான்று இச்சபை கூடியது. மேலும் மற்றொரு கல்வெட்டில் சந்திரகிரஹணத்தன்று அதாவது இவாட்டை விருஷப நாயற்று திங்கட்கிழமை மூலத்தினான்று ஸோம கிரஹணம் பற்றியபோது இவ்வூர் ஆலந்துறை பரமேஸ்வரர் கோயிலின் முன் இப்புள்ளமங்கலத்து மஹாஸபை கூடியிருந்தது எனத் தெரிகிறது. ஊர்க்கூட்டம் தட்டழி கொட்டி, காளம் ஊதி அனைவர்க்கும் அறிவிக்கப்பட்டது. கோயில் நிர்வாகிகள் திருக்கோயிலுடையார்கள் எனக் குறிக்கப்படுகிறார்கள். ஜாதி சாமந்தர், தனிகர் முன்னிலையில் மகாசபை கூடும் போது நிலங்கள் விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டன.[48]

அடிக்குறிப்புகள்

1. ஸ்ரீதர், தி. ஸ்ரீ., பாபநாசம் வட்டக்கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதி, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சென்னை
2. பூங்குன்றன், ஆர். "தொல்குடி வேளிர் அரசியல்"
3. ஸ்ரீதர், தி.ஸ்ரீ., மு.கு.நூ. கல்வெட்டு எண்கள் 17-29/1995
4. மேலது. எண் 16, 17, 26
5. Jha, D.N. Temples as Landed Magnetas in Indian society Historical Probings
6. Ibid.
7. பன்னிரு திருமுறை தேவாரப் பதிகம்
8. ஸ்ரீதர், தி.ஸ்ரீ., மு.கு.நூ. கல்வெட்டு எண் 15/1995
9. ஸ்ரீதர், தி.ஸ்ரீ., மு.கு.நூ. கல்வெட்டு எண் 17/1995
10. மேலது. எண். 16/1995
11. மேலது. எண். 17/1995
12. மேலது. எண். 20/1995
13. பல்லவர் செப்பேடுகள் முப்பது. பக். 205-216, 237-245
14. புறநானூறு
15. ஸ்ரீதர், தி.ஸ்ரீ., தமிழக முதல்வர் உரை, இதோ செப்பேடுகள் உரைத்திடும் உறுதி, த.நா.அ.தொ.துறை வெளியீடு, 2010
16. ஸ்ரீதர், தி.ஸ்ரீ., மு.கு.நூ. கல்வெட்டு எண் 20/1995
17. மேலது. எண் மேலது.
18. மேலது. எண் 18/1995
19. Burton Stien, Peasant state and society medieval South India, pp.156-159
20. பார்க்க. இவ்வாய்வேட்டின் தேவாரப் புள்ளமங்கை
21. ஸ்ரீதர், தி.ஸ்ரீ., மு.கு.நூ. கல்வெட்டு எண் 20,23/1995
22. மேலது. எண் 25/1995
23. Vaiyapuri Pillai, S. History of Tamil Language and Literature
24. சதாசிவ பண்டாரத்தார், தி.வை., "பிற்காலச் சோழர் வரலாறு"
25. ஸ்ரீதர், தி.ஸ்ரீ., மு.கு.நூ. கல்வெட்டு எண் 24/1995
26. அசோகன் சந்திர கிரஹணத்தன்று கொடையளித்ததைக் கொண்டு அவன் ஆட்சியாண்டைக் கணக்கிட்டுள்ளனர்.
27. S.I.I. Vol. XXVI, No.
28. Tamil Lexicon, Vol. I, p.95

29. S.I.I. Vol. XXVI, No.
30. ஸ்ரீதர், தி.ஸ்ரீ. மு.கு.நூ. கல்வெட்டு எண் 24/1995
31. Tamil Lexicon, Vol. I, p.95
32. Ibid.
33. ஸ்ரீதர், தி.ஸ்ரீ. மு.கு.நூ. கல்வெட்டு எண் 24/1995
34. Tamil Lexicon, Vol. I, p.774
35. கல்வெட்டுச் சொல்லகராதி தொகுதி 1
36. ஸ்ரீதர், தி.ஸ்ரீ. மு.கு.நூ. கல்வெட்டு எண் 26/1995
37. மேலது. எண் 25/1995
38. Subbarayalu, Y. The Political Geography of Chola Country, p.p. 56-57
39. Ibid. p.p. 59-61

முடிவுரை

புள்ளமங்கை திருக்கோயில் ஆய்வு ஒரு முழுமையான சோழர் கால வரலாற்று ஆய்வாகத் தொடர்கிறது. பராந்தகனின் இக்கற்றளி பிரமதேயத்தில் கட்டப்பட்ட கலைப்படைப்பாகும். இக்கோயிலில் உள்ள பராந்தகனின் 3-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டே இதன் காலத்தைக் கணிக்க உதவுகிறது. மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டே இக்கோயிலில் கிடைக்கும் இறுதிக் கல்வெட்டாகும். கி.பி. 12-ஆம் நூற்றாண்டிற்குப் பின் அதாவது முதலாம் இராஜேந்திரன் தலைநகரை தஞ்சையிலிருந்து கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாற்றிய பிறகு இங்குள்ள பிரமதேயங்கள் சிறிது சிறிதாக வழக்கொழிந்துள்ளன. இக்கருத்தினை பிரமதேயங்கள் பற்றி ஆய்வு செய்த பர்ட்டன் ஸ்டீன் அவர்களும் உறுதிப்படுத்துகின்றார்.

அவ்வாறு வழக்கொழிந்த பிரமதேயங்களுள் ஒன்றே புள்ளமங்கையாகும். மேலும் புள்ளமங்கை மகாசபையாகவும் விளங்கியுள்ளது இங்குள்ள கல்வெட்டுகள் மூலம் தெரியவருகின்றது. 27 ஊர்ச்சபைகளை உள்ளடக்கிய உத்தரமேரூர் மகாசபையும் கி.பி. 12-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு வழக்கொழிந்த நிலையும் இங்கு ஒப்புநோக்கத் தக்கதே. அங்ஙனம் புள்ளமங்கை பிரமதேய மகாசபையும் தன் நிலையை இழந்ததால் அதன்பின் இக்கோயிலின் நிவந்தங்கள் ஏதும் கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட வில்லை. மேலும் சோழமன்னர்களிலும் கடைசியாக மூன்றாம் குலோத்துங்கனுக்குப் பிறகு வேறெந்த அரசர்களின் தானக் கொடைகளையும் இக்கோயில் பெற்றதற்கு வரலாற்றுச் சான்றுகள் இல்லை.

சோழப்பேரரசின் முடிவிற்குப்பின்னும் கூட அன்னார் நிறுவிய பல கோயில்களில் சோழமண்டலத்திலும், தொண்டை மண்டலத்திலும் திருப்பணிகள் பிற்காலப் பாண்டிய அரசர்களாலும், விசயநகரம் மற்றும் நாயக்க மன்னர்களாலும் செய்யப்பட்டுள்ளன. அப்பணிகளைப் பற்றியும், அவற்றிற்கான கொடைகளைப் பற்றியும் கல்வெட்டில் குறித்தும் வைத்துள்ளனர். அத்தகைய எந்தவொரு பிற்கால கலைப் பணியும் இப்புள்ளமங்கை திருக்கோயிலில் இடம்பெறவில்லை.

இக்கோயிலின் விமானத்தில் உள்ள சிற்பங்களையும், அதிட்டானத்தில் உள்ள இராமாயணக் காட்சிச் சிற்பங்களையும், தூண் மற்றும் போதிகையில் இடம்பெற்றுள்ள நாட்டிய மங்கையரின் சிற்பங்களையும் நோக்குங்கால் இக்கோயில் பராந்தகனின் நேரடிப் பார்வையில் எழுப்பப்பெற்ற கற்றளி எனக்கருத இடமுண்டு. புள்ள மங்கலத்துக் கோயிலுக்கும் கொடுக்கப்பட்ட நிலக்கொடைகள் மன்னர்களாலும், சமூகத்தில் உயர்ந்த பணியிலிருந்தோரால் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளதால் இக்கோயில் அரசனின் உயர்வான கோயில் என எண்ணத்தோன்றுகிறது.

இக்கோயிலின் அதிட்டான வேதிகையில் உள்ள இராமாயணச் சிற்பங்கள் கம்பஇராமாயணப் பாடல் வரிகளோடு ஒப்பிட்டு நோக்கத் தகுந்தவையாக உள்ளன. எனவே பராந்தகனின் காலத்திலோ அல்லது அதற்கு சற்று முன்னதாக ஆதித்தன் காலத்திலோ கம்ப இராமாயணம் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் கம்ப இராமாயணத்தில் சோழநிலப்பரப்பினை சொல்லும் போது ஒரு தெளிவு இல்லை. அது முற்காலச் சோழர்காலத்தில் வரையறுக்கப்படாத ஒன்றாதலால் அவரால் தெளிவுபட கூறவியலவில்லை தமிழில் தோன்றிய மாபெரும் இலக்கியமான இக்காவியத்தின் பாடல்களை சிற்பமாக்க முற்காலச் சோழர் நினைத்தனர் என்றால் அது மிகையில்லை.

மேலும் இவ்வூரில் உள்ள பசுபதிநாதர் கோயிலும் பராந்தகனின் காலத்தைச் சேர்ந்ததே. அல்லூர்,

திண்ணக்கோணம் முதலிய ஊர்களில் பராந்தகன் அமைத்த கற்றளிகளோடு அக்கோயில்களுக்கு சற்றுத் தள்ளி பசுபதிநாதர் கோயிலும் எடுப்பித்துள்ளான். சைவ சித்தாந்தத்தின் தொடக்கம் என்பது பராந்தகன் காலம் என்று கூறுவதற்கு இது சான்றாக உள்ளது. சைவசித்தாந்தம் பசு, பதி, பாசம் என்று உயிர், இறைவன், உலகம் என்ற மூன்றையும் குறிப்பிடுகிறது. இவற்றுள் பசுவாகிய ஆன்மாவிற்கும், பதியாகிய இறைவனுக்கும் உள்ள தொடர்பை அறிவிக்கும் பொருட்டு இறைவனை பசுபதி என்பர் சைவசித்தாந்திகள். அவ்வாறே பராந்தகன் எடுப்பித்த கோயில்கள் பசுபதி கோயில் என்றே அழைக்கப்படுகிறது. அங்குள்ள இறைவன் பசுபதீஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார். ஏற்கெனவே உள்ளூர்த் தெய்வமாக வழிபாட்டில் இருக்கும் கோயில்கள் அதாவது தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் தவிர இந்த புதுமையான சைவ சித்தாந்தத்தை விளக்கும் படியான பசுபதிநாதர் கோயில்களும் பராந்தகன் காலத்தில் அந்தந்த ஊர்களிலேயே தனியாகக் எடுப்பிக்கப்பட்டுள்ளது தெரிகிறது.

இப்புள்ளமங்கைக் கோயிலானது கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ஆலந்துறை மகாதேவர் கோயிலாக திருஞானசம்பந்தரால் தேவாரப் பாடல் பெறுகிறது. அதற்கு முன்னர் இவ்வூர்த் தெய்வமாக காளாபிடாரி என்னும் தாய்த்தெய்வமே வழிபடப்பெற்றுள்ளது தெரிகிறது. மேலும் பராந்தகனால் எடுப்பிக்கப்பட்ட இப்புள்ளமங்கலத்து கோயில் முழுக்க மகாதேவருக்கான கற்றளியாகும். இங்கு விஷ்ணு சிற்பங்கள் தான் அதிகமாக உள்ளன என்று இக்கோயிலை ஆய்வு செய்த பிரெஞ்சு அம்மணி சார்லெட் ஸ்மித் என்பவரின் கூற்றும் மறுஆய்விற்குரியதே. இராமாயணக்காதையின் தலைவன் இராமனின் சிற்பங்களின் எண்ணிக்கையால் இக்கூற்று விழைந்திருக்கலாம்.

பிற்சேர்க்கை

பசுபதிநாதர் கோயில் - ஒரு பார்வை

புள்ளமங்கலம் பிரம்மபுரீஸ்வரர் கோயிலுக்கு தென்புறம் வயல்சூழ்ந்த பகுதியின் நடுவே பசுபதிநாதர் கோயில் உள்ளது. புணரமைக்கப்பட்ட கோயிலாக இது காட்சியளிக்கிறது.

கோயில் கட்டட அமைப்பு

மூன்று நிலை கோபுரம் ஒன்று கிழக்கு நோக்கியுள்ளது. பாதங்களுடன் உப பீடத்துடன், அரைத்தூண்களைப் பெற்ற சுவர்ப்பகுதியைப் பெற்று விளங்கும் இக்கோபுரத்தில் கோபுரந்தாங்கிகள், கிரீவத்தில் நந்தி, கணங்கள் தவிர பிற சிற்பங்கள் ஏதுமில்லை. இக்கோபுரத்தின் மேல்நிலையானது தற்காலத்தில் கட்டப்பட்டதாகும்.

நீண்ட பிரகாரத்தின் நடையைக் கடந்து படிகளைக் கொண்ட கருவறையை அடையலாம். திராவிடப் பாணியில் ஒரு தளவிமானத்தைக் கொண்டுள்ளது. இக்கருவறையின் கட்டட அமைப்பானது, அதிட்டானத்தில் கோட்டப் பகுதியில் பத்மஜகதி, விருத்தகுமுதமாகவும், தொடரும் அகாரை, பஞ்சரப்பகுதியில் சாதாரண ஜகதியாகவும் அதாவது உபானமாகவும், அதனைத் தொடர்ந்து முப்பட்டைக் குமுதமாகவும் மூன்று புறமும் செல்கிறது. குமுதத்தினைத் தொடர்ந்து இருகம்புகளுக்கிடையே உள்ள கண்டபகுதி பாதம் பெற்று விளங்குகிறது. அடுத்து பட்டிகை, கம்புடன் கூடிய வேதிகை, கம்புகளுக்கிடையேயான பத்மவரி எனச் செல்கிறது. சுவர்ப்பகுதியில் அரைத்தூண்கள் முனைப்பகுதியில் தரங்கப் போதிகைப் பெற்றும், கோட்டப்பகுதியில் வெட்டுப்போதிகைப் பெற்றும் உத்தரத்தோடு இணைகின்றன.

அரைத்தூண்கள் சதுரம், இடைக்கட்டு, பத்மகட்டு, மாலாஸ்தானம், கலசம், காடி, பத்மம், வீரகண்டம், பலகை என்ற உறுப்புகளைப் பெற்று போதிகையோடு காட்டப்பட்டுள்ளன. அரைத்தூண்களுக்கிடையிலான கோட்டங்கள் யாவும் வெற்றுக் கோட்டங்களாகவே காட்சியளிக்கின்றன. தேவகோட்டத்தின் உரிய சிற்பங்களுக்குரிய துணைச் சிற்பங்கள் மட்டுமே காட்டப்பட்டுள்ளன. கோட்டங்கள் மகரத் தோரணங்களைப் பெற்றுள்ளன.

மேற்கூரைப் பகுதியில் வலபியும், தொடரும் பூதவரியும், கூடுகளுடன் கூடிய கபோதமும், அதற்கு மேலே யாளிவரிசையும் காட்டப்பட்டுள்ளன. கபோதக் கூடுகள் வெற்றாகவே உள்ளன.

விமானம் திராவிடப்பாணியில் உள்ளது. இரண்டு தளங்களைக் கொண்டுள்ளது. சுதையாலான சிற்பங்களாக வடக்கில் பிரம்மனும், வாணியும், கிழக்கில் சிவனும், தெற்கில் தட்சிணாமூர்த்தியும், மேற்கில் விஷ்ணு லெட்சுமியுடன் பிற்கால அமைப்பாக உள்ளனர். கர்ணக்கூடு, அகாரை, சாலைப்பகுதி என தள உறுப்புகள் அமைந்துள்ளன. கர்ணக் கூட்டினை தாங்குவதாக இருபுறமும் ஆண், பெண் உருவங்கள் உள்ளன. கிரீவக் கோட்டத்தில் வடக்கில் நான்முகன், கிழக்கில் சிவன், தெற்கில் தட்சிணாமூர்த்தி, மேற்கில் விஷ்ணு அமைக்கப்பட்டுள்ளனர். கிரீவத்தில் இரண்டிரண்டாக எட்டு நந்திகளாக உள்ளன. இவையாவும் சுதைச் சிற்பங்களாகும். யாவும் வண்ணந்தீட்டப்பட்டுள்ளன. உலோகத்தாலான கலசம் உச்சியில் காணப்படுகிறது.

கருவறை சதுரவடிவில் உள்ளது. பூதவரிச் சிற்பங்களுடன் உள்ள கூரைப்பகுதியும், அரைத்தூண்களுடன் அமைந்த நுழைவாயிலைப் பெற்றுள்ள இக்கருவறையின் முன்னே அந்தராளம் உள்ளது. கருவறையில் நடுவில் ஆவுடையாருடன் கூடிய இலிங்கம் உள்ளது. இலிங்கம் அளவில் பெரியதாக உள்ளது.

அர்த்தமண்டபமும் அரைத்தூண்களுடன் கூடிய நுழைவாயிலின் மேலே பூதவரிச் சிற்பங்களைப் பெற்றுள்ளது. இம்மண்டபத்தின் உள்ளே தென்புறச் சுவரில் சோழர்கால தமிழ்க் கல்வெட்டொன்று காணப்படுகிறது.

இறைவன் சந்நிதியின் அருகில் அம்மன் கருவறையும் உள்ளது. அம்மன் சந்நிதியின் விமான அமைப்பும் சுவாமி சன்னிதியைப் போன்றே வெற்றுக் கோட்டங்களையும், புணரமைக்கப்பட்ட நிலையையும் பெற்று விளங்குகிறது.

இக்கோயிலின் திருச்சுற்று அதிக பரப்பிளவினைக் கொண்டு விளங்குகிறது. புள்ளமங்கைச் சுற்றியுள்ள மற்ற ஆறு மங்கை என முடியும் தலங்களில் இது பசுமங்கை எனப்படுகிறது. பசு ஒன்று சிவலிங்கத்தின் மேல் பால் சொரிவதே இதன் தல வரலாற்றைக் கூறும். முனிவர் ஒருவர் அருகிலிருந்து இக்காட்சியைக் கண்டவாறே வணங்குகிறார்.

பராந்தகன் காலத்தில் இக்கோயிற்பணி தொடங்கப்பட்டு பாதியில் நின்றிருக்கிறது என கருத வேண்டியுள்ளது.

சிற்பங்கள்

மண்டப வெளிச் சுவர்களில் சிறு சிறு புடைப்புச் சிற்பங்கள் காட்டப்பட்டுள்ளன. பசுபதீஸ்வரர், கண்ணப்பர், அடியவர்கள், நாட்டிய மகளிர், ஊர்த்துவ தாண்டவமாடும் பெண், இசைக்கலைஞர்கள், சிவலிங்கத்தின் மேல் பால்சொரியும் பசு, ஒற்றைக்காலில் தவம் செய்யும் அடியவர், நீண்ட சடைமுடி கொண்ட அடியவர் முதலியன குறிப்பிடத்தகுந்தவையாகும்.

மேலும் கண்ணப்பர் சிவனை வழிபடல், யானை சிவபூசை செய்தல், மகரத் தோரணத்தில் காட்டுவது போன்ற வளைவில் காலசம்ஹாரமூர்த்தி, உமாமகேசுவரர், முதலிய சிற்பங்கள் கோட்டங்களில் இடம்பெறுவதற்காக வடிக்கப்பட்டவைகளாகத் தெரிகின்றன.

பசுபதி நாதர் கோயிலில் உச்சிஷ்ட கணபதி சிற்பம் ஒன்று உள்ளது. பெரிய அளவில் உள்ள இந்த கணபதி சிற்பம்

இடது தொடையில் பெண் தெய்வத்தை அமர வைத்துள்ளது. கரண்டமகுடராய், லலிதாசனத்தில் அமர்ந்துள்ள கணபதி நான்கு கைகளில் அங்குசம், பாசம், கீழ்க்கைகளில் தந்தம், மலர் ஆகியவற்றை வைத்துள்ளார். கழுத்தில் சரப்பளி உள்ளது. வயிற்றில் உதரபந்தம், மார்பில் பூணூல் உள்ளன. கரண்டமகுடம், நீண்டபட்டாடை அணிந்துள்ள கணபதியின் மடியில் உள்ள பெண்தெய்வம் கைகளில் மலரைப் பிடித்துள்ளார். கணபதியின் காலுக்கு அடியில் எலி வாகனமும், அடியவர் ஒருவர் வணங்கிய நிலையிலும் காட்டப்பட்டுள்ளனர்.

தென்மேற்கு மூலையில் ஜேஷ்டாதேவியின் புடைப்புச் சிற்பம் காணப்படுகிறது. பீடத்தின் மேல் கால்களை அகட்டி, அமர்நிலையில் உள்ள இம்மூத்ததேவியின் இருபுறமும் மாந்தன், மாந்தி உள்ளனர். கரண்டமகுடம், காதுகளில் வளையம், கழுத்தில் அட்டிகை, கணுக்கால் வரை நீண்ட பட்டாடை முதலியன அணிந்துள்ளார். இடது கையை பீடத்தில் ஊன்றி, வலது கையை அபய முத்திரையாக வைத்துள்ளார்.

கோபுரத்தின் உட்புற மேல் விதானத்தில் உள்ள இரண்டு பாம்பு உருவங்கள் சந்திரனை விழுங்குவது போன்ற சிற்பங்களும், கபோதத்தில் குரங்கு சிற்றுருவமும் காட்டப்பட்டுள்ளன.

துணை நூற்பட்டியல்

I. *கல்வெட்டுகள், செப்பேடுகள் - தமிழ்*

1. இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை எண். 555, 556, 558, 559
2. ஸ்ரீதர், தி.ஸ்ரீ. "பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள்", தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2004
3. ஸ்ரீதர், தி.ஸ்ரீ. "தமிழ்நாடு கல்வெட்டுகள் முதல் தொகுதி", த.நா.அ.தொ.து, சென்னை, 2005
4. ஸ்ரீதர், தி.ஸ்ரீ. "தமிழ்நாடு கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதி", த.நா.அ.தொ.து, சென்னை, 2007
5. ஸ்ரீதர், தி.ஸ்ரீ. "தமிழ்நாடு கல்வெட்டுகள் மூன்றாம் தொகுதி", த.நா.அ.தொ.து, சென்னை, 2009
6. "பல்லவர் செப்பேடுகள் முப்பது", தமிழ் வரலாற்றுக்கழகம், சென்னை, 1966

II. *கல்வெட்டுகள், செப்பேடுகள் - ஆங்கிலம்*

1. Nagasamy, R. Tirutani Velancheri Copper Plates, Dept. of Archaeology, Govt. of Tamilnadu, Chennai, 1980
2. S.I.I. Vol. II, III

III. *ஆய்வுநூல்கள் - தமிழ்*

1. கைலாசபதி, க. பண்டையத் தமிழர் வாழ்வும் வழிபாடும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, 1999
2. நீலகண்ட சாஸ்திரி, கே.ஏ. சோழர்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பி லிட்...சென்னை, 2009
3. சதாசிவ பண்டாரத்தார், தி.வை. பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,2008

4. கரோஷிமா, நொபொரு. வரலாற்றுப்போக்கில் தென்னகச் சமூகம், தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், 1995

5. கல்பனா, பூ. மேல்பாடி, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2009

6. சந்திரமூர்த்தி, மா. தமிழ்நாட்டுச் சிவாலயங்கள், தொகுதி-2, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004

7. பாலசுப்ரமணியம், குடவாயில். தஞ்சாவூர், திருவாவடுதுறை ஆதினம், திருவாவடுதுறை, 1995

8. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், தமிழ்நாடு அரசு வெளியீடு, 1978

9. ழுவோ துப்ருயல், திராவிடர்க் கட்டடக்கலை மரபு, ரிஷபம் பதிப்பகம், சென்னை, 1999

10. நாகசாமி, இரா. சந்திரமூர்த்தி, மா. தமிழகக் கோயிற்கலைகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2010

IV. *ஆய்வுநூல்கள் - ஆங்கிலம்*

1. Burton stien, Peasant State and Society in Medieval South India, Oxford University Press, Delhi,1980
2. Sundaram, J., Land System in Tamilnadu, Kalaprakasam, New Delhi, 2009
3. Jha, D.N. Indian Society Historical Probings, People Publishing House, New Delhi, 1974
4. Subbarayalu, Y., Political Geography of Chola Country, Dept. 1973
5. Hermann kulke, The State A.D.1000-1750, Oxford University Press, Delhi, 1987
6. Swaminathan, S., The Early Cholas, History, Art and Culture, Sharada Publishing House, Delhi, 1998.

V. *ஆய்வேடு - தமிழ்*

1. தேவி, கோ. புள்ளமங்கை அதிட்டானச் சிற்பங்கள் ஓர் ஆய்வு, தமிழ் பல்கலைக்கழகம், 2008

VI. *ஆய்வேடு - பிரெஞ்சு*

1. Charlotte Schmid, Au seuil du monde divin : reflets et passages du dieu d' Alanturai a Pullamankai, French University, Pondichery.

VII. *இலக்கியம்*

1. பன்னிருதிருமுறை, வர்த்தமானர் பதிப்பகம், சென்னை. 2009
2. சுப்ரமணியன், ச.வே. கம்பஇராமாயணம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2008
3. சங்க இலக்கியம், புறநானூறு

VIII. *அகராதி*

1. தமிழ்ப் பேரகராதி, சென்னைப் பல்கலைக்கழகம் வெளியீடு, 1985
2. ஜெயதேவன், வ. அணிகலன்கள் அகராதி, சென்னைப்பல்கலைக் கழகம் வெளியீடு, 2007

நிழற்படங்கள்



இலிங்கோத்பவர்



பிரம்மன்



கணபதி
அர்த்தமண்டப தெற்குக் கோட்டம்



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை - 600 008

2012 - திருவள்ளுவர் ஆண்டு 2043